
கல்கி
SC.NO SHOT.NO TIME
AMARA THARA
KALKI
ஜூலை 24, 1955
4 அணா

மலர் 14
இதழ் 52

கல்கி
பொருளடக்கம்

மன்மத ௵
ஆடி 8

1955 ஜூலை 24

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஜூலை 22 முதல்
கண்ணன் பிலிம்ஸ்
லட்சாதிபதி
நாகேஸ்வர ராவ்.....N.T.ராம ராவ்
சாவித்திரி..........பால சரஸ்வதி
குசலகுமாரி.............துரைசாமி
மற்றும் பலர்...
வசனம்-ஸ்ரீதர்
டைரக்ஷன்
T.பிரகாஷ ராவ்
Elegant



மலர் 14
இதழ் 52

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ௵
ஆடி 8

மற்றொரு விஞ்ஞான எச்சரிக்கை!

புகழ் பெற்ற ஐன்ஸ்டைனும் பிரிட்டிஷ் விஞ்ஞானி ரஸ்ஸலும், மற்றும் சில விஞ்ஞானிகளும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையைப் பற்றிச் சென்ற வாரம் நமது மகிழ்ச்சியை நேயர்களுடன் பகிர்ந்து கொண்டோம். இப்பொழுது மீண்டும் ஒரு அறிக்கை வெளியாகி யிருக்கிறது.

உலகத்திலேயே மிகச் சிறப்பும் புகழும் பெற்ற பௌதிக ரஸாயன அணு தத்துவ விஞ்ஞானிகள், நோபெல் பரிசு பெற்ற பதினெட்டு நிபுணர்கள், ஒரு கூட்டறிக்கை விடுத்திருக்கிறார்கள். மூலாதாரத்தையே தாக்கக் கூடிய அணுகுண்டு முதலிய ஆயுதங்களைப் பிரயோகித்து யுத்தங்கள் நடத்தினால், உலகமே நாசமாகி விடும். ஆகையால், இவற்றை முதலில் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதன் பிறகு சமாதான முறைகளை நாடுங்கள் என்று வல்லரசுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் "உலகத்தில் யுத்தம் என்பதையே நிறுத்தி விடுவதுதான் முறை: அணுகுண்டுகளை நாமாவது அமெரிக்கராவது விட்டுவிடுவது என்பது முடியாது" என்கிறார் பிரிட்டிஷ் முதல் மந்திரி.

இந்தப் பிடிவாதமானது பெரிய மதியீனமாகும் என்று விஞ்ஞான நிபுணர்கள் சொல்லி யிருக்கிறார்கள். ஆயுதங்களைப் பற்றி யோசிக்க வேண்டாம், யுத்தத்தையே நிறுத்தி விடலாம் என்று எண்ணுவதும் பேசுவதும் வெறும் மோகம் அல்லது மோசம். பிசாசு குண்டுகளுக்காகப் பயந்து, யுத்தம் செய்வதை எல்லாரும் நிறுத்தி விடுவார்கள் என்று நம்பிக் கொண்டிருப்பது மோசம் போவதற்கே வழி என்று விஞ்ஞானிகள் ஒரு முகமாகவும் தெளிவாகவும் விளக்கி யிருக்கிறார்கள்.

கோபம் தலைக்கு ஏறின சமயத்தில் உலகமோ நாசமோ நினைவில் இராது.

'படுகுழியில் விழுந்து நாசமாகாதீர்கள்' என்று விஞ்ஞானம் சொல்லுகிறது. "அப்படியில்லை; படுகுழியை மண் போட்டு மூடுங்கள்" என்று பேசுகிறார் பிரிட்டிஷ் பிரதம மந்திரி. அமெரிக்க அபிப்பிராயத்தைப் பின்பற்றியே இவ்வாறு சொல்லுகிறார்.

"பெரும் பள்ளத்தை மூடி மேடாக்குங்கள், இல்லாவிட்டால் நாங்கள் அதில் விழுந்தே தீருவோம்" என்று மூர்க்கத்தனம் செய்வதை நமது சித்திரக்காரர் படம் வரைந்திருக்கிறார். விஞ்ஞான தேவியின் வேண்டுகோளையும் காட்டி யிருக்கிறார்.

நேருஜியின் பிரார்த்தனைக்கு ஆண்டவனுடைய அருள் ஏற்பட்டு இந்தப் பேய்க் குண்டுகள் ஒழிய வேண்டும். பேய்க்குண்டுகள் ஒழிந்தால் யுத்தமும் வராது. உலக சாந்தியும் ஏற்படும். இந்தப் பிசாசுக் குண்டுகள் இருக்கும் மட்டும், யுத்தம் வராவிட்டாலும், உலகத்தில் நிம்மதி என்பது கிடையாது.

விஞ்ஞானிகளின் ஏகோபித்த எச்சரிக்கை வல்லரசுகளின் செவியில் ஏறுமா?

பி. ஸி. ஜி

அமெரிக்காவில் லக்ஷக் கணக்கில் குத்திக் கொண்ட ஸால்க் இன்ஜெக்ஷனை பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சி மன்றத்தார் தங்களுக்கு 'வேண்டாம்' என்று முடிவாகத் தள்ளி விட்டார்கள். இவ்வாறு சென்ற ஞாயிறன்று லண்டனிலிருந்து செய்தி வந்தது.

இந்த 'ஸால்க்' ஊசிக் குத்தைத்தான் சில நாட்களுக்கு முன்பு நம்முடைய இந்திய சர்க்காரில் ஆரோக்கிய மந்திரியாக இருக்கும் அம்ருத் குமாரி மிக்க குதூகலத்துடன் வரவேற்றார்; நன்றி செலுத்திப் பேசினார். படங்களும் வெளியாயின. இப்போது ஆங்கில ஆராய்ச்சி நிபுணர்கள் தள்ளிவிட்ட பிறகாவது நம்முடைய குழந்தைகளின் பேரில் இந்தப் பிசாசை ஏவ மாட்டார்கள் என்று நம்புகிறோம்!

பி. ஸி. ஜி யைப் பற்றி ஆங்கில வைத்திய மன்றத்தார் இன்னும் ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆராய்ச்சி முடிகிற வரையில் இங்கிலாந்தில் பி. ஸி. ஜி குத்துவதை விஸ்தரிப்பதில்லை என்று பிரிட்டிஷ் வைத்திய இலாகாவிலிருந்து சமீபத்தில் வந்த கடிதத்திலே தெரிய வருகிறது.

வெளி நாடுகளில் நிலைமை இப்படியிருக்கும் போது, நம்முடைய நாட்டுக் குழந்தைகளோ இதிலிருந்து தப்பவில்லை. நம்மவர்கள் பிடிவாதம் செய்து வருகிறார்கள்.

சட்டம் இல்லாமல், வற்புறுத்துதல் இல்லாமல் செய்யப்படுகிற காரியம் இது. 'எங்கள் குழந்தைகளுக்கு இந்த ஊசி வேண்டாம்' என்று சொல்லுகிற உரிமை மக்களுக்கு இருக்கிறது. இதைப் பெற்றோர்கள் அறிய வேண்டும். படித்தவர்கள் படிக்கத் தெரியாதவர்களுக் கெல்லாம் இதைச் சொல்ல வேண்டும்.

சமீபத்தில் ராஜாஜிக்கு இரண்டு கடிதங்கள் வந்தன. ஒன்று சர்க்கார் ஜில்லா உத்தியோகஸ்தர் ஒருவரிடமிருந்து — இந்த ராஜ்யத்தில் அல்ல — அவருடைய பதினொரு வயதுக் குழந்தை பள்ளிக்கூடத்தில் இருந்தவனைப் பிடித்து, வேண்டாம் என்று அழுது கொண்டு ஓடினவனை இழுத்து வந்து, பி. ஸி. ஜி ஊசி குத்தினார்கள். ஒரு வாரத்துக்குள் பையனுக்குக் கடுமையான ஜுரம் கண்டு அவன் இறந்தான். இது நடந்தது 1951-ம் ஆண்டில். தகப்பனார் இப்போது ராஜாஜிக்கு எழுதுகிறார்: "பையனுடைய தாயை இழந்தேன். பிறகு தாயில்லாக் குழந்தை, இடமாக இருந்தவனையும் இழந்தேன். இரண்டும் ஒரே வருஷத்துக்குள் நேர்ந்தது. நீங்கள் இந்த பி. ஸி. ஜி யை எதிர்ப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த பி. ஸி. ஜி ஊசிக்குத்து நம்முடைய நாட்டில் வேண்டவே வேண்டாம்!" என்று எழுதியிருக்கிறார்.

மற்றொரு கடிதம் டேராடூனிலிருந்து. விக்ஞானப் பிரகாசர் என்பவர் ராஜாஜிக்கு எழுதியிருக்கிறார்: "ஐயா, நான் ஒரு ஏழை. என் மகன் 13 வயது — ஐபேதவன் — எட்டாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தவனைச் சென்ற வருஷத்தில் பி. ஸி. ஜி குத்தினார்கள். அது வரையில் ஆரோக்கியமாக இருந்தவன் ஊசி குத்தினது முதற்கொண்டு பலவீனம் கண்டு நோயாளியாகி விட்டான். சுவாச வியாதியால் பீடிக்கப்பட்டு வருகிறான். அவனுடைய நிறை பன்னிரண்டு ராத்தல் குறைந்து போயிற்று. க்ஷயரோகம் என்றே தெரிய வருகிறது. பஞ்சாபின் தலைநகரம் சந்தீகடில் பெரிய டாக்டர் பார்த்தார். ஒன்றும் பயனில்லை. இப்போது டேராடூனில் மருந்து பார்த்துக் கொண்டு வருகிறோம். பி. ஸி. ஜி ஊசி குத்தியதால்தான் இப்படி ஆயிற்று என்று டேராடூன் வைத்தியரும் சொல்லுகிறார். தாங்கள் தான் எனக்கு உதவ வேண்டும். நான் மேலதிகாரிகளுக்கு எழுதினால் யாரும் கேட்பதில்லை. பணச் செலவில்லாமல் மருந்தாவது கொடுக்கச் செய்யுங்கள்!"

இவ்வாறு துக்கத்தோடு எழுதியிருக்கிறார். இந்தக் கடிதங்களைப் படித்தால் யார்தான் வருத்தம் அடைய மாட்டார்கள்!

பாகிஸ்தானைப் பாராட்டுகிறோம்

பாகிஸ்தான் சர்க்கார் ஒரு அருமையான நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். சிறந்த தலைவர் கான் அப்துல் கபார்கான் விஷயத்தில் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகாவது பாகிஸ்தான் சர்க்காருக்கு மனமாற்றம் ஏற்பட்டதையே குறிப்பிடுகிறோம்.

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதற்கொப்ப ஆறு ஆண்டுகள் வரையில் சிறைப்பட்டிருந்த கான் அப்துல் கபார்கானைப் பாகிஸ்தான் சர்க்கார் பொதுமக்களின் கிளர்ச்சியைச் சமாளிக்க முடியாமல் விடுதலை செய்தார்கள். எனினும், அவருக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளைப் பாகிஸ்தான் அதிகாரிகள் அறவே நீக்கவில்லை. கான் அப்துல் கபார்கான் பிறந்து வளர்ந்த எல்லைப்புற மாகாணத்தில் அவர் அடியெடுத்து வைக்கக் கூடாது என்று தடுத்திருந்தார்கள். இவ்விஷயமாக அடிக்கடி பொதுமக்களின் கண்டனம் எழுந்து கொண்டிருந்தது. எனினும் மக்களும் மாபெரும் தலைவரும் பொறுமை இழப்பதற்கு முன் பாகிஸ்தான் சர்க்கார் தங்கள் தவற்றைத் திருத்திக் கொண்டு விட்டார்கள். விதித்திருந்த தடைகளை ரத்துச் செய்து விட்டார்கள்.

பாகிஸ்தான் அதிகாரிகளுக்குத் தங்கள் நாட்டில் உள்ள எவரையும் கைது செய்து சிறைப்படுத்தவோ, அத்தகையோர் மீது தடை உத்தரவுகள் பிறப்பிக்கவோ பூரண உரிமை உண்டு. ஆனால், நாட்டின் விடுதலைக்காக அரும் பெரும் தியாகங்கள் புரிந்த சிறந்த தலைவர்களில் ஒருவரான கான் அப்துல் கபார்கான் பாகிஸ்தானில் துன்பப்பட நேர்ந்ததைக் குறித்து இந்திய மக்கள் வருந்தியது இயல்பே யாகும். எனவே, கான் அப்துல் கபார்கான் பாகிஸ்தானில் இழந்திருந்த சுதந்திரத்தை இப்பொழுது மீண்டும் பெற்று விட்டது குறித்து, சுதந்திர உரிமையிலும் ஜனநாயக தர்மத்திலும் ஆர்வம் கொண்ட சகலரும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பத்திரிகையாளருக்கு வரவேற்பு

“நமக்குத் தொழில் கவிதை!” என்றார் பாரதியார். சாதாரணமாகக் கவிதை என்பது அவ்வளவு சுலபமாகக் கை வந்துவிடக் கூடிய கலையில்லை. அருள் பெற்றவர்களே கவிதை பாடக் கூடும் என்று பெரியோர்கள் சொல்வார்கள். பாரதியாரோ அந்த அருட் பிரசாதத்தை — கவிதை புனைவதையே—தொழிலாகக் கருதினார். அதாவது உடல் உழைப்பினால் சம்பாதிப்பவனும் கவிதை புனைந்து வாழ்பவனும் ஒரே குலம். இவன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று சொல்வதற்கு இடமில்லை என்றார் பாரதியார். இதையேதான் மகாத்மா காந்தியடிகளும் சொல்லி வந்தார். இப்பொழுது எழுதுவதைத் தொழிலாகக் கொண்டுள்ள உழைக்கும் பத்திரிகையாளர்களே சொல்லி வருகிறார்கள். இந்தியாவிலுள்ள உழைக்கும் பத்திரிகையாளர்கள் எல்லாரும் சங்கமாகக் கூடித் தொழிற் சங்கமாக இயங்க அரசாங்கத்தினிடம் உரிமை கோரி வருகிறார்கள்.

இந்த அகில இந்திய உழைக்கும் பத்திரிகையாளரின் நான்காவது மகாநாடு சென்ற 17—7—55 அன்று சென்னையில் ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் சென்னைத் தலைவர் ஸ்ரீ எம். என். சுப்பிரமண்யம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். மகாநாட்டை நமது சென்னை ராஜ்யக் கல்வி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமண்யம் அவர்கள் திறந்து வைத்தார்.

■ பார்லிமெண்ட் மெம்பரும், பிரபல ஹிந்தி எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ஸ்ரீ பனார்ஸிதாஸ் சதுர்வேதி அவர்கள் தலைமை வகித்தார். இந்த மகாநாடு இரண்டு நாட்கள் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. முக்கியமான தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் இம் மகாநாட்டுக்குச் சுமார் நூறு பிரதிநிதிகள் வந்திருந்தார்கள்.

பதினெட்டாந் தேதி இரவு ‘கல்கி’ காரியாலயத்தில் வெளியூர்ப் பிரதிநிதிகளுக்கும், சென்னை பத்திரிகையாளர்களுக்கும் விருந்துபசாரம் நடைபெற்றது. விருந்துக்குப் பிறகு ‘கல்கி’ ஆசிரியர் திரு சோமு அவர்கள், பல பகுதிகளிலிருந்தும் பல பாஷைப் பத்திரிகைகளிலிருந்தும் வந்துள்ள பிரதிநிதிகளை வரவேற்று, “புணர்ச்சி பழகுதல் வேண்டா ;—உணர்ச்சி தான் நட்பாங் கிழமை தரும்” என்னும் திருவள்ளுவரின் குறளுக்கு ராஜாஜி அவர்கள் தமது புத்தகத்தில் செய்துள்ள அழகான ஆங்கில மொழி பெயர்ப்பை எடுத்துக் கூறி, அடிக்கடி சந்தித்துப் பழகா விட்டாலும் அவர்கள் அனைவரும் ஒரே உணர்ச்சி உள்ளவரானதால் நண்பர்களே என்பதை நினைவுறுத்தினார்.

வரவேற்புக்குப் பிறகு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் சிறிது நேரம் விருந்தினர்களுக்கு இன்னிசை விருந்தளித்தார். உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ பனார்ஸிதாஸ் சதுர்வேதி, “ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் பாடல்கள் என்னைப் பரவசப்படுத்தி விட்டன” என்று பாராட்டினார். ‘கல்கி’ மானேஜிங் டைரக்டர் சதாசிவம் அவர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

வட இந்திய யாத்திரை

பகீரதன்

ஜூலை 31-ந் தேதி ‘கல்கி’ இதழில் ஆரம்பமாகிறது

- ★ வியக்கத்தக்க ஜல மின்சார நிலையங்கள். உலகிலேயே மிகப் பெரிய நங்கல் கால்வாய். பாக்ரா நங்கல் அணை.
- ★ பஞ்சநதி தீரமான பஞ்சாபின் சிறப்புகள். அதன் புதிய தலைநகரம்-நவநாகரிக மோஸ்தரில் அமைந்து வரும் சண்டிகர் நகரம்.
- ★ உத்தர பிரதேசம், பஞ்சாப், பெப்சு, ஜம்மு-காஷ்மீரம் ஆகிய பிரதேசங்களில் இந்திய சர்க்கார் செய்துள்ள பெரும் சாதனைகள்.
- ★ பாகிஸ்தான் சேனையுடன் இமய மலையின் சிகரத்தில் இந்திய சைன்யம் போராடிய தீரமான சம்பவங்கள். யுத்த முனையின் அபாயகரமான சூழ்நிலை.
- ★ காஷ்மீரத்தின் எழில் மிக்க இயற்கை வனப்புகள். இமய மலையின் கற்பனைக்கெட்டாத கம்பீரமான காட்சிகள்.
- ★ சுதந்திரத் தலைநகரமான புது தில்லியைச் சுற்றியுள்ள புராதனமான சரித்திரகால நகரங்களின் சிறப்புகள்.
- ★ இன்னும் பல ரஸமான குறிப்புகள் நிறைந்த பிரயாண நிகழ்ச்சிகள் இந்தக் கட்டுரையில் வருகின்றன.

விஞ்ஞான தேவியின் வேண்டுகோள்




பிரபல நோபெல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள், அழிவுப் பாதையை நோக்கிச் செல்ல வேண்டாம் என்று வல்லரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

ஒப்புக் கொள்வார்களா?



ஜினிவாவில் நான்கு வல்லரசுகளின் மகாநாடு நடக்கிறது.

அபயம்



''யமனுக்கு எதிர்ப்பு இன்ஷ்யூரன்ஸ்''—ராஜாஜி பேச்சு.

என்ன சேதி?

நால்வர் மகாநாடும் உலகமக்களின் பிரார்த்தனையும்

இதற்கு முன் பல தடவைகளிலும் சர்வதேச மகா சபைகளும் மகாநாடுகளும் நடந்த ஜினிவா நகரில் இப்போது நால்வர் மகாநாடு நடந்து வருகிறது. உலகத்தின் விதி என்ன? மானிட வர்க்கத்தின் விதி என்ன? இவை போன்ற அதி முக்கியமான கேள்விகளை நால்வர் மகாநாடு ஆராயப் போகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜெனரல் ஐஸன்ஹோவர், ருஷ்யப் பிரதமர் மார்ஷல் புல்கானின், பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன், பிரஞ்சுப் பிரதமர் எட்கர் பாரே ஆகிய நால்வரும், மற்றும் அந்தந்த நாட்டு மந்திரிகளும் ஜினிவாவில் கூடி உலக சமாதானத்துக்கு வழி காண்பதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். உலகம் உய்வதா அல்லது அழிவதா என்ற மாபெரும் பிரச்னையைத் தீர்ப்பதற்காக நாலு வல்லரசுகளின் தலைவர்கள் கூடியுள்ள அந்த மகாநாட்டின் நடவடிக்கைகளை உலக மக்கள் அறிந்து கொள்ளும்படி செய்வதற்கு அங்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட பத்திரிகைப் பிரதிநிதிகள் சென்றிருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒவ்வொரு வல்லரசின் தலைவரும் உலக சமாதானம் ஏற்படும் விஷயமாகத் தாங்கள் பூரணமாய் ஒத்துழைக்கத் தீர்மானித்திருப்பதாகப் பிரகடனம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு காரணமாக அணுகுண்டு, ஜலஜ குண்டு என்ற பைசாச நாசக் கருவிகளும், யுத்த பீதியும் ஒழிந்து உலக அமைதி ஏற்படுவதற்கான வழி பிறக்க வேண்டுமென்று பல நாடுகளிலும் பிரார்த்தனைகள் நடந்து வருகின்றன. பாரத மக்களின் பிரார்த்தனையும் அதுவே.

மலாய் நாட்டிலே முதலாவது தேர்தல்


மலாய் நாட்டிலே ஜூலை மாதம் 27-ந் தேதி முதலாவது பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. மலாய் நாட்டின் சரித்திரத்திலேயே தேர்தல் ஒரு புதுமை எனலாம். அதாவது அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் மாத்திரமே அடங்கிய மலாயா சட்டசபை இன்னும் சில தினங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் அடங்கிய "பார்லிமெண்டாக" மாறி விடும். இரண்டாவது உலக மகா யுத்தத்திலும், அந்த யுத்தத்துக்குப் பிறகு பயங்கரமான அரசியல் சூறாவளியிலும் சிக்கிக் கொண்டு தவித்த மலாய் நாட்டில் இப்போது முதன் முதலாக ஜனநாயக மணம் வீசத் தொடங்கியிருப்பது வரவேற்கத் தக்கது.

இந்தமாறுதலால் அந்த நாட்டில் உள்ள இந்தியர்களுக்கு எவ்வளவு தூரம் பலன் கிடைக்கும் என்பது எதிர்காலத்தில் தான் தெரியும். அங்குள்ள ஜனத் தொகையில் சுமார் பத்து சதவிகிதமே இந்தியர்கள். சீனர்களும் மலாய்க்காரர்களுமாகத் தொண்ணூறு சதவிகிதம் இருக்கின்றனர். பத்து சதவிகிதம் உள்ள இந்தியர்களும் குறிப்பிட்ட இடங்களில் சேர்ந்து வசிக்கவில்லை. நாடெங்கும் சிதறிப் பரவலாக வசிக்கிறார்கள். எனவே, அரசியல் துறையில் முன்னேற்றம் அடைந்து வரும் மலாய் நாட்டில் உள்ள இந்தியர்கள் தங்களுக்குள் பேதமின்றி ஒற்றுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். பிற சமூகத்தினருடன் ஒத்துழைத்து மதிப்பையும் அன்பையும் பெற முயற்சிக்க வேண்டும். எந்த நாட்டிலும் தங்கள் பண்பாட்டின் பெருமையை நிலைநாட்டி விடக்கூடிய நமது சகோதரர்கள் இதை நினைவில் வைத்துக் கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அட்டைப்பட விளக்கம்

அமரதாரா

இந்துமதி திரையுலகில் சேர்ந்து நடித்தாள். அமரதாரா என்று பேரும் புகழும் சம்பாதித்தாள். கதாநாயகி இந்துமதி புகழின் உச்சியை எட்டிப் பிடிக்கும் இந்தக் கட்டத்தை வண்ண ஓவியத்தில் சித்திரித்திருக்கிறார் நமது ஓவியர் மணியம்.



இந்திய சர்க்கார் செய்தி ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் பி. வி. கேஸ்கர் 'கல்கி' காரியாலயத்துக்கு ஜூலை நாலாந் தேதி விஜயம் செய்தார். 'கல்கி' மானேஜிங் டைரக்டர் திரு சதாசிவம் அவர்களும், 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்களும் மந்திரி கேஸ்கர் அவர்களை வரவேற்றுக் 'கல்கி' அச்சகத்தைப் பார்வையிட அழைத்துச் சென்றனர். இந்திய நாட்டில் தமிழிலும், இதர பாஷைகளிலும் வெளியாகும் எல்லாப் பத்திரிகைகளையும்விட, 'கல்கி' பத்திரிகையே எண்பத்திரண்டாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகி, விநியோகத்தில் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது என்பதைக் கேட்டு மந்திரி அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்.

நல்லுறவை வளர்க்க வேண்டும்

சில தினங்களுக்கு முன் ஜம்மு எல்லையில் உள்ள நிக்கோவால் என்ற இடத்தில் பாகிஸ்தான் போலீசார் துப்பாக்கியால் சுட்டதன் விளைவாகப் பல இந்தியர்கள் உயிர் இழந்தனர். இதை விசாரித்த ஐக்கிய நாடுகள் சபைப் பார்வையாளர்கள், இந்த சம்பவத்துக்குப் பாகிஸ்தான் அதிகாரிகளே பொறுப்பாளிகள் என்று ஐயம் திரிபுக்கு இடமின்றி அறிவித்தார்கள். பாகிஸ்தான் போலீஸ் அதிகாரிகளின் அநீதியினால் ஏற்பட்ட உயிர்ச் சேதத்துக்கும் பொருட் சேதத்துக்கும் பாகிஸ்தானிடமிருந்து இந்திய சர்க்கார் நஷ்ட ஈடு கோரியிருந்தனர். நஷ்ட ஈடு கோரிப் பல நாட்களாகியும் பாகிஸ்தான் சர்க்காரிடமிருந்து இதுவரை யாதொரு பதிலும் கிடைக்கவில்லை. இந் நிலையில், நிக்கோவால் சம்பவத்தை ஆதரித்தும், பாகிஸ்தான் போலீஸார் சுட்டதற்கு நியாயம் இருக்கிறதென்று கூறியும் பாகிஸ்தான் பத்திரிகைகள் எழுதி வருகின்றன.

பாகிஸ்தான் பிரதமருக்கும் பாரதப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேருவுக்கும் சமரசப் பேச்சு நடக்க இருக்கும் சமயத்தில் சமரசப் பேச்சு திருப்திகரமாக நடைபெறுவதற்குற்ற சூழ்நிலை ஏற்படும்படி செய்ய வேண்டியதே பாகிஸ்தான் சர்க்காரின் கடமையாகும். இதைப் பாகிஸ்தான் சர்க்காரும் பத்திரிகைகளும் நன்கு உணர வேண்டும்.

நாகஸ்வர இசை விருந்து

நம் முன்னோர்கள் ஆலயங்களை அழகு மிக்க கலை நிலையங்களாக அமைத்து இறைவனை வழிபட்டனர். நம் தமிழ்ப் பண்பாட்டின் உறைவிடமான கோயில்களிலே வளர்ந்த அதி அற்புதமான கலை தான் நாகஸ்வரக் கலை.

தென்னாட்டின் தனிச் செல்வமான நாகஸ்வரத்தில் தேர்ந்த நாகஸ்வர வித்வான் குளிக்கரை கே. எஸ். பிச்சையப்பா அவர்கள் சேய் நாடான இலங்கைக்குச் சென்று யாழ்ப்பாண மக்களைத் தமது இசை வெள்ளத்தில் மூழ்கடித்தார். அவரது இசை விருந்தை அனுபவித்துப் பாராட்டி அவருக்கு ஒரு குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் அரசாங்க ஏஜண்டு திரு எம். ஸ்ரீகாந்தா குளிக்கரை திரு பிச்சையப்பாவின் சங்கீத சேவையைப் பாராட்டிப் பேசினார். அதோடு அவரது இசை விருந்துக்குப் பரிசாகத் தங்கப் பதக்கம் ஒன்றையும் வழங்கினர் என்று அறிந்து மகிழ்கிறோம்.

கட்டடத் திறப்பு விழா

○●○

சென்னை நகரின் அழகுக்கு அழகு தரும் விதத்தில் அமைந்திருக்கிற பம்பாய் மியூச்சுவல் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டியின் புதிய ஆறடுக்குக் கட்டடத்தை ஜூலை 17-ந் தேதியன்று மாலை சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா திறந்து வைத்தார். எழுபதாண்டுகளாக இன்ஷ்யூரன்ஸ் துறையில் அரிய சேவை செய்து வரும் மேற்படி கம்பெனியின் புதிய கட்டடத் திறப்பு விழாவுக்குப் பிரமுகர்களும், தொழில் அதிபர்களும் ஏராளமாக விழாப் பந்தலில் கூடியிருந்தார்கள்.

திறப்பு விழாவுக்கென்று சென்னை உயர் நீதி மன்றத்தின் காம்பவுண்டில் அமைக்கப்பட்டிருந்த விசேஷ அலங்காரப் பந்தலில் பம்பாய் மியூச்சுவலின் சேர்மென் யு. எஸ். தேசாய் வரவேற்புரை நிகழ்த்தினார். உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், ராஜாஜி, பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய், சென்னை முதல் அமைச்சர் காமராஜ் முதலியவர்களின் வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன.

வரவேற்பு உரையில் கம்பெனியின் ஆரம்பகால முதல் இன்று வரையில் உள்ள வளர்ச்சி விரிவாகக் கூறப்பட்டது. கவர்னர் தமது பிரசங்கத்தில் இன்ஷ்யூரன்ஸின் இன்றியமையாத தன்மையை விளக்கி, பம்பாய் மியூச்சுவலின் கூட்டு முயற்சி முறையை, அதாவது பாலிஸிதாரர்களே பங்குதாரர்கள் என்ற முறையைப் பாராட்டி இன்ஷ்யூரன்ஸ் தொழிலில் சௌஜன்ய பாணி முறை வளரும் என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

பிறகு கம்பெனி மானேஜர் ஸ்ரீ லோ ஹோனி வந்தனோபசாரம் கூறினார். தேசிய கீதம் பாடிய பிறகு, ஆயுள் இன்ஷ்யூரன்ஸின் அவசியத்தை வலியுறுத்தும் "ஸஹாரா" என்னும் சினிமாப்படம் காட்டப்பட்டது.





சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

78. இலங்கையில் கவலை

இனி ராவணனிடம் போவோம். மகா கவிகளின் போக்கில் ஒரு தனிச் சிறப்பு உண்டு. தங்களுடைய கற்பனை சக்தியைச் செலுத்தி வெறுக்க வேண்டிய பாத்திரங்களையும் இயற்கை நியதிகளைப் புறக்கணிக்காமல் உணர்ச்சியுடன் சித்திரிப்பார்கள். குணங்களையும் சாமர்த்தியத்தையும் தாழ்த்திவிட்டுச் சித்திரிக்க மாட்டார்கள்.

மக்களின் மனப்பான்மையை சாத்துவிக மார்க்கத்தில் செலுத்துவதே கவிகளின் கருத்து. இதற்காகவேதான் ராஜஸ தாமஸ பாத்திரங்களையும் மிகத் திறமையாகக் கையாள்வார்கள். ராஜஸ தாமஸ குணங்கள் பொதிந்து கிடக்கும் சாதாரண மக்களுக்கு காவ்யம் படிக்கும்போது ராஜஸ தாமஸ பாத்திரங்களிடம் அனுதாபமே ஏற்படும். நீச்தர மக்களைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. சாத்துவிக பாத்திரங்களின் செயல்களை வெறும் கதையாகவும் பூஜை விஷயமாகவும் வைத்து விட்டு, ராஜஸ தாமஸ பாத்திரங்களைத் தங்கள் உறவினர்களாகவே பாவித்து அனுதாபத்தோடும் அக்கறையோடும் படித்து அநுபவிப்பார்கள்.

மில்டன் என்னும் ஆங்கில மகா கவி "சுவர்க்கம் இழந்த" கிறிஸ்துவப் புராணத்தை ஒரு பெருங் காவியமாகப் பாடியிருக்கிறார். அந்த காவியத்தின் புகழ் உலகம் அளாவிப் பரந்தது. அதில் ஆண்டவன் ஆண்டவனுடைய மானஸ புத்திரனும் மக்களுக்குப் புருஷகாரனுமான கடவுள் திருமகன் * நித்திய சூரிகள்

* நம்முடைய சமயங்களில் எப்படி தேவி புருஷகாரமோ அதாவது கருணைக்கென்ற மூர்த்தியோ அப்படியே கிறிஸ்து மதத்தில் புருஷகாரம் கடவுள் திருமகனை ஏகாதன்.



எல்லாரும் பாத்திரங்களாக வருகிறார்கள். கடவுளை முதல் முதலில் எதிர்த்துப் பாபத்தையும் மரணத்தையும் பிரபஞ்சத்தில் உற்பவம் செய்த சைதான் அந்தப் பெருங் காவியத்தில் முக்கியமான பாத்திரம். இந்த சைதானை மில்டன் அற்புத அழகுடன் சித்திரித் திருப்பதாக ஆங்கில காவ்ய ரசிகர்கள் புகழ்வார்கள். அப்படியே உலகப் பிரசித்தரான நாடகக் கவிஞன் ஷேக்ஸ்பியரும், ஷைலாக் என்கிற லோபி, அதிக வட்டிக்குக் கடன் கொடுத்து மக்கள் ரத்தத்தை உறிஞ்சும் ஒரு பாத்திரம். அவனை ஷேக்ஸ்பியர் மிக அழகாகச் சித்திரித்திருக்கிறார். பெரும் துர்க்குணங்களை வைத்துக் கற்பித்த பாத்திரங்களானாலும் கெட்ட குணங்களுடன் தைரியம், உறுதி, சாமர்த்தியம் இத்தகைய உயர்ந்த குணங்களையும் அழுக்குக்குப் பின்னிருந்து மிளிரும்படி மனத்தைக் கவரும் வகையில் சேர்த்தே கவிகள் நமக்குச் சித்திரித்துக் காட்டுவார்கள். பாமர மக்களாகிய நமக்கு அந்தப் பாத்திரங்களினின்று அடைய வேண்டிய அறிவு ரொம்பவும் இருக்கிறபடியால் நம்முடையகவனத்தை இழுக்கும்படி அந்தப் பாத்திரங்களின் சித்திரத்தில் மிகுந்த ஒளி புகுத்தியே அமைப்பார்கள். வால்மீகி மகா காவியத்திலும் ராவண கும்பகர்ண சித்திரங்களில் இதைப் பார்க்கலாம். உணவு பதார்த்தங்களில் கசப்பிலும் மிக ருசி உண்டு அல்லவா? அத்தகைய பண்டங்களை நன்றாகச் சமைப்பதே சாமர்த்தியம். அதைப் போலவே காவியத்திலும்.

ஹனுமான் லங்கையில் செய்த வீரச் செயல்களும் நாச காரியங்களும் ராக்ஷச ராஜனுக்கு ஓரளவு வெட்கம் உண்டாக்கின. பயமும் ஏற்பட்டது. ஆனபடியால் சபை கூட்டி மந்திராலோசனை செய்தான்.

ஹனுமான் செய்த காரியங்களைப் பற்றிக் கொஞ்சம் அவமானப்பட்டுத் தலை குனிந்தே பேசினான்.

"இதுவரையில் பகைவர் யாரும் நம்முடைய நகரத்துக்குள்ளே புகுந்து பார்த்ததில்லை. ராமனிடமிருந்து வந்த இந்த வானரன் லங்கைக்குள் பிரவேசித்து, சிறையிலிருக்கும் ஜானகியையும் பார்த்து விட்டுப் போய்விட்டான். மாட மாளிகைகளை அழித்தான். சிறந்த வீரர்களைக் கொன்றான். நம்முடைய பிரஜைகளை பயத்தால் நடுங்கவும் செய்து விட்டான். இந்த விஷயம் இத்துடன் நிற்காது. ஆகையால் மேல் நடத்த வேண்டிய காரியங்களைப் பற்றி நாம் ஆலோசிக்க வேண்டும்.

"மங்களம்! அரசனுடைய நன்மையைக் கோரும் மந்திரிகளுடன் ஆலோசித்தே எல்லா காரியங்களையும் அரசன் செய்ய வேண்டுமல்லவா? ஆதலால் இந்த சபை கூட்டினேன். நமக்கு ராமன் பகைவனாகி விட்டான். அவனைப்பற்றி என்ன செய்யலாம் என்பதை நன்றாய் யோசிக்க வேண்டும். அரசன் தன் சாமர்த்தியம் தன் புத்தி இவற்றையே நம்பிக் காரியங்களைச் செய்து கொண்டு போவதைக் காட்டிலும் தன்னுடைய நன்மையில் பங்கும் பற்றும் கொண்ட புத்திமான்களுடன் யோசித்துக் காரியங்களைச் செய்வதே நன்மை தரும். மந்திரிகளுடைய யோசனையையும் இயற்கை விதிகளையும் புறக்கணித்து விட்டுக் காரியங்களைச் செய்து கொண்டு போகும் அரசன் கெட்டுப் போவான். மந்திரிகளிலும் நீதி சாஸ்திரத்தைக் கவனித்து உறுதியான கொள்கைகளை அனுசரித்துத் தைரியமாக யோசனை சொல்கிறவர்கள் உத்தமமான மந்திரிகள் ஆவார்கள். தங்கள் புத்தியை நேர் வழியில் செலுத்தாமலும் உறுதியான முடிவுகளுக்கு வராமலும் இப்படியும் அப்படியும் பேசுபவர்கள் உதவாத மந்திரிகளாவார்கள்.

"இப்போது நம்முன் நிற்கும் விஷயம் மிகவும் முக்கியமானது. ராமனும் பலவான். அவன் படையும் பலங் கொண்டது. இவர்கள் லங்கையைத் தாக்குவது நிச்சயம். சமுத்திரத்தை ஏதோ யுக்தி செய்து கடந்து வருவார்கள் என்பது நிச்சயம். அந்த அரண் ஒன்றையே நாம் நம்பிச் சும்மா இருத்தல் சரியாகாது. நம்முடைய நகரத்தையும் சேனையையும் எப்படி பலப்படுத்திக் காப்பது என்பதையும் நம்முடைய க்ஷேமத்துக்காக என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்பதையும் நன்றாக யோசனை செய்து சொல்லுவீர்களாக" என்றான் ராக்ஷச மன்னன்.

* * *

அரசன் சொன்னதைக் கேட்ட சபையோர் அனைவரும் ஒரே அபிப்பிராயமாகப் பேச ஆரம்பித்தார்கள்.



"மகாராஜா! நம்முடைய சேனா பலமும் ஆயுத பலமும் பிரபஞ்சத்தில் நிகரற்றதாக இருக்கத் தாங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? எந்தப் பகைவன் இந்தக் கோட்டையையாவது தங்களுடைய சேனையையாவது எதிர்த்து வெற்றி பெற முடியும்? தங்களுடைய பலம் பகைவர்களுக்குத் தெரியாதா?

"போகவதி நகரம் சென்று நாகராஜனை எதிர்த்துத் தாங்கள் வெற்றி பெறவில்லையா? மகா பலவானான குபேரனையும் அவனுடைய யக்ஷர்களையும் தாக்கித் தோற்கடித்துப் புஷ்பக விமானத்தையும் லங்கையையும் தாங்கள் வெற்றியுடன் அடையவில்லையா?

"மயன் தங்களுக்குப் பயந்து நட்பு செய்து கொண்டு தன் மகளையே தங்களுக்குத் தந்து விவாகம் செய்து கொடுத்தான் அல்லவா? பாதாளத்தில் எத்தனையோ நகரங்களைத் தாங்கள் தாக்கி வெற்றி பெற்றிருக்கிறீர்கள். காலகேயர்களோடு யுத்தம் செய்து வெற்றி பெற்றீர்கள். தங்களுடைய பல பராக்கிரமத்திற்கு எல்லையேயில்லை. வருணனுடைய புத்திரர்களையும் யமனையுங்கூட அபயம் கேட்கச் செய்தீர்கள். இந்த ராமன் எம்மாத்திரம்? வீரன் இந்திரஜித்து ஒருவன் போதாதா இந்த ராமனையும் அவன் வானர சேனையையும் அழிக்க?

இந்திரனையே பிடித்து வந்து சிறையில் வைத்து அடக்கி, 'ஓடிப்போ' என்றுசொல்லித் திருப்பி அனுப்பவில்லையா? இந்த ராமனும் அவனுடைய வானரர்களும் எம்மாத்திரம்? இந்திரஜித்தை அனுப்பி இந்த வானர சேனையை அழித்து விட்டு வர உத்தரவு கொடுத்தீர்களானால் காரியம் முடிந்தது. ஏன் கவலைப்படுகிறீர்கள்?"

இவ்வாறு சொல்லித் தங்கள் அரசனைப் புகழ்ந்தார்கள்.

மகா சூரன், பெரிய கருத்த மேகம் போன்றசேனாபதிபிரஹஸ்தன்எழுந்தான். "தேவ தானவ கந்தர்வர்களையெல்லாம் யுத்தம் செய்து அடக்கின மன்னனாகிய தாங்கள் இந்த அற்ப மனிதனைப் பற்றி ஏன் கவலைப் படுகிறீர்கள்?

"வானரம் ஒன்று வந்தபோது நாம் அஜாக்கிரதையாக இருந்து ஏமாந்தோம். நம்முடைய அஜாக்கிரதையை உபயோகித்துக் கொண்டு ஹனுமான் துஷ்டத்தனம் செய்தான். அது மறுபடியும் நடக்க விடுவோமா? இங்கே அவன் மறுபடி வந்தால் அவனை நான் பார்த்துக் கொள்கிறேன். இந்த வானர ஜாதியையே நிர்மூலம் செய்து விடுவேன். உத்தரவு கொடுங்கள். தாங்கள் செய்து விட்ட ஒரு தவற்றின் பயனாக அபாயம் வந்து விட்டது என்று கவலைப் படவேண்டியதில்லை" என்றான்.

அடுத்தாற்போல் துர்முகன் மிகக் கோபத்தோடு எழுந்தான். "நம்மையெல்லாம் அவமதித்த அந்த வானரனை நாம் இனி விட முடியாது. நான் இந்தக் கணமே சென்று அந்த வானர சேனையை அடியோடு அழித்து விட்டுத் திரும்பி வருகிறேன்" என்று கர்ஜித்தான்.

வஜ்ரதம்ஷ்டிரன் என்கிற சூரன் பயங்கரமான உலக்கையை எடுத்துக் கொண்டு நின்றான். "இதோ இந்த உலக்கை, பகைவர்களுடைய ரத்தமும் மாமிசமும் கழுவாமல் பூசிக் கிடக்கிறது. குரங்கைப் பற்றி ஏன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? ராமனும்லக்ஷ்மணனும் அல்லவா நம்முடைய பகைவர்கள்? அவர்களை நான் வதம் செய்து அந்த வானரசேனையையும் அழித்து விட்டுத் திரும்புகிறேன். என்னை அனுப்புவீர்களாக!

"நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். கேட்-



பீர்களாக. சில ராக்ஷச சூரர்களை மானுட வேஷம் தரித்து, ராமனிடம் போகச் சொல்வோம். போய், 'பரதன் நம்மை உம்மிடம் அனுப்பினன். பெருஞ் சேனை பின்னால் வருகிறது' என்று சொல்லி ஏமாற்றி அவனையும் அவனுடைய சேனையையும் அஜாக்கிரதையாக இருக்கச் செய்து நம் ராக்ஷஸ சேனை ஆகாய மார்க்கமாகச் சென்று அவர்கள் அனைவரையும் அக்கரையிலேயே வதம் செய்து விடலாம். இது என்னுடைய யோசனை" என்றான்.

கும்பகர்ணனுடைய குமாரன் நிகும்பன் எழுந்து "நீங்கள் அனைவரும் இவ்விடமே அரசனுடன் இருங்கள். நான் போய் இந்த சத்ருக் கூட்டத்தைக் கொன்று விட்டுத் திரும்பி வந்து உங்களுக்குச் சமாசாரம் சொல்லுகிறேன்" என்றான்.

மற்றொரு அரக்கன் உதட்டை நக்கிக் கொண்டு எழுந்து "நான் ஒருவனே சென்று இந்த ராம லக்ஷ்மணர்களைக் கொன்று தின்று விட்டு வருகிறேன்" என்றான்.

* * *

இப்படி ஒருவர் பின் ஒருவராக எழுந்து ராவணனைத் திருப்தி செய்ய வீரம் பேசினார்கள். எல்லாரும் கூட்டமாக எழுந்து ஆயுதங்களைத் தூக்கி கர்ஜித்தார்கள்.

எல்லாரையும் உட்காரச் சொல்லி ராவணனுடைய தம்பி விபீஷணன் எழுந்து கைகூப்பிப் பேசலானான் :

"அண்ணா! இவர்கள் சொல்லும் யோசனை காதுக்கு இனிமையாக இருந்தாலும், சரியானதல்ல. உமக்கு நன்மை தராது. நீதி சாஸ்திரத்திற்கு விரோதமாக ஒரு காரியம் செய்தால் அதனால் நஷ்டம் நேரிடும். சாம தான பேத உபாயங்களைப் பிரயோகிக்க முடியுமா என்று முதலில் பார்த்து அவை முடியா விட்டாலேதான் தண்டோபாயத்தைப் பகைவன்பேரில் எடுத்துக் கொள்ள வேண்டும். இவர்கள் சொல்லுவது போல் உடனே யுத்தம் ஆரம்பித்து விட்டால் லங்கை நாசமாகும்.நாமும் அழிந்துபோவோம்.

"தருமத்தையும் யோசிக்கவேண்டும். ராமனுடைய மனைவியைத் தாங்கள் எடுத்து வந்தது கொஞ்சமும் நியாயமாகாது. மகா பாபமான காரியம். அந்தப் பாபத்தை முதலில் துடைத்துத் தீர்த்துக் கொள்ள வேண்டும். ராமன் நமக்கு என்ன தீங்கு செய்தான்? தண்டகாரண்யத்தில் ராமனால் செய்யப்பட்ட காரியங்களெல்லாம் தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் ர[illegible]த்துக் கொள்ளத் தானே நடந்தன? அவனைக் கொல்ல வந்தவர்கள் பேரில் தான் அவன் யுத்தம் செய்து அவர்களைக் கொன்றான். அவன் மனைவியை அபகரித்துவர இவை எப்படிக் காரணமாகும். அவன்மேல் நமக்குக் கோபமிருந்தால் அவனை நாம் எதிர்த்து யுத்தம் செய்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு அவர்கள் இல்லாத சமயம் பார்த்து சீதையைத் தூக்கி வந்தது பாபமாகும்.

"நம் பேரில் குற்றமிருக்க நாம் முதலில் தண்டோபாயம் கையாளுவது சரியல்ல. ராமனுடைய பலத்தை நாம் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அவன் சேனா பலத்தையும் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஹனுமானுடைய பலத்தையும், சாமர்த்தியத்தையும் கண்டோம். அவனைப் பற்றி அலட்சியமாகப் பேசுவதில் பயனில்லை. அவன் செயல்களைக் கண்டு யாரே அதிசயப் படாதிருப்பார்? நம்முடைய பலம் பெரிதாயினும் எதிரியின் பலத்தோடு ஒத்துப் பார்த்தே யுத்தம் செய்யலாமா அல்லது யுத்தமில்லாமல் தீர்த்துக் கொள்ளுவது நலமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். சீதையை முதலில் திருப்பித் தந்துவிட வேண்டியது அவசியம். இதுவே என்னுடைய யோசனை. லங்கையை ராமனும் வானரர்களும் தாக்குவதற்கு முன் சீதையைத் திருப்பித் தந்து விடுவீர். அண்ணா! உமக்கு நான் ஹிதத்தைச் சொல்லுகிறேன். உம்முடைய நன்மைக்காகச்சொல்லுகிறேன். கோபித்துக் கொள்ள வேண்டாம். செய்த தவற்றை முதலில் திருத்திக் கொண்டு பிறகு மற்ற யோசனை செய்யலாம்" என்று கைகூப்பி வணங்கி விபீஷணன் தன் தமையனை அரசனைப் பணிவுடன் வேண்டிக் கொண்டான்.

முதலில் தன்னுடைய மந்திரிகளும் சேனாபதிகளும் பேசிய வீரப் பேச்சுகளைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த போதிலும் ராவணனுடைய மனத்தில் சந்தேகம் இருந்து கொண்டேயிருந்தது. எனவே, விபீஷணன் பேசியதைக் கேட்ட பிறகு "மறு நாள் திரும்பக் கூடி யோசிக்கலாம்" என்று சபையை ஒத்திப்போட்டு அந்தப்புரம் சென்றான்.

தேர்தல் சங்கடங்கள்!

ரஜனி

இலங்கை, ஜுலை மீ 14உ.

இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளும் இந்திய வம்சாவளியினர்களுக்கு இந்திய அரசாங்கத்தைக் கலந்து கொண்டு இலங்கைப் பார்லிமெண்டில் ஒரு நியாயமான அளவு ஸ்தானங்களை ஒதுக்கிக் கொடுப்பதாயும் இந்த ஸ்தானங்களுக்குப் பதிவுப் பிரஜைகள் தனித் தொகுதி முறையில் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாமென்றும் இலங்கை அரசாங்கம் டில்லி ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்டிருந்தது. இந்த ஏற்பாட்டின்படி முந்திய பார்லிமெண்டில் இருந்ததைப் போல இந்திய வம்சாவளியினர்களுக்குக் குறைந்த பட்சம் ஏழெட்டு ஸ்தானங்களாவது கிடைக்குமென்று இந்திய சர்க்காரும் இந்திய வட்டாரங்களும் எதிர்பார்த்தன. இதற்கு மாறாகவும் இந்திய அரசாங்கத்தைக் கலந்து கொள்ளாமலும் பதிவுப் பிரஜைகளுக்கு நான்கு ஸ்தானங்களை ஒதுக்க இலங்கை அரசாங்கம் சட்டம் இயற்றியது. இந்த நான்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க நான்கு தொகுதிகளை ஏற்படுத்தாமல் இலங்கை முழுவதையும் ஒரு தொகுதியாகப் பிரகடனப்படுத்தி, அந்த ஒரு தொகுதியிலிருந்தே நான்கு அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சட்டத்தில் குறிப்பிட்டார்கள். இந்த ஏற்பாட்டின்படி ஒரு அபேட்சகர் தேர்தலில் போட்டியிடுவதானால் அவர் 25,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள இலங்கை முழுவதிலும் சுற்றியலைந்து தேர்தல் பிரசாரம் செய்ய வேண்டியிருக்குமென்றும் இது இந்திய அபேட்சகர்களுக்குச் செய்யும் மிகப் பெரிய அநீதியென்றும் காங்கிரஸ் வன்மையாகக் கண்டித்தது. இந்த அநீதியை அற்பமாகத் தோன்றும்படி செய்ய அரசாங்கம் இவ்வாரம் இன்னொரு பெரிய அநீதியைச் செய்திருக்கிறது.

அதாவது இலங்கை மொத்தம் 95 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் சுமார் 20-க்குக் குறையாத வாக்களிப்பு ஸ்தலங்களுண்டு. வோட்டர்கள் சுலபமாகத் தங்களுடைய வோட்டுகளைப் பதிவுசெய்யவே இந்த ஏற்பாடு. ஆனால் பதிவுப் பிரஜைகளான இந்திய வம்சாவளியினர்களுக்கு இலங்கை முழுவதையும் ஒரே ஒரு தேர்தல் தொகுதியாக நிர்ணயித்துள்ள பொழுதிலும் பொதுத் தொகுதி வாக்காளர் வோட்டுப் போடும் சாவடிகளிலெல்லாம் இந்திய வம்சாவளியினர்களுக்கென்று பிரத்தியேகமாக ஒரு வோட்டுப் பெட்டியை வைத்தால் அதில் அவர்கள் வோட்டுப் போடச் சௌகரியமாயிருக்கும். இப்படிச் செய்வதற்குப் பதிலாக இலங்கையில் 13 இடங்களில் இவர்களுக்கென்று தனியாக வோட்டுச் சாவடிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உதாரணமாகக் கிழக்கு மாகாணம் முழுவதிலுமுள்ள பதிவுப் பிரஜைகள் தங்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்தித் தங்களுக்கு விருப்பமான அபேட்சகருக்கு வோட்டுக் கொடுக்க வேண்டுமானால் இருநூறு முந்நூறு மைல் தூரம் பிரயாணம் செய்து மட்டக்களப்பு நகரத்துக்கு வந்தாக வேண்டும். இதேபோல யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலுமுள்ளவர்கள் யாழ்ப்பாண நகரத்துக்கும், மத்திய மாகாணத்தில் நூற்றுக்கணக்கான தோட்டங்களில் இருப்பவர்கள் கண்டி நகரத்துக்கும் வந்தால்தான் வோட்டுக் கொடுக்க முடியும். தேர்தல் சமயத்தில் பொதுத் தொகுதிகளுக்குரிய வோட்டுச் சாவடிகளிலேயே தனித்தொகுதி வோட்டர்களான இந்திய வம்சா வளியினர்களும் வோட்டுக் கொடுக்க ஒரு தனிப்பெட்டியை வைப்பதற்குப் பதில், இந்திய வம்சாவளியினர், கஷ்டப்பட்டு அடைந்த வோட்டுரிமையை உபயோகிக்க முடியாதபடி அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இதை வன்மையாகக் கண்டித்துக் காங்கிரஸ் தலைவர் அஸீஸும், ஸ்ரீ எஸ். சுந்தரலிங்கம், ஸ்ரீ பீட்டர் கெனமென் போன்ற பிரபல பார்லிமெண்ட் அங்கத்தினர்களும் இவ்வாரம் அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

* * *

பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி ஒருவருடைய பிரஜாவுரிமை மனுவைக் கமிஷனர் நிரா

கரிப்பதின் முன்னால் ஏன் நிராகரிக்கப்படா தென்பதற்கு மூன்று மாதங்களுக்குள் காரணம் காட்டும்படி கமிஷனர் நோட்டீஸ் அனுப்ப வேண்டும். இவ்விதம் அவர் அனுப்பும் 100 நோட்டீஸ்களில் 60 நோட்டீஸ்களுக்குப் பதிலே வருவதில்லை யென்றும் இதனால் பெரும்பாலான இந்தியர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவதில் அக்கறை யில்லை யென்பது தெளிவாகத் தெரிவதாயும், பெரும்பாலோர் காங்கிரஸின் கட்டாயத்தின் பேரிலேயே இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுக் கொடுத்திருக்கிறார்களென்பதை இது ருசுப் படுத்துவதாயும் அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் உண்மை இதற்கு நேர்மாறானது. இந்தியத் தொழிலாளர் பிரஜாவுரிமை மனுக்களைத் தாக்கல் செய்த சென்ற ஆறு ஆண்டுகளுக்கிடையில் தோட்டம் விட்டுத் தோட்டம் மாறியிருக்கிறார்கள். சில தோட்டங்கள் விற்பனையாகித் தொழிலாளர் வேலைகளை இழந்து புதிய இடங்களுக்குப் போயிருக்கிறார்கள். இம்மட்டல்ல, இவர்கள் தங்களுடைய விலாச மாறுதல்களைப் பிரஜாபதிவுக் கமிஷனருக்குத் தெரிவித்தால் அதை அவர் கவனிப்பதே யில்லை. இதோடு கமிஷனர் அனுப்பும் நோட்டீஸ் தொழிலாளருக்கு நேரடியாக அனுப்பப்படுவதும் கிடையாது. தோட்ட முதலாளியின் விலாசத்துக்கு அனுப்பி அவர் மூலமாகவே பட்டுவாடா செய்யச் சொல்லுகின்றனர். தோட்ட முதலாளி அந்த நோட்டீஸ்களைத் தொழிலாளருக்குக் கொடுத்தால்தான் உண்டு. கொடுக்கா விட்டால் கேட்பாரில்லை. இவ்வாறு பல்லாயிரக் கணக்கான தொழிலாளரின் பிரஜாவுரிமை அவர்களுக்குத் தெரியாமலே பறி போய் விடுகின்றது. இந்த லட்சணத்தில் தான் இலங்கை இந்தியர்களுக்கு இந்நாட்டில் பிரஜாவுரிமை பெற வேண்டுமென்ற ஆசையில்லை யென்றும் நோட்டீஸ்களுக்கு அவர்கள் பதில் அனுப்புவதேயில்லை யென்றும் அரசாங்கம் ஒரு விநோதமான காரணம் கூறுகிறது.

அரசாங்கம் கூறுவது உண்மையா யிருக்குமானால் காங்கிரஸின் அட்டன் மகாநாட்டுத் தீர்மானம் கோரியதைப் போல இலங்கை இந்தியர்களின் விருப்பத்தைச் சுலபமான வழிகளில் கேட்டு அவர்கள் எந்த தேசப் பிரஜைகளாக வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த தேசப் பிரஜாவுரிமையைச் சங்கடங்களில்லாமல் வழங்கட்டுமே!

படித்துப் பாருங்கள்

குமரப் பருவம்

உலக இன்பங்களுள் குழந்தை இன்பம் தான் பேரின்பமாகக் கருதப்படுகிறது.

"பிள்ளைக் கனியமுது" என்றும் "பேசும் பொற்சித்திரம்" என்றும் மகாகவி பாரதி குழந்தையை மனம் நிறைந்த இன்பத்தோடு கூறுகிறார். அத்தகைய குழந்தையின் வளர்ச்சியையும், அந்த வளர்ச்சியில் ஏற்படும் படிப்படியான மாறுதல்களையும் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது யாவருக்கும் இன்றியமையாததாகும்.

உலகத்தில் ஒவ்வொருவரும் குழந்தைப் பருவத்திலிருந்து ஆண்களாகவோ மங்கையராகவோ வளர்ந்து வரும்போது குமரப் பருவத்தைக் கடந்துதான் வளர்ந்திருக்கிறார்கள். ஆயினும் அப் பருவத்தின் இயல்பையும், உணர்ச்சிகளையும் பற்றி யாவரும் தெளிவாக உணர்ந்திருப்பதாகக் கூற முடியாது. இந்நூல் அக் குறையை நீக்குகிறது. தற்கால ஆராய்ச்சிகளின் மூலம் கிடைத்த உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீ பெ. தூரன் அருமையாக இந்நூலை இயற்றி யிருக்கிறார்.

மலர்ச்சி எய்துதல், வளர்ச்சியில் வேகம், நாணம் இல்லாச் சுரப்பிகள், உள்ளக் கிளர்ச்சிகள், உணர்ச்சி விரிவு, புதிய கிளர்ச்சிகள் முதலிய நூலின் பிரிவுகள் குழந்தை மனத்தத்துவத்தையும், அதன் வளர்ச்சி வேறுபாடுகளையும் பற்றி விரிவாகக் கூறி விளக்குகின்றன.

ஆசிரியர்: பெ. தூரன்; பிரசுரம்: அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை—18; விலை: அணா 12.

மரணவரி அல்லது சொத்து வரிச் சட்டம்

(கருத்துக்களும் விளக்கமும்)

ஒருவர் தமது சொந்த முயற்சியாலும் உழைப்பாலும் சம்பாதிக்கும் பொருளுக்குச் சர்க்கார் வருமான வரி விதிக்கிறது. அதே போல் ஒருவரது மூதாதையர் இறந்தபின் உள்ள சொத்துக்களுக்கும் அரசாங்கம் வரி விதிக்கிறது. இந்தச் சொத்து வரியின் கருத்துக்களைச் சட்ட பூர்வமாக ஆராய்ந்து அதற்கு அருமையான விளக்கம் தந்திருக்கிறார் மதுரை திரு எம். சண்முக சுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., அவர்கள். சொத்து வரிச் சட்டத்திலுள்ள சிக்கலான பல பிரிவுகளையும், சட்ட ஞானம் பெற்றவர்களுக்குக்கூடக் குழப்பம் விளைவிக்கும் பகுதிகளையும் தெளிவுற விளக்கியிருக்கிறார் இந்நூலின் ஆசிரியர். இந்நூலினுக்கு அணிந்துரை வழங்கிய சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என். சோமசுந்தரம் அவர்கள் "சொத்து வரிச் சட்டத்தைத் தமிழில் எளிய நடையில் தெளிவாக எழுதுவது சுலபமல்ல. ஆனால் இவ்வாசிரியர் இதைத் திறம்படச் செய்திருக்கிறார்" என்று கூறியிருப்பது முற்றிலும் பொருந்தும்.

குடியரசில் மக்களுக்கு இருக்க வேண்டிய சட்ட ஞானத்துக்கு இம்மாதிரி வெளியீடுகள் மிகவும் துணைசெய்யும் என்பதில் சந்தேகமில்லை.

ஆசிரியர்: எம். சண்முக சுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்., கிடைக்குமிடம்: விவேகானந்தா அச்சகம், 49, மேலமாசி வீதி, மதுரை; விலை ரூ. 3—4—0.

அதிகமான மதிப்பு



கால தாமதம் வேண்டாம் — ஒரு 'ஸாண்டோ ஆல்ரெஸிஸ்ட்' கெடிகாரத்தை வைத்துக் கொள்ளுங்கள். அழகான தோற்றம், சரியான மணி காட்டும் தன்மை, செலவில் சிக்கனமுள்ள இந்த பேவர்-லூபா கெடிகாரத்தை வாங்கும்பொழுது நீங்கள் உங்கள் பணத்திற்கு ஒரு சிறந்த மதிப்பை அடைகிறீர்கள். ஞாபகமிருக்கட்டும்! ஸாண்டோ ஆல்ரெஸிஸ்ட் (1) தண்ணீரால் பாதிக்கப்படாது. (2) தூசி புகாது. (3) ஸ்டெயின்லெஸ் கேஸ் கொண்டது. குறுக்களவு சைஸ் 32 mm. (4) 10½''' அளவு, 17 ஜுவல் மூவ்மெண்ட், (5) அதிர்ச்சியைத் தாங்கக் கூடியது. (6) காந்தத்தால் பாதிக்காது. (7) 13 லெட் சீப் அடையாளங்கள் முட்களுடன் கூடிய நவீன வெள்ளி நிற டயல். (8) கெடிகார உற்பத்தித் தொழிலில் 150 வருஷங்கள் சிறந்த அனுபவமுள்ள பேவர்-லூபா கம்பெனியாரின் தயாரிப்பு. (9) ரூ. 152/-க்கு உண்மையிலேயே பெரிய மதிப்பு.



SANDOW
Alresist

ஸாண்டோ ஆல்ரெஸிஸ்ட்

நெ. 3303
சரியான சைஸ்

பேவர்-லூபா & கோ., லிட்., பம்பாய் - கல்கத்தா

FAVRE-LEUBA & CO. LTD.
BOMBAY CALCUTTA

FAVRE-LEUBA

E. 38



பணமும் குணமும்

ஆசிரியர்: அலி அப்பாஸ் ஹுஸைனி

மொழிபெயர்ப்பு: ஜெயமணி

பாரத நாட்டில் குறிப்பாக மாமன், அத்தை, மைத்துனி, மைத்துனன் போன்ற உறவினர்களிடம் எவ்வளவு வேண்டுமானாலும் பரிகாசமாகப் பேசலாம் என்ற வழக்கம் இருந்து வருகிறது. வேறு யாரிடமாவது எல்லை மீறிப் பரிகாசமாகப் பேசினால், "நான் என்ன, உன் மாமனா, மச்சானா!" என்று கேட்டு விடுவார்கள். "கடிக்க வரும் ஸர்ப்பத்தைக்கூட 'மாமா' என்று அழைத்தால், அது மகிழ்ச்சியடைந்து கடிக்காமல் திரும்பிப் போய் விடும்" என்று உருதுவில் ஒரு பழமொழி உண்டு. 'மாமா' என்று கூப்பிட்டதன் பலனைக் கொள்ளையடிக்க வந்த திருடர்கள் கூடத் தங்கள் நோக்கத்தைக் கைவிட்டு விட்டுத் திரும்பிச் சென்றதாகக் கதை உண்டு. 'மாமா' என்ற ஒரே வார்த்தையால் பல கலகங்களும் நெருக்கடிகளும்கூடத் தவிர்க்கப்பட்டுள்ளன. பிறர் மனத்தில் அன்பு சுரக்கும்படி செய்வதற்கு அந்த வார்த்தையில் என்ன மந்திர சக்தி இருக்கிறதோ!

'மாமா' என்ற வார்த்தைக்கு அவ்வளவு மகத்துவம் இருந்தும்கூட, அதில் ஒரு குறையும் இருக்கத்தான் செய்கிறது. அதாவது மாமன்மார் பொதுவாக அசடுகளாகத்தான் இருப்பார்கள் என்று கருதப்படுகிறது. அதிலும் ஒருவரை ஓர் ஊர் ஜனங்கள் யாவரும் 'மாமா' என்று கூப்பிடுவதாயின் அவர் பெரிய அசடாகத்தானே இருக்க வேண்டும்!

முகமது புரியைச் சேர்ந்த நாஸிர் மாமாவை அத்தகைய கோஷ்டியைச் சேர்ந்த ஒருவராகவே கருத வேண்டும். உண்மையில் ஒரு சிலருக்குத்தான் அவர் தாய் மாமன். ஆனால் அவரை அந்தக் கிராம ஜனங்கள் சகலரும் நாஸிர் மாமா என்றே அழைத்தார்கள்.

நாஸிர் மாமாவுக்குச் சொந்தமாக ஏராளமான நிலபுலன்கள் இருந்தன. அந்தக் காலத்

திலே உத்தரப் பிரதேசத்தில் பெரிய நிலச்சுவான்தார் என்றால் அற்ப விஷயம் அல்ல. அந்த ஊருக்கு அவர் 'ராஜா'தான்! குடிகள் யாவரும் அவர் தயவில்தான் வாழ வேண்டும். அவர்களுடைய விதியுடன் மேற்படி 'ராஜா' தன் இஷ்டப்படி விளையாட முடியும்!

அதுபோல் நாஸிர் 'மாமா'வும் அந்த ஊரில் வைத்தது சட்டமாக இருந்தது. அவருடைய அதிகாரத்திலோ, உரிமையிலோ தலையிடுவதற்கு எவருமில்லை. அப்படியிருந்தும், அவரை அக்கிராமத்தில் யாவரும் 'மாமா' என்றே உரிமையுடன் அழைத்தார்கள். நாஸிருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தும்கூட அவரை ஒரு அசடாகவே கருதினர்கள்.

வயல்களில் வேலை செய்வதே அகௌரவம் என்று நினைக்கப்பட்ட காலமாதலால், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த நிலச்சுவான்தார்கள் குடிகள் வசிக்குமிடத்துக்கு அப்பால் தூரத்தில் தனியாக இருந்து வந்தார்கள். ஏனெனில், அவர்கள் யாவரும் மிகப் பெரிய மனிதர்களாம்!

அந்தக் கிராமத்தில் உள்ள மொத்த நிலங்களில் முக்கால் பாகம் நாஸிருக்குச் சொந்தமாக இருந்தது. அந்த ஊரிலேயே அவரது வீடுதான் மிகப் பெரியது. எனவே, அதை எல்லோரும் மாளிகை என்றே குறிப்பிட்டார்கள். நாஸிர் மாமாவுக்குக் குத்தகை செலுத்த வரும் நூற்றுக் கணக்கான குடியானவர்கள் நெருக்கடியின்றி நிற்பதற்காக அந்த மாளிகையைச் சுற்றிப் பெரிய வராந்தா கட்டப்பட்டிருந்தது.

சாதாரணமாக, அந்தப் பிரதேசங்களில் பெரிய நிலச்சுவான்தார்களை 'ராஜா' என்றோ, 'தாகூர்' அல்லது 'மியான்' என்றோதான் எல்லோரும் அழைப்பது வழக்கம். ஆனால், அந்த வழக்கத்துக்கு மாறாக நாஸிரை மாத்திரம் ஏழைக் குடிகள் உள்பட எல்லோரும் 'மாமா' என்றே கூப்பிட்டார்கள்.

எழுபத்தைந்து வயதான தன் தந்தையை எல்லோரும் மாமா என்று கூப்பிடுவது நாஸிரின் மகனான ஜாபருக்குப் பிடிக்க வில்லை. ஜாபர் நவீன நாகரிகத்தில் ஆழ்ந்தவன். எனவே தந்தை உண்மையிலேயே ஓர் 'அசட்டு மாமா' தான் என்று எண்ணினான். அவரைக் கண்டாலே வெறுப்படைந்து முகத்தை அப்பால் திருப்பிக் கொள்வான். அவர் வரும் போது எழுந்து மரியாதை செய்வதைக்கூட ஜாபர் விட்டு விட்டான். செல்வம், செல்வாக்கு எல்லாம் இருக்கும் தான் ஓர் அசடனுக்கு மகனாகப் பிறந்தோமே என்ற எண்ணம் அவனை வாட்டி வதைத்து வந்தது.

நாஸிர் மாமாவின் மனைவி இறந்த பின், அவர் தன் மகன் ஜாபரைத் தன் எஸ்டேட் மானேஜராக நியமித்து, அவனுக்குச் சகல உரிமைகளும் அளித்தார். அவனுக்கு ஒரு அழகிய பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்து, அவனை வீட்டு எஜமானியாகவும் செய்தார். ஆனால், நாஸிர் மாத்திரம் மாளிகைக்கு அப்பால் இருந்த ஒதுக்குப்புறமான இடத்தில் வசிக்கலானார்.

சொத்துக்கள் யாவும் நாஸிருக்குச் சொந்தமானதாக இருந்தும்கூட அதன் நிர்வாகம் ஜாபரிடம் மாறி விட்டதால், யாரும் நாஸிரை லட்சியம் செய்ய வில்லை. ஜாபரின் மனைவி கூடத்தான் மாமனார் வந்தால் மரியாதையாக நடந்து கொள்வதில்லை.

எனினும் நாஸிர் மாமா எல்லாம் தெரிந்தும் தெரியாதவர் போல் தலை குனிந்தவண்ணம் தமது கடமையைச் செய்து வந்தார்.

*　　　*　　　*

நாள் ஆக ஆக நாஸிர் மாமா தமது சொந்த வீட்டில் தாம் ஒரு பிச்சைக்காரரைப் போல் இருக்க வேண்டியதாயிற்று. புனித முஸ்லிம் ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்ல வேண்டும் என்ற பேரவா அவருக்கு இருந்தும் அவர் வெகு காலம் வரையில் அதை நிறைவேற்ற முடியவில்லை.

கடைசியாக அவர் மிகுந்த கஷ்டத்துடன் ஸ்தல யாத்திரைக்குப் புறப்பட்ட போது அவர் ஜாபருக்குச் சட்ட பூர்வமாக எல்லா அதிகாரங்களும் அளித்தார். நாஸிர் யாத்திரைக்குப் புறப்பட்டுச் சென்ற போது ஜாபரும் அவனது மனைவியும் மிகவும் வருத்தப்படுவது போல் பாசாங்கு செய்தனர்.

ஆனால், நாஸிர் சில வருஷங்களில் ஸ்தல யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பி வந்தபோது, ஜாபரோ அவனது மனைவியோ அவரை வரவேற்கவில்லை. யாத்திரைக்குப் புறப்பட்டபோது தன் தந்தை தனக்கு அளித்த அதிகாரங்களை ஜாபர் திரும்பவும் தன் தந்தையிடம் ஒப்புவிக்க விரும்ப வில்லை. ஜாபரின் மன நிலையை உணர்ந்த நாஸிரும் அதிகாரங்களைத் திரும்பவும் தன்னிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று வற்புறுத்தவில்லை.

எனவே, நாஸிருக்குத் தமது சொந்த மாளிகையில் தாம் எவ்வித அதிகாரமுமற்ற அன்னியரைப் போல் வாழும்படி நேர்ந்தது.

நாஸிர் மாமாவுக்குப் பிரதி மாதமும் தமது சொத்துக்களி லிருந்து ஆயிரக்கணக்கான தொகை கிடைத்தது. அவருக்குச் சொந்தமாக ஏராளமான நிலங்களும், பழத் தோட்டங்களும், காளை மாடுகளும், பசுக்களும், எருமைகளும் இருந்தன.

நாஸிர் கையில் அதிகாரம் இருந்த போது, அவர் தமது தோட்டத்திலிருந்து கிடைக்கும் பழங்களில் ஏராளமானவற்றைத் தமது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கிராம ஜனங்களுக்கும் இனமாகக் கொடுப்பது வழக்கம். ஆனால், ஜாபர் கைக்கு வந்த பின் அவன் அப்பழங்களை யெல்லாம் விற்க ஆரம்பித்தான்.

இவ்விஷயமாக எல்லோரும் ஜாபரிடம் கூறிய போது, "என் தோட்டங்களிலிருந்து கிடைத்த பழங்களை எல்லோருக்கும் தானம் கொடுப்பதற்கு, என் தந்தையைப் போல் நானும் மடையனல்ல" என்று சொல்லி விட்டான். ஏன், நாஸிர் சாப்பிடுவதற்கே போதிய பழங்கள் கிடைக்க வில்லை!

ஜாபரின் மன நிலையை நன்கு அறிந்து கொண்ட நாஸிர் தமது தேவைகளை மிகவும் குறைத்துக் கொண்டு விட்டார்.

அந்தப் பிராந்தியத்திலேயே பெரும் செல்வந்தர் என்று பிரசித்தி பெற்ற நாஸிர் தோட்டி முதல் தொண்டைமான் வரையில் எல்லோருடனும் சமமாகப் பேசுவதும் ஜாபருக்குப் பிடிக்க வில்லை. உலகில் இரண்டே ஜாதிகள்தான் உண்டு என்பது ஜாபரின் அபிப்பிராயம். ஒரு ஜாதியினர் எஜமானர்கள்;

மற்றொரு ஜாதியினர் அடிமைகள். இவ்விரு 'ஜாதியினரும் பரஸ்பரம் சமத்துவமாகப் பழகுவது என்பது முடியாத காரியம்— இதுதான் ஜாபரின் சித்தாந்தம்.

குழந்தைகளைக் கண்டால் நாஸிருக்கு உண்டாகும் சந்தோஷத்தை விவரிக்க முடியாது. எனவே, நாஸிர் வெளிக் கிளம்பினால் சிறுவர்களும் சிறுமிகளும் 'மாமா', 'மாமா' என்று கூறிக் கொண்டு அவரைப் பின் தொடருவார்கள். சிற்சில சமயங்களில் அக்குழந்தைகளில் சில, ஜாபர் வெளியே போயிருக்கும் சமயம் பார்த்து நாஸிர் மாமாவின் குடிசைக்கு வருவதும் உண்டு. அவர்கள் வந்தால் நாஸிர் மாமா அவர்களுக்கென்று தாம் இரகசியமாக வாங்கி வைத்திருக்கும் இனிப்பு பிட்டாய்களைக் கொடுத்து, "இங்கிருந்து ஓடி விடுங்கள். ஒருவருக்கும் சொல்லாதீர்கள்" என்று சொல்லுவார். அவர்கள் சென்ற பிறகு வேறொரு கோஷ்டிக் குழந்தைகள் வந்து, "எங்களுக்கு ஒன்றும் கிடையாதா, மாமா!" என்று நாஸிரை நச்சரிக்கத் தொடங்கும்.

நாஸிர் எல்லோரிடமும் சமமாகப் பழகுவதையும் எந்தக் குழந்தைகளிடமும் அன்பாக இருப்பதையும் கண்ட செல்வந்தர்கள், "நாஸிர் மாமாவுக்குத் தமது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியவில்லை. அவர் அரைப் பைத்தியமாக இருப்பதால்தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார். அதனால் தான் குழந்தைகள், குடியானவர்கள், நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்கள் எல்லோரையும் அவர் சமமாகக் கருதுகிறார்" என்று இழிவாகச் சொல்லத் தொடங்கினர்.

இருந்தாலும் அதே சமயம் எல்லோருக்கும் நாஸிர் மீது இனம் தெரியாத அன்பும் பெருமதிப்பும் இருந்து வந்தன.

* * *

நயவஞ்சகமும் வெளிவேஷமும் நிரம்பிய இவ்வுலகில் நாஸிர் மாமா ஒரு 'பைத்தியக்காரர்'தான் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிப்பதற்கான ஒரு சம்பவம் அவரது வாழ்க்கையில் நிகழ்ந்தது.

நாஸிர் ஸ்தல யாத்திரைக்குப் புறப்பட்டுச் சென்றார் அல்லவா! அப்போது தம் உறவினர் ஒருவரிடமிருந்து ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தார். தம் மகன் ஜாபரைக் கேட்க மனமின்றியே அவர் உறவினரிடமிருந்து யாத்திரைச் செலவுக்குக் கடன் வாங்கிக் கொண்டு செல்ல நேர்ந்தது.

நாஸிர் பெரிய மனிதரானதால், அவரிடம் கடன் தொகைக்கு நோட்டோ, சீட்டோ எதுவும் எழுதிக் கொடுக்க வேண்டு மென்று உறவினர் கேட்கவில்லை. நாஸிரின் வார்த்தையே எழுதிக் கொடுக்கும் பத்திரத்துக்குச் சமமானது என்பது எல்லாருக்கும் தெரியும்.

யாத்திரை சென்று திரும்பியதும் மேற்படி கடனைத் திருப்பிக் கொடுத்து விடும்படி நாஸிர் தம் மகனிடம் கூறினார். ஆனால் அவர் மகன் ஜாபர் அவரது வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்காமல் சாக்குப் போக்கு சொல்லிக் கொண்டு வந்தான். மேற்படி கடன் தொகையைக் கொடுக்காததற்கு ஜாபர் அடிக்கடி ஏதாவது காரணம் கூறி வந்தான். "சர்க்காருக்கு இன்னும் வரி செலுத்தவில்லை," "வீடுகளைப் பழுது



திரு டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களது சகோதரர் திரு டி. எஸ். சிதம்பரம் பிள்ளை அவர்களின் குமாரர் சங்கரமோஹன் அவர்களுக்கும் திரு ஏ. சுந்தரம் பிள்ளை அவர்களது புதல்வி சௌ. கோமதிக்கும் சென்னையில் ஜூலை 6ம் தேதி யன்று வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். வாழ்க, மணமக்கள்!

பார்த்ததால் செலவு அதிகமாகி விட்டது," "மகளுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும்" என்றெல்லாம் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு காரணம் கூறி வந்தான்.

இவ்விதம் நாஸிர் வாங்கிய கடன் கொடுக்கப்படாமல் இரண்டு வருஷங்கள் கழிந்தன.

இதன் மத்தியில் ஜாபருக்கும் நாஸிருக்குக் கடன் கொடுத்த நபருக்கும் ஏதோ ஒரு காரணமாகச் சச்சரவு ஏற்படவே, ஜாபருக்குக் கொண்டாட்டமாகி விட்டது. அந்த நபருக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று ஜாபர் நினைத்தான்.

ஜாபருக்கு நிலங்களிலிருந்து ஆயிரக்கணக்கான தொகை கிடைத்த சமயம் பார்த்து, நாஸிர் தாம் கொடுக்க வேண்டிய கடனைத் திருப்பிக் கொடுத்து விடும்படி தம் மகனிடம் வற்புறுத்தினார். ஜாபர், தன் அந்தரங்க எண்ணத்தை வெளியிடுவதற்கு அதுதான் உற்ற சமயம் என்று நினைத்தான்.

"நாம் அவருக்கு எதற்காகத் தொகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்! நீங்கள் அவருக்கு ஏதாவது பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறீர்களா! இந்தத் தொகைக்காக அவர் நம் மீது சட்டப்படி வழக்குத் தொடர முடியுமா! முடியாதே. அப்படியிருக்க, பணம் கொடுக்க வேண்டுமே என்று நீங்கள் ஏன் வீணாகக் கவலைப்படுகிறீர்கள்!"

இவ்விதம் ஜாபர் கேட்டதும் அவன் தந்தை நாஸிருக்குப் பிரமாதமான கோபமும் ஆத்திரமும் வந்து விட்டன.

"உன்னை ஆண்டவன்தான் கேட்க வேண்டும். இந்த உலகில் நான் பல விதத்திலும் கஷ்டங்களுக்கு உள்ளாகும்படி செய்துள்ள நீ, மறு உலகிலும் நான் அமைதியின்றித் துன்பப் படும்படி செய்ய முற்பட்டிருக்கிறாய்" என்று நாஸிர் உரக்கக் கத்திவிட்டு, தமது மாளிகையிலிருந்து வெளியேறி விட்டார்.



சென்னை நகர சபை கவுன்சிலர் ஸ்ரீ கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் புதல்வி சௌபாக்கியவதி பார்வதிக்கும் செம்மாராவைச் சேர்ந்த டாக்டர் அனந்தகிருஷ்ணய்யரின் குமாரர் சிரஞ்சீவி ஏ. தியாகராஜனுக்கும் சென்ற ஜூன் மாதம் 25உ சென்னையில் திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

அதுவரையில் நாஸிர் மாமாவுக்குக் கோபம் வந்து அந்த ஊரிலேயே யாரும் பார்த்ததில்லை. எனவே, நாஸிர் கோபத்துடன் யாருடனும் பேசாமல் தெரு வழியாகச் செல்லுவதைப் பார்த்த சகலரும் ஆச்சரியம் அடைந்தனர்.

தமது தோட்டத்துக்குச் சென்ற நாஸிர் அங்கு மணிக் கணக்கில் ஆலோசனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு அங்கிருந்து திரும்பினார். அவர் தமது வீட்டுக்குத் திரும்பி வரவில்லை. நேராக மசூதிக்குச் சென்று விட்டார்!

நாஸிருக்குக் கோபம் வந்து மசூதிக்குச் சென்று விட்டார் என்ற செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவியது. இதனால் அந்தக் கிராமத்தில் மாத்திரமல்ல, சுற்று வட்டாரங்களில் கூட பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

எனவே, நாஸிரின் கோபத்தைத் தணிக்க மசூதிக்கு ஏராளமானவர்கள் வரலாயினர்.

நாஸிரின் பால்ய நண்பரான மூனீர் அவரிடம் வந்து, "எப்போதும் மசூதியிலேயே இருக்கத் தொடங்கி விட்டீர்களே! வீட்டுக்கு வரவில்லையா!" என்று கேட்டார்.

"எனக்கு வீடு என்று ஒன்றிருந்தால் தானே வருவதற்கு! என் வீடு அயோக்கியனை ஜாபருக்குச் சொந்தமாகி விட்டது. நல்ல குணமோ, ஆண்டவனிடம் பக்தியோ இல்லாத அவனுடன் நான் எப்படி வசிக்க முடியும்! எனது பிரார்த்தனைகள், எனது உண்ணா விரதங்கள், எனது ஸ்தல யாத்திரைகள் எல்லாம் அந்தப் பாவியால் பாழாகி விட்டன. என் வாழ்க்கையே இப்போது பாலைவனமாகி விட்டது" என்று உரக்கக் கத்தினார் நாஸிர்.

அவரை வீட்டுக்குத் திரும்பிச் செல்லும்படி பலரும் வற்புறுத்தினர். நாஸிருக்குக் கடன் கொடுத்தவர் கூட "மாமா, நான் கொடுத்த கடனைத் தாங்கள் திருப்பித் தர வேண்டாம். நீங்கள் வீட்டுக்குச் சென்றால் போதும்" என்று வேண்டிக் கொண்டார். உடனே நாஸிருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"என்னை மடையன் என்று எண்ணி விட்டாயா! நான் மடையனாகவும் ஒன்றுக்கும் உதவாத கிழவனாகவும் இருக்கலாம். எனினும், நான் பிச்சைக் காரனல்ல, அயோக்கியனல்ல, அற்ப புத்தி படைத்தவனல்ல. என் தோட்டத்திலிருந்து ஆயிரக் கணக்கில் வருமானம் கிடைக்கிறது. அப்படியிருக்க, நீ கொடுத்த ஐந்நூறு ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்வதாக நீ சொல்லுவது என்னை அவமதிப்பதாகும். இந்தக் கையால் நான் எத்தனை எத்தனையோ பேர்களுக்கு வாரிக் கொடுத்திருக்கிறேன். ஆனால், ஆண்டவனைத் தவிர வேறு எவரிடத்திலும் நான் கை நீட்டி யாசித்ததில்லை. அப்படியிருக்க, இந்த வயதில் நான் எதற்காக யாசிக்க வேண்டும்! அப்படி யாசிப்பதைக் காட்டிலும் நான் மரணத்தையே விரும்புவேன்" என்றார் நாஸிர்.

மூனீர், ஜாபரிடம் சென்று நாஸிர் வாங்கிய கடனை உடனே கொடுத்து விடும்படி கூறினார். ஜாபர் அதற்கு மறுக்கவே, மூனீர் பொறுமை யிழந்து ஜாபரை எல்லோரும் பகிஷ்காரம் செய்யும்படி தூண்டப் போவதாக எச்சரித்தார்.

அதன் பிறகுதான் ஜாபருக்குப் புத்தி வந்தது. அவன் உடனே ஐந்நூறு ரூபாயைப் பையில் கட்டிக் கொண்டு வந்து தன் தந்தையின் முன்னிலையில் வைத்தான்.

நாஸிர் அந்த முடிப்பைத் திறந்து, அதிலிருந்த தொகையை எண்ணி, அதை மிக்க மரியாதையுடன் தான் கடன் வாங்கியிருந்த உறவினரிடம் கொடுத்தார்.

அவரும் நாஸிருக்குத் தலை வணங்கி அதை ஏற்றுக் கொண்டார்.

உடனே நாஸிர் மாமா கம்பீரமாக எழுந்து நின்றார். வயோதிகம் காரணமாக அவருக்கு இருந்த கூனல் கூட நிமிர்ந்து விட்டது!

"மிகுந்த புண்ணிய காரியத்துக்காக நீங்கள் இந்தத் தொகையை எனக்குக் கடனாகக் கொடுத்தீர்கள். உங்களுடைய பெருந் தன்மை காரணமாக நீங்கள் என்னிடமிருந்து நோட்டோ சீட்டோ எதுவும் வாங்கிக்கொள்ளவில்லை. ஆனால், காலம் கடவாமல் இந்தத் தொகையை நான் திருப்பிக் கொடுக்க முடியாமற் போனதற்காக வெட்கப் படுகிறேன். எனக்கு உள்ள சொத்துக்களில் ஏராளமான வருமானம் கிடைக்கும் பழத் தோட்டமும் ஒன்றாகும். அதை இத்தனை ஜனங்களின் முன்னிலையில், ஆண்டவன் முன்னிலையில் உங்களுக்கு நான் தானமாகக் கொடுக்கிறேன். நான் மனப் பூர்வமாகக் கொடுக்கும் இந்த வெகுமதியை ஏற்றுக்கொள்ளும்படி உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்!"

இவ்விதம் கூறி முடித்த நாஸிர் மாமாவை எல்லோரும் ஏக காலத்தில் ஆச்சரியத்துடனும் திகைப்புடனும் பார்த்தனர்.

தன் உறவினர் செய்த அற்ப உதவிக்காக அவ்வளவு பெரிய பழத் தோட்டத்தைத் தானமாகக் கொடுத்த நாஸிர் நிச்சயமாகப் பைத்தியக்காரராகத் தான் இருக்க வேண்டும் என்று பலரும் பேசிக் கொண்டனர்.

ஆனால், உண்மையில் யார் பைத்தியக்காரர்! நாஸிர் பைத்தியக்காரரா! அல்லது அவரைப் பைத்தியக்காரர் என்று கூசாமல் கூறிய அறிவிலிகள் பைத்தியக்காரர்களா!

இது உருது பாஷையில் முதற் பரிசு பெற்ற கதை.

தெம்பூட்டுகிறது

காலையில் உபயோகித்தால்!

மென்மை உணர்ச்சி

மணிக்கணக்காய் மாறாது!

காஷ்மீர் பொக்கே டால்க் எவ்வளவு தெம்பூட்டுகிறது! அந்த மென்மை உணர்ச்சி மணிக் கணக்காக நீடிக்கிறது! ஈரத்தை உறிஞ்சி, அரிப்பும் புண்ணும் வராமல் தடுக்கிறது. குளுமை மணம், புத்துணர்ச்சி அளிக்கிறது.

கால்கேட் 1806 முதல்

தரத்துக்குப் பெயர்போனது



காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்

ஆண்கள் விரும்பும் நறுமணம்

CBG/13

கும்பகோணம்

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டிற்கு

இலங்கை அரசாங்க

ஹோமியோபதி விசாரணைக் கமிட்டி அங்கத்தினர் விஜயம்

★



இலங்கை அரசாங்கத்தின் முன்னாள் ஆடிட்டர் ஜெனரலும், இலங்கை சர்க்காரால் சமீபத்தில் நியமிக்கப்பட்ட ஹோமியோபதி விசாரணைக் கமிட்டியின் அங்கத்தினருமான திரு K. கனகரத்தினம் அவர்கள் கும்பகோணம் இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டிற்குச் சென்ற 9-7-55 சனிக்கிழமை விஜயம் செய்தார்கள். அன்னாரை இன்ஸ்டிடியூட் டைரெக்டர் டாக்டர் V. R. மூர்த்தி அவர்கள் வரவேற்று இன்ஸ்டிடியூட்டின் பல்வேறு இலாக்காக்களையும் சுற்றிக் காண்பித்தார்கள்.

இலங்கைக்குப் புறப்படுவதற்கு முன் ஸ்ரீ கனகரத்தினம் அவர்கள் இன்ஸ்டிடியூட்டின் பார்வையாளர் குறிப்புப் புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு (ஆங்கிலத்தில்) எழுதியுள்ளார்:—

நான் இலங்கை அரசாங்க ஹோமியோபதி விசாரணைக் கமிட்டியில் பணியாற்றிய பொழுது கமிட்டி முன் ஆஜரானவர்களில் பெரும்பான்மையோர் தாங்கள் டாக்டர் V. R. மூர்த்தியவர்களால் நடத்தப்படும் இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்டில் தபால் மூலமாக ஹோமியோபதி பயிற்சி பெற்றதாகத் தெரிவித்தார்கள். சிலர் டாக்டர் மூர்த்தி அவர்கள் அளிக்கும் கோடைக்கால நேர்முக வகுப்பிலும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். சிதம்பரத்தில் நடந்த மஹா கும்பாபிஷேகத்திற்கும், கும்பகோணம் இன்ஸ்டிடியூட்டிற்கும் செல்லும் நோக்கத்துடன் இவ்விடம் வந்தேன். டாக்டர் மூர்த்தியவர்கள் என்னை இன்ஸ்டிடியூட், லாபரெட்டரி, புத்தகசாலை, ஆபீஸ் முதலிய இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டினார். முழுவதையும் மிகவும் நேர்த்தியான முறையில் நடப்பதை நான் முக்கியமாகக் கண்டேன். இங்கு இருக்கும் ஒழுங்குமுறை, சுத்தம், இவைகள் ஒருவரை உடனே வசீகரிக்கின்றன. ஹோமியோபதியின் தத்துவங்களை நன்கு கிரகித்து அதிலிருந்து பிறழாமல் இந்த இன்ஸ்டிடியூட்டை டாக்டர் மூர்த்தி நடத்துகிறார் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. டாக்டர் மூர்த்தி இந்த இன்ஸ்டிடியூட்டை நடத்தும்விதம் மற்ற வைத்திய முறை டாக்டர்களுக்குக் கூட ஒரு எடுத்துக் காட்டாக இருக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

இந்த இன்ஸ்டிடியூட்டிற்கு நான் இன்று வந்ததுபற்றி மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த இன்ஸ்டிடியூட்டின் தபால் பாடங்கள் இலங்கையில் அதிகமாக விரும்பப்படுவதும், ஔஷதங்கள் அதிகமாக இலங்கையில் உபயோகத்திலிருப்பதும் ஏன் என்பதை இங்கு வந்தவுடன் கண்டுகொண்டேன்.

இந்த இன்ஸ்டிடியூட்டிற்கு எல்லாவிதத்திலும் வெற்றி யுண்டாக வாழ்த்துகிறேன்.

கும்பகோணம்
9 - 7 - 55

(ஒப்பம்) K. கனகரத்தினம்
ரிட்டையர்டு ஆடிட்டர் ஜெனரல் &
மெம்பர் ஹோமியோபதி விசாரணைக் கமிட்டி, இலங்கை அரசாங்கம்



மாலை மணி ஆறு இருக்கும். ராகவனின் உள்ளக் கடலில் சிந்தனை அலைகள் எழும்பித் தணிந்தன. பலகணி யருகில் அமர்ந்து பரந்து விரிந்து கிடந்த செவ்வானத்தை வெறித்து நோக்கிய வண்ண மிருந்தான் அவன். எதிர் வீட்டில் — அவனது இதயராணி சீதாவின் வீட்டில் — நடந்த கல்யாண கோலாகலங்கள் அவனது இதயத்தில் கசப்பைக் கரைத்து ஊற்றுவது போல் தோன்றின. நாகசுரத்தின் இனிய நாதவெள்ளம் அவன் காதிலே நாராசமெனப் பாய்ந்தது. மேள வாத்தியத்தின் ஓசை இடியோசை போல் அவனை நடுநடுங்க வைத்தது. கட்டிளங் காளைப் பருவத்தினனான அவன் கண்கள் கலங்கிக் கண்ணீர் சொரிந்தன. கண்ணீர்த் திரையில் கயல் விழிக் கன்னி சீதாவின் எழிலுருவம் நிழலாடியது.

உற்றார் உறவினர் யாருமற்ற அனாதையான அவன் கோவை உயர்நிலைப்பள்ளி ஒன்றில் ஆசிரியனாக வேலை பார்த்து வந்தான். அவள் ஆறாவது பாரத்தில் வாசித்துக் கொண்டிருந்தாள்; அவன் அவளுக்கு ஆசிரியன். சீதாவுக்கு ஆங்கிலம் எப்பொழுதுமே கடினம்தான். எனவே அவளைப் பாதுகாத்து வந்த அவள் தாத்தா ராகவனை அவளுக்குத் தனியாகப் பாடம் சொல்லிக் கொடுக்க நியமித்தார்.

தினந்தோறும் மாலை வேளையில் ஒரு மணி நேரம் பாடம் சொல்லிக் கொடுப்பான். அவன் தனது அறிவின் திறத்தாலும், ஆழ்ந்த அன்பினாலும் சீதாவின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்து விட்டிருந்தான். சீதா அவன் தனக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதையே ஒரு பெருமையாகக் கருதினாள். அவள் பங்களாவின் எதிரிலிருந்த மாடி வீட்டில்தான் ராகவன் ஒரு அறையில் குடியிருந்தான். தினந்தோறும் பள்ளிக்கூடம் செல்வதற்கு முன் சீதா அவன் அறைக்கு வந்து அறையைப் பெருக்கிச் சுத்தம் செய்து ஒழுங்குபடுத்தி விட்டுச் செல்வாள். "உங்கள் வீட்டில் எல்லாவற்றிற்கும் வேலைக்காரர்கள் வைத்திருக்கிறீர்கள். உனக்குப் பழக்கமில்லாத இந்த வேலையெல்லாம் நீ ஏன் செய்கிறாய், சீதா?" என்று ராகவன் அன்புடன் எவ்வளவோ முறை கடிந்து கொண்டிருந்தும் அவள் அதைக் கேட்கவில்லை. அவனுக்குத் தொண்டு செய்வதில் அவள் தனி ஆர்வம் காட்டினாள்.

கால் வருடப் பரீட்சையிலேயே சீதா படிப்பில் நல்ல முன்னேற்றம் காட்டினாள். அவள் தாத்தாவான சாம்பசிவம் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். 'இருபத்தொரு வயது இளைஞனான இவன் என்ன சொல்லித் தரப் போகிறான்' என்று அவர் முதலில் எண்ணிய எண்ணத்தை மனப்பூர்வமாய் மாற்றிக் கொண்டார். அவனிடம் அவருக்கு ஒரு தனி மதிப்பு ஏற்பட்டது.

அன்று எஸ். எஸ். எல். சி. கடைசிப் பரீட்சை. மாலையில் வீடு திரும்பிய ராகவன் வழக்கம் போல் உடையை மாற்றிக் கொண்டு பங்களாவுக்குச் சென்றான். அன்று சாம்பசிவம் ஊரில் இல்லை. ராகவன் பாடம் சொல்லிக் கொடுக்கும் அறைக்குச் சென்று 'காலிங் பெல்'லின் மூலம் தன் வருகையைத் தெரிவித்தான். அடுத்த கணம் சிரித்த முகத்துடன் சீதா அங்கு தோன்றினாள். "ஸார்... இந்த அறையில் விளக்கு உடைந்திருக்கிறது. என் அறைக்கே போய் விடலாம். வாருங்கள்" என்று குயிலினு மினிய தன் குரலில் குழைவுடன் கூப்பிட்டாள். வசந்தத் தென்றலில் அசைந்தாடும் பூங்கொடி போல் அவள் முன் நடக்க இவன் அவளைப் பின் தொடர்ந்தான். "இன்றைக்குப் பரீட்சை எப்படி?" என்ற வழக்கமான கேள்வியைக் கேட்டுக் கொண்டே அங்கு கிடந்த நாற்காலியொன்றில் அமர்ந்தான் அவன். கேள்வித் தாளை எடுப்பதற்காக எதிரிலிருந்த அலமாரியைத் திறந்தாள் சீதா. அலமாரியினுள் அவன் கண்ட காட்சியை அவன் உள்ளமே நம்ப மறுத்தது. கண்களை நன்கு துடைத்து விட்டுக் கொண்டு பார்த்தான். அவன் கண்டது கனவல்ல, அங்கே அவனது புகைப்படம் அழகிய பிரேம் போட்டு வைக்கப்பட்டிருந்தது. அதனருகில் அதே அளவில் சீதாவின் சிந்தை கவரும் உருவப் படம் வைக்கப்பட்டிருந்தது. ஆம்! அவள் அவனை மணமாரக் காதலிக்கிறாள். இதனை

எண்ணிய மாத்திரத்தில் அவன் உள்ளம் கிளுகிளுத்தது.

ராகவன் படத்தைப் பார்த்து விட்டான் என்பதை அவனது முகக் குறியிலிருந்து கண்டு கொண்ட சீதா நாணத்தால் தலை குனிந்த வண்ணம் கேள்வித்தாளை அவன் கையில் கொடுத்தாள். அவன் முகத்தையேஅவன் நோக்கிக் கொண்டிருந்தான். அவளும் அவன் கண்களைச் சிறிது நைரியத்துடன் சந்தித்தாள்; தான் நழுவித் தரையில் விழுந்தது.

அவன்தான் அமைதியைக் கலைத்தான். "ஸார்! ......இத்தனை நாளும் நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு 'நான் பதில் சொல்லிவந்தேன். இன்று நான் கேட்பதற்கு நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும்" என்றாள்.

"சரி, டீச்சர்!" என்றான் கேலியாக.

அந்திவானம் போல் சிவந்த அவள் வதனம் நாணத்தால் மேலும் சிவப்பேறியது. குனிந்த தலை நிமிராமலே, "நீங்கள் என்னை......" என்று கூறிய அவள் மீதியைக் கண்களால் பேசி முடித்தாள்.

ராகவனின் உடல் புல்லரித்தது. ஆனால் அடுத்த கணம் அவனது இதய வானத்தின் ஓர மூலையைக் கவலையென்ற கார் மேகம் கவ்வியது. அவளைக் காதலிக்க அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது? அழகிலும் அன்பிலும் இருவருக்கும் இருந்த ஒற்றுமை அந்தஸ்திலே, ஆஸ்தி



யிலே, அதிகாரத்திலே இருக்க வில்லையே? கவலை தோய்ந்த பார்வையை அவன் வீசினான் அவள் மேல்.

அவன் என்ன சொல்லப் போகிறானோ என்ற அளவற்ற அச்சத்துடன் அமர்ந்திருந்தாள் சீதா.

"சீதா......" சோகம் கலந்த தொனியிலே அழைத்தான் அவன். "தயவு செய்து உன் எண்ணத்தை மாற்றிக் கொள். நீ உலகம் தெரியாதவள். நம் காதலை உலகம் அனுமதித்தாலும் உன் தாத்தா அனுமதிக்க மாட்டார். பங்களாவாசியான உன்னைப் பள்ளி ஆசிரியனான நான் காதலிக்கத் தகுதியில்லை என்று குத்திக் காட்டுவார் அவர். காதலிப்பது கடினமல்ல; காதல் கைகூட வேண்டாமா?" மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமாய் உதட்டளவில் உத்தரவிட்டான் இந்த வார்த்தைகளை.

"சார்...போதும் உபதேசம்...நீங்கள் வேண்டுமானால் என் காதலைப் பற்றி எண்ணிப் பார்ப்பது இது தான் முதல் தடவையாக இருக்கலாம். ஆனால், நான் என்றோ என் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டேன்..." என்று சொல்லும் போதே காட்டாற்று வெள்ளம் போல் கண்களில் பெருக்கெடுத்தோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்தாள். "மணந்தால் உங்களை மணப்பேன். இன்றேல் கன்னியாகவே இருந்து காலங்கழிப்பேன். இதுசத்தியம்." விம்மலுக்கிடையே எழுந்த அவள் குரலில் அசைக்க முடியாத உறுதி தொனித்தது.

ராகவனின் உள்ளம் தட்டாமாலை சுற்றியது. அவள் இதயம்மட்டும் அவன் உள்ளத்துடன் உறவாட விரும்பாமலா இருந்தது? கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? உள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு எழுந்து அவள் அருகில் சென்று அவளது கண்களில் நிரம்பிய நீரைக் கைக் குட்டையால் துடைத்தான். அவள் அசைய வில்லை. "சீதா...என்னை மன்னித்து விடு...உனது அன்பின் ஆழம் தெரியாமல் உன் மனத்தைப் புண்ணாக்கி விட்டேன். எனக்கு மட்டும் உன்மேல் அன்பு இல்லையா?... நான் மணந்தால் உன்னை மணப்பேன். இன்றேல் பிரம்மச்சாரியாகவே இருந்து காலம் கழிப்பேன். இது சத்தியம்." அவன் குரல் தழுதழுத்தது. அவளது அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன. அப்போதுதான் சீதா தான் நாற்காலியில் உட்கார்ந்திருப்பதையும் அவன் அருகில் நின்று கொண்டிருப்பதையும் உணர்ந்தாள். 'விருட்'டென்று எழுந்த அவள் "நம் காதல் தெய்வீகமானது, இது கைகூடத் தெய்வம்தான் அருள் புரிய வேண்டும்" என்று கூறினாள். இருவரும் அங்கு மாட்டப்பட்டிருந்த திரு முருகனின் உருவப்படத்தை உளமார வணங்கினர்.

தாயற்ற சேயாய்த் தரணியில் விடப்பட்ட சீதாவை அவள் தாத்தா பரிவுடன் வளர்த்து வந்தார். மூன்றாண்டுகளுக்கு முன் இரண்டு லட்சம் பெறுமான தங்கக் கட்டிகளைப் பம்பாய்க்கு எடுத்துச் சென்ற அவளது தந்தை விமான விபத்தில் இறந்து விட்டதாகச் செய்தி கிட்டியது. அவள் அதிகம் கவலைப்படக்கூடாது என்ற காரணத்துக்காக அவளுக்கு எல்லாவிதச் சலுகையையும் தாத்தா சாம்பசிவம் அளித்திருந்தார். அவளுக்கு அவரிடம் ரொம்பவும் செல்லம். அவள் வேண்டுகோளை அவர் மறுத்த நாளே கிடையாது.

ஆனால் அன்று அவள் தன் மண விஷயமாய் அவரிடம் கூறியபோது அவர் அதைச் சிறிதும் ஒப்புக் கொள்ளவில்லை. "சீதா, உனக்கு ஒன்றும் தெரியாது. அந்த அயோக்கியன் உன் மனத்தைக் கெடுத்து விட்டான். பொறு, பேசிக்கொள்கிறேன்" என்று உறுமினாரே ஒழிய வேறொன்றும் கூறவில்லை.

"தாத்தா, அவரைக் கோபிக்காதீர்கள். நான்தான்..." என்று தட்டுத் தடுமாறிக் கூறினாள் சீதா. சாம்பசிவம் அவளைச் சாம்பலாக்கி விடுவது போல் பார்க்கவே அவள் வார்த்தைகளை அப்படியே மென்று விழுங்கினாள்.

ராகவன் பல முறை சாம்பசிவத்தைச் சந்தித்துப் பேச முடிவு செய்தும் முடியாமல் போயிற்று. ஒரு தடவை சந்தர்ப்பம் கிடைத்த பொழுது அவன் என்ன முயன்றும் வார்த்தைகள் வெளி வரவில்லை. மேலும் அவர் அவனைக் கண்டாலே



விலகிச் செல்வது போன்றிருந்தது. வழியில் எங்காகிலும் கண்டால்கூட, தம் காரில் அழைத்துச் செல்பவர் நேரில் சந்தித்தபோதுகூடப் பார்க்காதவர் போல் சென்று விட்டார். அவரது இச் செய்கை ராகவனின் கொஞ்ச நஞ்ச தைரியத்தையும் இழக்கச் செய்தது.

அடுத்த நாள் சீதாவினிடமிருந்து வந்த கடிதம் அவன் பிரச்னையைத் தீர்க்கும் வண்ணம் அமைந்திருந்தது. அவன் எதிர் பார்த்த முடிவுதான் அது. அப்படியானால் அவன் அவளை அடைவது எங்ஙனம்? ஒரு மாதகாலம் ஓட்டமாய் ஓடி ஒழிந்தது. சீதாவை ராகவன் சந்திப்பதே துர்லபமாகிவிட்டிருந்தது. பிரிவில்தானே அன்பு வளர்கிறது?

நாட்கள் நகர்ந்தன. இன்று...விடிந்தால் கலியாணம்! அவளுடைய பொருளை அடுத்தவன் அபகரித்தபின் அந்த ஊரிலே அவனுக்கு என்ன வேலை? அங்கு அவனுக்கு நிம்மதிதான் ஏது? ஊரைவிட்டே, ஏன், உலகை விட்டே ஒழிந்தால்தான் நிம்மதி என்று அவன் எண்ணியபோது 'டாண் ... டாண்' என்று மணி எட்டடித்து ஓய்ந்தது. 'நீலகிரி எக்ஸ்பிரஸ்' புறப்படப் பதினைந்து நிமிடங்கள்தான் இருந்தன. பெட்டியை மட்டும் எடுத்துக் கொண்டு ஸ்டேஷனை வந்தடைந்தான்.

'எங்கே போவது?' பையில் கையை விட்டான். பத்து ரூபாய் நோட்டு ஒன்று இருந்தது. சென்னைக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயிலில் ஏறி அமர்ந்தான்.

அவன் ஏறியமர்ந்த ஐந்தாவது நிமிஷம் முக்காடிட்ட ஓர் பெண் அவசரமாய் வந்து அவன் இருந்த பெட்டியில் ஏறினாள். அவனுக்கு நேர் பின்னால் வந்து அமர்ந்த அவள் மேல் அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஒரு வேளை அவள்தான் சீதாவாக இருக்குமோ?...

வண்டி இருளைக் கிழித்துக் கொண்டு ஓடிற்று. ஈரோட்டில் வந்து நின்றது. அப்பொழுதும் அவன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. அப் பெண்ணின் எதிரில் இருந்த இரு ஸ்திரீகள் பேசிக் கொள்வது அவன் காதில் இலேசாக விழுந்தது.

"இதற்கடுத்தது காவேரிப்பாலம் தானே?"

"ஆமாம்."

இவ்வளவு நேரம் பேசாதிருந்த அப் பெண் "அது ரொம்பத் தூரமோ?" என்று எதிரிலிருந்தவளைக் கேட்டாள். குரல் அவள் சீதாதான் என்று ராகவனுக்கு உணர்த்தியிருக்கும். ஆனால் அதே சமயத்தில் எழுந்த ரயிலின் ஊதல் சத்தமும், சில்லறை வியாபாரியின் 'சோடா, கலர்' சத்தமும் அவன் காதை அடைத்து

விட்டன. "இல்லை. ரொம்பப் பக்கம் தான்" என்ற பதில் மட்டும் அவனுக்குத் தெளிவாய்க் கேட்டது. அதிலிருந்து அவன் என்ன கேட்டிருப்பான் என்று ஊகித்தான். எதற்காக அவன் பாலத்தைப் பற்றி விசாரிக்க வேண்டும்?

ரயில் ஓடிக் கொண்டிருந்தது. அவன் மனம் இனந்தெரியாத திகிலால் கவ்வப் பட்டது. 'அதோ அந்தப் பெண் ஏனோ எழுந்து கதவருகில் போகிறாளே, இதோ பாலம் வந்து விட்டது. மூக்காட்டைக் காணோம். ஆம்....என் சீதா தான்!' அவன் அவளை நெருங்குவதற்குள் 'படக்'கென்று கதவைத் திறந்து அவள் குதித்து விட்டாள். அடுத்த கணம் 'சீதா' என்றலறிக் கொண்டு அவனும் பாய்ந்து விட்டான் கீழே. நுங்கும் நுரையுமாய் இரு கரையையும் தொட்டுக் கொண்டு ஓடிய காவிரியில் இரு உயிர்கள் உயிருக்கு மன்றாடுவதைப் பற்றிச் சிறிதும் கவலையின்றி அந்தப் புகைவண்டி தன் போக்கில் போய்க் கொண்டே இருந்தது.

* * *

காவேரிப் பாலத்துக்கு வெகு அருகிலிருந்த அந்தச் சிறு பாளையத்தில் எல்லோராலும் மதிக்கப்பட்ட மனிதரான சுந்தரத்தின் வீட்டில் இன்னும் விளக்கெரிந்து கொண்டிருந்தது. அவர் கையில் கந்த புராணம் வைத்து அந்தச் சிறு வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்தார். வலது கையில் இருக்க வேண்டிய புத்தகம் இடது கையில் இருந்தது! ஏன்? வலதுகை முழங்கைக்குக் கீழ் வெட்டப் பட்டிருந்தது. அந்த ஒற்றைக் கை மனிதர் அந்த ஊருக்கு வந்து மூன்றாண்டுகள் இருக்கும். பைத்தியக்காரர்போல் அங்கு வந்த அவர் அவ்வூர்ப் பெருந்தனக்காரரின் நல்ல பண்பால் கண்யமான வாழ்க்கை வாழ வசதி செய்து கொடுக்கப்பட்டார்.

தினந்தோறும் அவ்வூர் முருகன் கோவிலுக்கு இருமுறை செல்வார். அங்கே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் மன முருகக் கும்பிட்டபடி நிற்பார். அவர் வேறு யாருமல்ல. சீதாவின் தந்தையே தான். ஆம். மூன்றாண்டுகளுக்கு முன்னர் விமான விபத்தில் தம் கையுடன் பொருளையும் இழந்த அவருக்குப் பைத்தியமே பிடித்து விட்டது. ஊர் ஊராய் அலைந்து இறுதியில் இங்கு வந்து சேர்ந்து ஒருவாறு அமைதியுடன் வாழ்ந்து வந்தார். அந்தக் கிராமாந்திரச் சூழ்நிலை ஓரளவுக்கு அவருக்கு நிம்மதி அளித்தது. ஆயினும் அவரது உயிருக்குயிரான ஒரே மகளைக் காண முடியாமலே போய் விடுமோ என்ற எண்ணம் எழும்போதுதான் அவர் சிந்தைகலங்கும். 'தெய்வமே! எனக்கு இந்



சென்னை ஸர் தியாகராயா கல்லூரியில் பொருளாதாரத் துறையில் தலைமைப் பேராசிரியராக இருக்கும் வேதகிரி ஷண்முகசுந்தரம் அவர்கள் மலேயா, ஜப்பான், இந்தோனீஷியா, தாய்லந்து முதலிய நாடுகளில் எல்லாம் சொற்பொழிவுகளும் ஆராய்ச்சிகளும் நிகழ்த்தி விட்டுச் சமீபத்தில் சென்னைக்குத் திரும்பினார். பொருளாதாரத்தில் பின்தங்கிய கிழக்கு ஆசிய நாடுகளில் வீட்டுத் தொழில்களின் சமீபகால அபிவிருத்தியை விசேஷமாக ஆராய்ந்து திரும்பி யிருக்கிறார்.

தக் கோலத்தில் அவனியில் வாழ்வதற்கு இல்லை. என் குடும்பத்தாரிடையில் வாழத் தைரியமில்லை. உன்னருளால் என் குழந்தையை மட்டும் எனக்கு ஒரு முறை கண்ணில் காட்ட மாட்டாயா?" என்று மனதார வேண்டிக் கொண்டே புத்தகத்தை மூடி வைத்துப் படுக்கச் சென்றார்.

இறைவன் அவரது வேண்டுகோளுக்கு இவ்வளவு விரைவில் செவி சாய்ப்பான் என்று அவர் கனவிலும் கருதியிருக்கவில்லை. ஆம். அவர் படுத்த அடுத்த கணம் கதவு தட்டப்படும் ஓசையும், "ஸார்... தயவு செய்து கதவைத் திறக்கிறீர்களா?" என்ற தீனக் குரலும் எழுந்தன.

அவர் எழுந்து சென்று கதவைத் திறந்தார். வெளியில், இடுப்பில் ஈர வேஷ்டியுடனும், தோளில் மயக்கமுற்ற ஓர் மங்கையுடனும் ஒரு இளைஞன் குளிரால் நடுங்கிய வண்ணம் நிற்பதைக் கண்டார். அவனை நோக்கி எந்தவிதமான கேள்வியும் தொடுக்காமல், "வாப்பா, உள்ளே கொண்டு வா. குழந்தையை இப்படிக் கிடத்து" என்று உபசரித்துத் தம் கட்டிலைக் காட்டினார். தெய்வமே எதிரில் வந்து கைகொடுத்து உதவுவது போல் இருந்தது ராகவனுக்கு.

அவர் கொடுத்த உலர்ந்த துணியினால் சீதாவின் தலைமுதல் கால்வரை துவட்டினான் ராகவன். சுந்தரம் அவனுக்கு வேண்டிய சிச்ருஷைகளைச் செய்தார்.

ஹரிக்கேன் விளக்கை எடுத்து அவன் முகத்தருகில் பிடித்த வண்ணம் அவள் மூக்கருகில் கைவைத்துப் பார்த்தான் ராகவன். அவன் முகம் மலர்ந்தது. அவரிடம் ஏதோ சொல்ல எண்ணியவனாய், ராகவன் அவரைப் பார்த்த பொழுது நீர் மல்கிய கண்களுடன் சீதாவையே பார்த்த வண்ணம் நின்றிருந்தார் அவர். வியப்புக் கடலில் மூழ்கிய ராகவனை, "குழந்தையின் பெயர் சீதாவா?" என்ற அவரது குரல் தட்டி எழுப்பியது. "ஆம்" என்றான் அவன் தளர்ந்த குரலில்.

"அம்மா...சீதா..." என்றலறியவண்ணம் அவளது கால்மாட்டில் அமர்ந்து 'கோ'வென அழுதே விட்டார். ராகவன் வியப்புடன் ஒன்றும் புரியாது அசையாது நின்று கொண்டிருந்தான்.


சிறிது நேரம் கழித்து அவன் பக்கம் திரும்பிய அவர் தமது கதையைக் கூறி முடித்தார். "எனது ஒரே பெண்ணின் கலியாணத்தைக் கூடக் காணக் கொடுத்து வைக்கவில்லை நான். என் செல்வத்துக்கு ஏன் இத்தகைய இன்னல் நேர வேண்டும்?" என்று புலம்பினார். ராகவன், "மன்னிக்க வேண்டும்..." என்ற பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்து அவர்கள் கதையைச் சொன்னான்.

அவனது வெள்ளை உள்ளம் அவரை வெகுவாகக் கொள்ளை கொண்டது. "அழியவிருக்கும் பொருளைக் காப்பவன் எவனோ அவனுக்குத்தானே பொருள் சொந்தம்? எனவே என் சீதா உங்களுக்குச் சொந்தமில்லையென்று சொல்ல எனக்கே உரிமையில்லை" என்று தழுதழுத்த குரலில் கூறினார் சுந்தரம்.

இதற்குள் சீதாவுக்குச் சுயநினைவு வந்துவிட்டது. மீண்டும் அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தினர் ராகவனும் சுந்தரமும். மறுபடியும் அவள் தன் நிலையைப் புரிந்துகொள்ள இரண்டு மணிநேரம் ஆயிற்று.

"சரி, புறப்படுங்கள். இந்த முகூர்த்தத்திலேயே உங்கள் கலியாணத்தை முடித்துவிட வேண்டும். எம்பெருமான் அருளால் எல்லாம் இனிது நடக்கும்" என்று சுந்தரம் கூறும்பொழுதே தூரத்தில் கோவில் மணி டாண்...டாண் என்று ஒலித்தது. ஒற்றை மாட்டு வண்டியில் ஈரோட்டை அடைந்து அங்கிருந்து டாக்ஸியின் மூலம் கோவையை அடைந்தனர்.

காலை மணி ஆறு அடித்தது. கெட்டி மேளம் முழங்கச் சீதாவின் கழுத்தில் ராகவன் தாலியைக் கட்டினான். சுந்தரத்தின் கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன.



ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல்
பாத்திரங்கள்
உயர்ந்த ரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2

'வெயிற்காலத்து வயிற்றுக் கோளாறுகளை' தளதளக்கும் பானம் நிறுத்துகிறது



வெயில் காலத்தில் உங்கள் வயிறு மிகச் சுலபமாகக் கெட்டுவிடுகின்றது. உங்கள் வாயில் ஒரு வித துர்க்கந்தம் ஏற்படுகிறது. தவிர நீங்கள் தளர்ச்சியாயும், சோம்பலுடனும் இருக்கின்றீர்கள். ஈனோ உங்கள் வயிற்றைச் சீராக்கி உங்கள் தேகநிலையை நேர்செய்து அதை ஆரோக்கியமாயும், சுறுசுறுப்பாயுமாக்குகின்றது.

ஈனோ எளிமையானது எனினும் வயிற்றின் புளிப்பை நீக்குவதில் அற்புத சக்தி வாய்ந்தது. எவ்வித கெடுதியும் செய்யாமல் அது புளிப்பு மிகுதியாலுள்ள அஜீர்ணம், நெஞ்செரிச்சல், வாயுப்பொருமல் முதலிய உபாதைகளை துரிதமாயும், நிச்சயமாகவும் நிவர்த்திக்கிறது. எட்டே செகண்டுகளில் நீங்கள் சுகம் பெறுகிறீர்கள் — வயிற்றுக்கு மட்டுமல்ல, வாய்க்குக்கூட!

பித்தம் மீறி புளிப்பதாலோ அல்லது உண்பது உங்கள் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமலிருந்தாலோ ஈனோவின் விசேஷசக்தி, ஜீரண உறுப்புகளை மீண்டும் ஒழுங்குபடுத்த உதவுகிறது. உங்களுக்கு லேசாய பேதியாக விரும்பினால் காலி வயிற்றில் கொஞ்சம் பெரிய 'டோஸ்' உட்கொள்ளவும். எப்பொழுதும் ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'டை கையிருப்பில் வைத்துக் கொள்ளவும்.

அது உங்களுக்கு குணம் செய்வதுடன் குளுமையையும் புத்துணர்ச்சியையும் தருகிறது

ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'



பெரிய புட்டி ரூ. 3/12
சிறிய புட்டி ரூ. 2/6

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகளாகும்

ENO. 1508 (Tam.)



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை

28. பாவநாசம்

பொய் அறியாப் புலவர் பாடும் பெருமை உடையது பொருனை என்னும் திருநதி. "தமிழ் முனிவன் வாழும் மலை" என்று தக்கோர் புகழும் பொதிய மலையிலே பிறந்து ஒரு காத வழி நடந்து, தென் தமிழ் நாட்டிலே பாலருவியாய் வீழ்ந்து பரந்து பாயும் பொருனையாற்றின் அழகினைப் புகழ்ந்தனர் பாவலரும் நாவலரும்.

"திங்கள்முடி சூடுமலை
தென்றல்விளை யாடுமலை

தங்குமுகில் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை

அங்கயற்கண் அம்மை,திரு
அருள்சுரந்து பொழிவதெனப்

பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே"

என்று ஒரு குறவஞ்சியின் வாயிலாக அம் மலையின் வளம் பாடி மகிழ்ந்தார் குமர குருபர முனிவர். "தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாடு" என்று மாணிக்க வாசகர் வியந்து போற்றிய நன்னாட்டை வாழ்விக்கும் பொதியமலையிலே குளிர்மை வாய்ந்த இயற்கைக் காட்சிகளைக் கண்டு இறுமாப்படைகின்றாள் குறவஞ்சி. "பெருமை சான்ற பொதிய மாமலையே! தண்மையுடைய வெண்மதியை நீ முடியிலே அணிந்தாய்! வண்மையுடைய மேகத்தை வண்ணத் துகிலாக உடுத்தாய்! நீ ஈன்றெடுத்த தென்றல் என்னும் பூங்காற்று எம்மருங்கும் தவழ்ந்து விளையாடக் கண்டு மகிழ்ந்தாய்! எத்திசையும் புகழ் மணக்கும் முத்தமிழின் முது பெருந் தொண்டனாகிய திரு முனிவன் என்றும் இருந்து வாழ இடம் தந்தாய்! அகிலமெல்லாம் காத்தருளும் அங்கயற்கண் அம்மையின் கங்கு கரையற்ற கருணை போல் பொங்கிப் பொழியும் பொருனையாற்றின் அருவியால் பொலிவுற்றாய்! இயற்கை இன்பம் தரும் தென் மலையாகிய நின்னை என் மலையாகப் பெற்றேன்; பெருமிதம் உற்றேன்" என்று செம்மாந்து பேசுகின்றாள் அம் மங்கை.

இத்தகைய இனிய தமிழ் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது பாவநாசம் என்னும் பழம்பதி. பொருனையாற்றின் புண்ணியத் துறைகளுள் தலைமை சான்றது அப்பதியே. மெய்யடியாரது பாவத்தையெல்லாம் போக்கவல்ல பரம்பொருளாகிய ஈசன், பொருனையாற்றின் கரையிலே கோயில் கொண்டுள்ளான். உலகம்மை என்னும் உமா தேவியோடு பாவநாசனாகிய ஈசன் அமர்ந்தருளும் திருக்கோயிலின் முன்னே பணிந்து செல்லும் பொருனையாற்றின் தெளிவையும், அவ் ஆற்றில் இறங்கி நீராடுதற்கு அமைந்த படித்துறையின் அழகையும் காண்பது ஓர் ஆனந்தம். திருவாரூர்த் தேர் அழகும், திருவிடை மருதூர்த் தெரு அழகும், பாவநாசப் படி அழகும் பாராட்டத் தக்கனவாகும். பழமரச் சோலையின் நிழலில் பாங்குற அமைந்த பாவநாசப் படித்துறையை,

"போதும்பர் நீழல் குயிர் துங்கப்
பொலிந்தபடித் துறையும்"

என்று பாராட்டினர் ஒரு பாவலர். அப் படித்துறையை மருவி ஓடும் புண்ணிய நதியிலே எண்ணிறந்த மீன்கள் அணியணியாக நீந்திச் செல்லும்; ஆற்றின் மீது அழகாகக் கவிந்த மரக் கிளைகளில் வானரங்கள் மந்தியோடு கொஞ்சும்.

இயற்கை நலம் வாய்ந்த பாவநாசப் படித்துறையில் நாள்தோறும் நீராடிப் பூசனை புரிந்து உலகம்மையை உள்ளன்போடு வழிபட்டு வந்தார் ஒரு கவிஞர். 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்ற அமுத வாக்கின் உண்மை யறிந்த அப் பெரியார், உலகம்மையின் அருளைப் பெறுமாறு உள்ளம் கசிந்து பாடினர்.

"தாயென்றும் மனைவி என்றும்
தந்தைதான் என்றும் காதல்
பேயென்றும் வினைசூழ்ந்து என்னைப்
பிடித்தது பிடிய டாமல்
போயென்ற வருவது உன்முன்
போதுவாய் எனப் போதுன்
வாயென்ற குமுதப் போது
மலருமோ உலக மாதே!"

(போது வாய்—செல்வாயாக)

என்று வேண்டினர்.

இக் கவிஞர் ஒருகால் உலகம்மையிடம் பிரியா விடை கொண்டு இராமேசுவரத்திற்குச் சென்றார்; இராமநாதனைக் கண் களிப்பக் கண்டு வணங்கினர். அக்காலத்தில் இராமேசுவர தரிசனம் செய்தோர் இராமநாதபுரம் போந்து சேதுபதியையும் காண்பது வழக்கம். இராமநாதனை வழிபட்ட பலன் சேது மன்னரைக் காண்பவர்க்கே சித்திக்கும் என்பது அன்னார் கொள்கை. அந்த முறையில் இராமநாதபுரத்திற்குச் சென்றார் கவிஞர். ஆயினும் மாளிகையின் உள்ளே தலைகாட்ட முடியவில்லை. இவரை 'ஏன்' என்று கேட்பவர் அங்கு எவரும் இல்லை. பகல் முழுதும் பசியைப் பொறுத்துக்கொண்டு தலைவாசலில் காத்திருந்தார்; மாலைப் பொழுதில் மாளிகையை வலம் வந்து கடை வாசலை அடைந்தார். தம் தலைவிதியை நொந்து ஒரு தமிழ்ப் பாட்டு இசைத்தார்.

"முத்தலை சிந்தும் பொருநா
நந்தித்துறை மூழ்கி எழுந்து
அந்தலை நின்ற விடாய் ஆறிக்
கல்வி அலைந்து நறும்
கோத்தலர் சண்பகக் காவோடு
நின்று குலாவிய யான்
இந்தலை வந்து கடைத்தலை
காத்தல் இளந் தலையே"

(இளந்தலை—இளப்பம், இழிவு)

"அந்தோ! எந்த இடத்தில் இருத்தற்குரிய நான் இந்த இடத்தில் வந்து இடர்ப்படுகின்றேன்! பொருநைத் துறையிலே நீராடி, பூஞ்சோலையிலே இளைப்பாறி, புலவர் குழாத்திலே இணைந்துப் பழகிய யான் அழைப்பாரும் அடுப்பாரும் இன்றித் தன்னந் தனியனாய்க் கடைத்தலையில் காத்திருக்கின்றேனே! இது சனமன்றோ?" என்று அக்கவிஞர் கசிந்துருகிப் பாடிய பாட்டு, சேதுபதியின் செவியில் விழுந்தது. உடனே கடைவாயில் திறந்தது. செஞ்சொற் கவி பாடிய பாவநாசப் புலவரைச் சீராக வரவேற்றார் சேது மன்னர்; பிழை பொறுக்குமாறு வேண்டினர்; வரிசை யறிந்து பரிசளித்தார். சேதுபதியிடம் விடைபெற்றுப் பாவநாசப் பதியை வந்தடைந்தார் பாவலர்.

நீரும் நிழலுமற்ற நிலங்களில் நெடு நாள் அலைந்து திரிந்த கவிஞர் திரும்பி வந்தவுடன் நோய்வாய்ப்பட்டார். மருத்துவர் வந்து மாறி மாறிப் பார்த்தனர்;

மருந்துகளை மாற்றி மாற்றிக் கொடுத்தனர். நலமொன்றும் காணாத கவிஞர் மனம் சலித்தார். உள்ளம் கரைந்து உலகம்மையிடம் தன் குறையை முறையிட்டார்.

"பண்டிதரே வாரும்
பரிகாரம் பாரும், வெகு
கண்டிதமாய் நோய்க்கு உமது
கைம்மருந்து தாரும் என்றே
கொண்டிதனுள் நீருமென்றுட்
கொண்ட மருந் தெத்தனையோ
உண்டிதம் நான் காணேன்
உலகுடைய மாதாவே"

என்ற பாட்டால் உலகம்மையின் அருள் பெற்று உடல் நலமுற்றார் கவிஞர்.

இக்கவிஞரது மரபிலே தோன்றிய புலவர் பெருமான் சிவஞான முனிவர். பாவநாசத்தைச் சேர்ந்த விக்கிரமசிங்கபுரத்திலே பிறந்து, முக்காளலிங்கன் என்னும் பிள்ளைப் பெயர் பெற்ற இவ்வித்தகர், இளமையிலேயே திருவாவடுதுறை மடத்தை அடைந்து துறவு பூண்டார். தென்மொழியும் வடமொழியும் தெள்ளத் தெளிய உணர்ந்தார்; செயற்கரிய தவம் செய்து செம்மையுற்றார்.

"வடநூற் கடலும்
தென்தமிழ்க் கடலும்
முழுதுணர்ந் தருளிய
முனிவரன், துறைசை
வாழ்சிவ ஞான மாதவன்"
(துறைசை—திருவாவடுதுறை)

என்று அவர் புலமைத் திறத்தையும் தவத்தின் சிறப்பையும் தமிழகம் வியந்து புகழ்ந்தது. சைவ சித்தாந்தத்தின் உயிர் நாடியாக விளங்கும் சிவஞான போதம் என்னும் செம்மை சான்ற ஞானநூலுக்குப் பேருரை கண்ட பெரியார் இவரே! திருக்குறளின் கருத்துக்களை நாடறிந்த கதைகளின் வாயிலாக விளக்கிச் "சோமேசர் முதுமொழி வெண்பா" என்னும் பெயரால் அரியதொரு நூல் இயற்றிய புலவரும் இவரே! வடமொழிக்கும் தென்மொழிக்கும் "இலக்கணம் ஒன்றே என்று எண்ணுக" என்று ஒரு சாரார் இந்நாட்டிலே பரப்பிய கொள்கையை மறுத்து, தென்மொழியாகிய தமிழின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்திய பெருமான் இவரே! இவ்வாறு சிவநெறிக்கும் தமிழ் மொழிக்கும் சீரிய தொண்டு செய்த சிவஞான முனிவர் பாவநாசத்தை யடுத்த சிங்கையம்பதியிலே கோயில் கொண்டு செந்தமிழ் நாட்டை வாழ்த்துகின்றார்.

டி.கே.சி.யின் கடிதங்கள்

தென்காசி,
3—2—40

எப்படியோ தற்காலத்து இளைஞர்கள் திடகாத்திரமாய் இல்லாமல் இருக்கிறதும், உண்டி சுருக்குதலும், ஏதோ அழகு என்று எண்ணி நடந்துகொள்ளுகிறதாகத் தெரிகிறது. மேல் நாட்டுப் பெண்கள் இருபது வருஷத்துக்கு முன் மெலிவே (மென்மை அல்ல) ஸ்திரீ லக்ஷணம் என்று கருதி அதற்காகத் தேகத்தைப் பல சித்திரவதைக்கும் உள்ளாக்கி வந்தார்கள். அந்தக் காலத்து ஆங்கிலப் பத்திரிகை எதைப் பார்த்தாலும் விளம்பரப் பத்திகளில் பெண்களின் உருவங்கள், கலிங்கத்துப் பரணி ஆசிரியர்

"பெருநெடும்பசி பெய்கலம் ஆவன
பிற்றை நாளின்முன் நாளின் மெலிவன"

என்றும்,

"அட்டமிட்ட நெடுங்கழை காண்கில், என்
அன்னை அன்னையென் றுஞ்ம் குழவிய"

என்றும் பேய்களைப் பாடிய செய்யுள்களுக்குப் படம் போட்டுக் காட்டின மாதிரியாகத்தான் இருக்கும். ஆனால், அதெல்லாம் இப்போது பழங்கணக்காய்ப் போய் விட்டது. அந்தப் பெண்களுக்குப் பதிலாக நம்முடைய இளைஞர்கள் அதாவது, ஆடவர்கள், மெலிவு முறையைக் கையாண்டு வருவதாகத் தெரிகிறது! இந்த முறை போக வேண்டும். உடலே முக்கியம் என்ற கொள்கை எங்கும் பரவ வேண்டும். முக்கியமாகப் பள்ளிக் கூடங்களில் பரவ வேண்டும். "நோயற்ற வாழ்வே வாழ்வு" என்ற சொல்லுக்குப் பொருளும் பாவமும் எவ்வளவோ இருக்கிறது. ஆசிரியர்கள் இதைக் கவனித்த பாடாகவே இல்லை. ஆகார முறையை எல்லாம் ஒழுங்குபடுத்திக் கொண்டு தேகத்தைத் திடமாக்கிக் கொள்ளலாம். கஷ்டம் ஒன்றும் இல்லை.

இங்ஙனம்
டி. கே. சிதம்பரநாதன்

கீழ் நாடுகளுக்கு

பறந்து செல்லுங்கள்

சிங்கப்பூர், பாங்காக்
ஹாங்காங்
டோக்கியோ



துரிதமான, சௌகரியமான இணைப்பு சர்வீஸ் மேற்கண்ட இடங்களுக்கு உண்டு.

ஜாகர்தா — மணில்லா
செய்கோன் — டில்லி

ஏயர் இந்தியா இன்டர்நேஷனல் மூலம் கான்ஸ்டலேஷன் ரகத்தில் கீழ் நாடுகளுக்கு பறந்து செல்லுங்கள். பிரயாணத்தின்போது வெஜிடேரியன் மற்றும் நான்-வெஜிடேரியன் சாப்பாடு இலவசம்.

நீங்கள் பிரயாணம் செய்கையில் தனிக்கட்டணம் எதுவுமின்றி வழியிலுள்ள எந்த ஸ்டேஷனிலும் இறங்கிக் கொள்ள முடியும். உங்கள் இஷ்டம்போல் வேண்டிய நாட்களோ வாரங்களோ கழித்தபின் நீங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு பறந்து செல்லலாம்.


பிரதி வெள்ளிக்கிழமை: பம்பாய்-மதராஸ்-சிங்கப்பூர்

பிரதி ஞாயிற்றுக்கிழமை: பம்பாய்-கல்கத்தா
பாங்காக்-ஹாங்காங்-டோக்கியோ

ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல்

மதராஸ்

AII. 1802





அத்தியாயம் 33

"மன்னிப்பாயா ?"

பட முதலாளி கதிர்வேல் அவர்கள் அன்று எங்கள் வீட்டுக்கு விஜயம் செய்ததற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. இந்தப் படத்தின் மூலம் எனக்கு மதிப்பு ரொம்ப உயர்ந்து விட்டபடியால், உடனே அடுத்த படத்தை ஆரம்பித்து விடுவதற்கு அவர் விரும்பினார்.

கதிர்வேல் அவர்களைப் பார்த்ததும் ராஜாராமுக்குத் தலைகால் புரியவில்லை. அதுவரை அவர் என் வீட்டுக்கு வந்ததில்லை. என்னை அர்த்த புஷ்டியுடன் பார்த்து விட்டு ராஜாராம் அவரை உள்ளே அழைத்து வந்து உபசரித்தார்.

கதிர்வேல் அவர்கள் சுற்றி வளைக்காமல் நேரேயே பேச்சை ஆரம்பித்தார். "அடுத்த படத்தை உடனே ஆரம்பித்தாக வேண்டும், ராஜாராம்! அதனால்தான் நானே வந்தேன். சூட்டோடு சூடாக இன்னொரு படம் எடுத்து வெளியிட்டு விட்டால் அதுவும் நிச்சயமாக வெற்றி அடைந்து விடும். அதன் பிறகு விமலாவுக்கும் புகழ் நிலைத்து விடும்" என்றார்.

"விமலாவுக்கு நடிப்பைத் தொழிலாகக் கொள்ளும் எண்ணம் கொஞ்சங்கூடக் கிடையாது, ஸார். இரண்டு மூன்று இடத்திலிருந்து இவளைத் தேடிக் கொண்டு வந்தார்கள். ஆனால் நான் பார்க்க முடியாதென்று அனுப்பி விட்டேன். இப்போதுதான் ஒரு படம் முடிந்திருக்கிறது. அதற்குள்ளேயே இன்னொன்றில் நடிப்பது என்றால் சிரமம் இல்லையா? அதைத் தவிர விமலாவுக்குச் சில சொந்த விஷயங்கள் வேறு செய்ய வேண்டியிருக்கின்றன" என்றார் ராஜாராம்.

நான் திகைத்தேன். ஆனால் ராஜாராம் என்னைப் பார்த்த பார்வையிலிருந்து நான் வாயை மூடிக் கொண்டிருப்பதுதான் சிறந்தது என்று எனக்குத் தோன்றியது. பேசாமல் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

"என்ன காரியமாக இருந்தாலும் செய்து கொள்ளட்டும். நானே வேண்டிய வசதிகள் செய்து தருகிறேன். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?" என்றார் கதிர்வேல்.

கதிர்வேல் சற்று வயதானவர். இந்த சினிமாத் துறையில் நன்றாகப் பழுத்த அனுபவமுள்ளவர். அவருக்கா ராஜாராமைத் தெரியாது? பணம் நிறையக் கேட்பதற்குத்தான் அடி போடுகிறார் என்பது தெரிந்தும் முதலில் தெரியாத மாதிரியே பேசினார்.

உடனே என்னைப் பார்த்து, "என்ன விமலா? நீ ஒன்றுமே சொல்லவில்லையே? அடுத்த படம் ஆரம்பிக்கலாமல்லவா?" என்றார்.

"உங்கள் சௌகரியப்படி செய்யுங்கள்" என்று கூறினேன்.

"ராஜாராம் என்ன நினைக்கிறார் என்று எனக்குப் புரிகிறது. உனக்கு இந்தப் படத்துக்கு இன்னும் அதிகமாகத் தரவேண்டுமென்று நினைக்கிறார். அதெல்லாம் நானே ஏற்பாடு செய்கிறேன். நாளைய தினம் நீங்கள் நமது காரியாலயத்துக்கு வந்து விடுங்கள். அடுத்த படத்தைப் பற்றி யோசிக்கப் போகிறோம்" என்றார்.


"அவசியம் வருகிறேன். ஆனால், என்னை நடிக்கச் சொல்லி இன்னொரு படம் எடுப்பது என்பது ரொம்ப சிரமம்" என்றேன்.

"ஏன் விமலா? உனக்கு எவ்வளவு வசதிகள் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாமே?"

"நான் என்னைப் பற்றிச் சொல்லவில்லை. என்னை இப்போது ஒருவருக்கும் பிடிக்கவில்லை. உங்களையும் டைரக்டரையும் தவிர மற்ற அனைவரும் ஒருமுகமாக என்னை அலட்சியம் செய்கிறார்கள். நான் அதைச் சிறிது கூடப் பொருட்படுத்தவில்லை. ஆனால் அதன் மூலம் படத்தில் ஏதாவது கோளாறு ஏற்படக் கூடாதே என்ற கவலையால் சொன்னேன்" என்றேன்.

"விமலா! இந்த விஷயத்துக்கு நாம் கவலைப்பட்டுப் பிரயோஜன




மணியம்

மில்லை. யாராவது ஒருவர் புகழடைந்தால் அதைக் கண்டு மற்றவர்களுக்குப் பொறாமை ஏற்படுவது சகஜம். நானும் பாஸ்கரனும் உன்னைக் கவனித்துக் கொள்வதால் யாராலும் உன்னை ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனல் அவர்கள் ஆத்திரப்படுவதை எங்களால் தடுக்கவும் முடியாதல்லவா? இதெல்லாம் சின்ன விஷயம். நமக்குப் படம்தானே முக்கியம்?"

"உண்மைதான். ஆனல் படம் வெற்றியடைய அனைவருடைய ஒத்துழைப்பும் வேண்டுமே?" என்றேன்.

"ஆமாம். வேண்டியதுதான். ஆனல் நாம் என்ன செய்தாலும் இதயபூர்வமான ஒத்துழைப்பு கிடைக்கப் போவதில்லை. ஏதோ அவர்கள் செய்வதை வைத்துக் கொண்டு நடத்திக்கொண்டு போகவேண்டியதுதான். அது என் கவலை. அதை என்னிடம் நீ விட்டுவிடு. உன் காரியத்தை நீ மறுபடியும் சரியாகச் செய்து விட்டால் போதும்" என்ருர் பட முதலாளி கதிர்வேலு.



"என்னல் இயன்ற அளவு ஒத்துழைக்கிறேன்" என்றேன்.

பட முதலாளி கதிர்வேல் அவர்களுடைய டிரைவர் சில புஸ்தகங்களைக் கொண்டு வந்து வைத்தான்.

"இந்தா, விமலா! இந்தப் புத்தகங்களிலெல்லாம் உன்னுடைய புகைப் படங்கள் இருக்கின்றன. இந்தப் பெரிய புத்தகத்தில், 'கவிஞனின் காதல்' படத்தைப் பற்றிப் பல பத்திரிகைகளில் வந்த விமரிசனங்கள் இருக்கின்றன. எல்லாப் பத்திரிகைகளிலும் உன்னைப் பற்றித்தான் பாராட்டி எழுதியிருக்கிருர்கள். போட்டோ ஆல்பங்களை நீயே வைத்துக் கொள். இந்தப் புத்தகத்தை மாத்திரம் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடு" என்று கூறி விட்டுப் புறப்பட்டார்.

அவர் சென்றதும் ராஜாராம், "ஆள் ரொம்பக் கெட்டி. பேசவே இடங்கொடுக்க வில்லையே? ஆனல் அவருக்கு எத்தனை அனுபவம் இந்தமாதிரி ஏற்பட்டிருக்கும்!" என்ருர்.

"ஆமாம்! உங்களுக்கு எதற்குப் பணம் ராஜாராம்? எதற்காக அவரிடம் அப்படி அசட்டுத்தனமாகப் பேசினீர்கள்? அவர் நான்தான் பணத்துக்கு ஆசைப்படுகிறேன் என்று எண்ண மாட்டாரா?" என்றேன்.

"இந்து! எனக்கு எதற்காகப் பணம் வேண்டும்? பணம் இருக்கிறதோ இல்லையோ இரண்டு வேளைச் சாப்பாடு எனக்கு யாராவது போட்டு விடுவார்கள். எனக்கென்ன கவலை? நான் ஒண்டிக் கட்டை. உன்னுடைய நன்மையை உத்தேசித்துத் தான் நான் அவ்வாறு பேசினேன்!"

"பணம் அதிகமாகக் கிடைத்து விட்டால் எனக்குப் பெரிய நன்மை ஏற்பட்டு விடுமா? எனக்கு உண்மையாக நன்மை செய்ய வேண்டுமென்ற ஆசை உங்களுக்கு இருந்தால்......" என்று கூறி நிறுத்தினேன்.

"இந்து! ரங்கதுரையை எப்படியாவது தேடிப் பிடித்து விடுகிறேன். ஆனல் அவரைப் பற்றிய தகவல் ஒன்றுமே தெரியவில்லையே? அவரைத் தேடுவதாக இருந்தாலும் கையில் கொஞ்சம் பணம் வேண்டும். இந்த விஷயத்தில் உன்னைவிட நான் அனுபவசாலி. இன்று கையில் ஆயிரக் கணக்காகப் பணம் இருப்பது போல் தோன்றும். பத்து நாட்களில் செலவழிந்து விடும். சம்பாதிக்கச் சம்பாதிக்கச் செலவும் இரண்டு மடங்காகும். உனக்குத் தெரியாது. இந்த விஷயத்தை மாத்திரம் எனக்கு விட்டு விடு. மேலும் நான் ஒன்றும் அநியாயமாகக் கேட்கவில்லையே?

"நீ உழைக்கப் போகிருய். அதற்குத் தகுந்த சன்மானம் தர வேண்டியது அவருடைய கடமை. உன்னை வைத்து லக்ஷ ரூபாய்க்கு மேல் அவர் சேர்த்து விட்டாரே! உனக்கும் தான் பங்கு கொடுக்கட்டுமே" என்ருர் அவர்.

"சரி! உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள். ஆனால் ரங்கதுரையைத் தேடுவதாகச் சொன்னீர்களே! எப்படித் தேடுவீர்கள்?"

"எனக்கு நிச்சயமாக ஒரு திட்டமும் மனத்தில் இல்லை. ஆனால் ரங்கதுரை எங்கெல்லாம் இருக்கக் கூடும் என்று தோன்றுகிறதோ அந்த இடத்துக்கெல்லாம் போய்த் தேடிப் பார்ப்பது. ரங்கதுரை முன்பு படித்துக் கொண்டிருந்த காலேஜில் விசாரிக்கலாம். சென்னையில் தேடலாம். தங்கபாண்டியன் பம்பாய்க்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அங்கு போய் விசாரிக்கலாம். அங்கெல்லாம் நானே நேரில் போய்ப் பார்க்கிறேன். ஆனால் அதற்கெல்லாம் பணம் வேண்டுமல்லவா?"

"அதுதான் உங்கள் இஷ்டம் என்று சொல்லி விட்டேனே. நீங்கள் இதையெல்லாம் செய்வதாக இருந்தால் இன்னொரு படத்தில் வேண்டுமானாலும் நான் நடிக்கிறேன். ஆனால் ரங்கதுரைக்கு ஒரு ஆபத்தும் நேர்ந்திருக்காதே?" என்றேன் கவலையுடன்.

"அப்படி ஒன்றும் ஆகியிருக்கும் என்று தோன்றவில்லை. இயன்றவரை தேடிப் பார்த்து விடுவோம்."

"அப்படியானால் சரி. எனக்கும் அவர் எங்கேயோ சௌக்கியமாக இருக்கிறாரென்றுதான் தோன்றுகிறது. நீங்கள் எப்போது இதைச் செய்யப் போகிறீர்கள்?"

"கூடிய சீக்கிரம் செய்கிறேனம்மா. முதலில் குங்குமத்துறைக்குப் போய் விட்டு வருகிறேன். ஒருவேளை அவர் அங்கு போய் உன்னைத் தேடிப் பார்த்திருக்கலா மல்லவா?"

"அப்படியே செய்யுங்கள்."

"விமலா! ஒரு முக்கியமான சமாசாரம் உன்னிடம் சொல்ல வேண்டும். ஆனால் அதை நான் இப்போது சொல்ல மாட்டேன்."

"இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்? சொல்வதாக இருந்தால் உடனே சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் பேசாம லிருக்க வேண்டும். அரைகுறையாக எதையாவது சொல்லி மனத்தைக் குழப்புவானேன்?"

"பிரமாதமான விஷயம் ஒன்றும் இல்லை, இந்து. நான் உனக்கு ஒரு துரோகம் செய்தேன். அதை உன்னிடம் சொல்லி மன்னிப்புக் கேட்க வேண்டும். அதுதான் என் நெஞ்சை உறுத்திக் கொண்டே இருக்கிறது."

எனக்கு அந்தப் பயங்கரமான இரவில் நடந்தது முழுதும் அப்படியே கண் முன்னால் வந்து நின்றது. பின்னர் அய்யாக்குட்டி பயமுறுத்தியது ஞாபகம் வந்தது. அதை நினைத்த போது கோபம் கூட வந்தது. ஆனால் உடனேயே, 'ஐயோ, பாவம்! நாம் அப்படிச் செய்ததற்கு வருந்தும்போது அவரிடம் கோபித்துக் கொள்வது நியாயமில்லை. மேலும் அதற்குப் பதிலாக எனக்கு எவ்வளவு நன்மைகள் செய்து விட்டார். அன்றும் அவர் தானே என்னைக் காப்பாற்றினார்?' என்று தோன்றியது.

"நீங்கள் என்னிடம் சொல்லி மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் செய்த தவறை உணர்ந்து விட்டால் போதுமானது. உங்கள் மேல் எனக்குத் துளிக்கூட கோபமோ வருத்தமோ இல்லை. அதை அடியோடு மறந்து விடலாம்."

"உன்னைப் போன்ற ஒரு பெண் ரத்தினத்தைக் காண்பது ரொம்ப அபூர்வம் இந்து! உன்னைப் பெற்ற உன் தாயார் எப்படியிருந்திருப்பாள் என்று சில சமயம் எனக்கு வியப்பாக இருக்கிறது" என்றார் ராஜாராம்.

அதன்பிறகு என் அன்னையும் தந்தையும் கல்யாணம் செய்து கொண்ட விவரங்களைப் பற்றியெல்லாம் அவரிடம் சொன்னேன். அவர்கள் பட்ட துன்பங்களையும், அதையெல்லாம் இன்பமாகவே என் அன்னை கருதியதையும் கூறும்போது என் மெய் சிலிர்த்தது. என் அன்னையைப் பற்றி எவ்வளவு தடவை பேசினாலும் எனக்கு அலுப்பதே இல்லை. அவளுடைய வாழ்க்கையில் ஏதோ ஒன்று உள்ளத்தைக் கவர்ந்து விடுகிறது. அந்த மறைந்திருக்கும் பொருள் அவள் என் தந்தை மீது வைத்திருந்த பரிசுத்தமான அன்புதான் என்று எனக்குத் தோன்றுகிறது. அவளுடைய நினைப்பே எனக்கு எல்லாத் துன்பங்களையும் சகித்துக் கொள்ள ஆதரவாக இருந்தது. இப்போதும் அவளுடைய நினைப்புத்தான் எனக்குத் தைரியமளித்து வருகிறது.

அத்தியாயம் 34

கொந்தளிப்பு

அடுத்த படம் மிகத் துரிதமாக எடுப்பதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இது ஒரு சமூகக் கதை. இந்தக் கதையையும் எனக்குப் பிடித்து விட்டது. கொந்தளிக்கும் உணர்ச்சிகளை வெளியிடுவதற்குப் பூரண வாய்ப்பு எனக்கு இந்தப் படத்தில் தான் கிடைத்தது.

புஷ்பாவும், சுந்தரும் காதல் மணம் புரிந்து கொண்டவர்கள். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். ஒரு நாள் இரவு புஷ்பா தன் கணவன் கத்தியைக் கையில் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறாள். வெறி பிடித்த மனிதனாக அவன் அச்சமயம் தென்படுகிறான். மறுநாள் சரியாக இருக்கிறான். புஷ்பாவுக்குத் தன் கணவனுக்குச் சித்தப் பிரமை ஏற்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. அந்தக் கணம் முதல் சுந்தரத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறாள். நாளடைவில் பைத்தியம் முற்றிக் கொண்டே வருகிறது. புஷ்பாவின் மனம் துடிக்கிறது.

கணவனுக்குப் பைத்தியம் என்று வெளியில் சொல்லவும் முடியவில்லை. யாரிடமாவது சொன்னால் அவனைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பச் சொன்னால் என்ன செய்வதென்று கவலையாக இருக்கிறது. அவனையும் நம்பி வெளியே அனுப்ப முடியவில்லை. சுந்தரத்தின் வேலை போய் விடுகிறது. வருமானம் இல்லாமல் அவள் மிகவும் கஷ்டப்படுகிறாள்.

ஒரு சிநேகிதியின் மூலம் அவளுக்கு வேலை கிடைக்கிறது. குழந்தைகளை வீட்டில் சுந்தரத்துடன் விட்டுப் போக முடியவில்லை. பெரிய குழந்தையைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்து விடுகிறாள். சின்னக் குழந்தையை ஒரு அறையில் போட்டுப் பூட்டி விட்டு வேலைக்குப் போகிறாள்.

சுந்தரத்தின் நிலை எப்படியோ அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்குத் தெரிந்து விடுகிறது. அவனை ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதுதான் சரியென்று எல்லோரும் கூறுகிறார்கள். அவளுடைய சிநேகிதி சுபாஷிணி, "நீ இப்படி உழைத்தாயானால் சீக்கிரம் செத்துப் போய் விடுவாய். அப்புறம் உன் குழந்தைகளுக்கு ஆதரவு இல்லாமல் போய்விடும். அல்லது உன் கணவனே ஒரு நாள் நீ அயர்ந்திருக்கும் போது குழந்தைகளை ஏதாவது செய்து விட்டால் நீ என்ன செய்வாய்? அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்து விடு. அதனால் உன் தர்மத்திலிருந்து ஒரு நாளும் தவறியதாகாது" என்று சொல்கிறாள்.

கடைசியில் சுந்தரம் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குச் செல்கிறான். நாட்கள் செல்லச் செல்ல வறுமை அதிகரிக்கிறது. மனத்துயரம், வேலை, குழந்தைகளைக் கவனிப்பது, வீட்டு வேலை எல்லாமாகச் சேர்ந்து புஷ்பா உருக்குலைந்து போகிறாள். முதல் குழந்தையான ராமு ஒரு நாள், "எங்கப்பாவுக்குப் பைத்தியம் என்று என்னுடைய சிநேகிதர்களெல்லாம் பரிகாசம் பண்ணுகிறார்கள், அம்மா!" என்று கூறி அழுகிறான். புஷ்பாவின் இதயம் பிளந்துவிடும் போலிருக்கிறது.

பைத்தியக்கார ஆஸ்பத்திரி டாக்டர் நல்லவர். புஷ்பாவின் துயரத்தைக் கண்டு இரங்குகிறார். புஷ்பாவிடம் அவனைப் பற்றி அடிக்கடி பேசி அவனுடைய மூளைக் கோளாறுக்குக் காரணம் கண்டு பிடிக்க முயல்கிறார். இருவருக்கும் புலப்படவில்லை.

பின்னர் ஒரு நாள் டாக்டர் புஷ்பாவிடம், "சுந்தருக்கு நல்ல எழுத்துத் திறமை இருக்கிறது. மனத்தில் தோன்றுவதையெல்லாம் எழுதச் செய்தால் அவரைக் குணப்படுத்த ஏதாவது விஷயம் கிடைக்கும். நான் சொல்லிப் பார்த்தேன். செய்ய மாட்டேன் என்கிறார். நீ அன்போடு சொல்லி அவரை எப்படியாவது எழுதச் செய். பல நாட்கள் எழுதினால் ஒரு நாள் நமக்கு வேண்டிய விஷயம் கிடைக்கும்" என்கிறார்.

புஷ்பா சுந்தரத்திடம் கெஞ்சிக் கெஞ்சி எழுதச் சொல்கிறாள். வெகு நாட்கள் கழித்து அதிலிருந்து டாக்டருக்குச் சுந்தரத்தின் மூளைக் கோளாறுக்குக் காரணம் தெரிகிறது. அவன் ஐந்து வயதுக் குழந்தையாக இருந்தபோது அவனுடைய தாயாரைத் தந்தை குடி வெறியில் கொலை செய்ததைப் பார்த்திருக்கிறான். அப்போதே அவனுக்கு சித்தம் கலங்கி யிருக்கிறது. உள்ளத்திலேயே அந்தச் சம்பவம்

அழுந்தி விட்டது. புஷ்பாவை மணந்த போது அந்த அறிகுறியே வெளியில் தெரியவில்லை. ஒருநாள் ஏதோ காரணத்தால் இச் சம்பவத்தின் அதிர்ச்சி தூண்டப் பட்டிருக்கிறதென டாக்டர் புஷ்பாவிடம் கூறுகிறார்.

அந்தச் சம்பவத்தை ஒரு சித்திரமாக வரையச் செய்து அவனுக்குக் காட்டவே அந்த அதிர்ச்சியில் அவனுக்கு மூளை சரியாகி விடுகிறது. புஷ்பாவின் அன்பினால்தான் சுந்தரத்துக்கு உடம்பு குணமாயிற்று என்று டாக்டர் கூறுகிறார்.

அதன் பிறகும் கஷ்டம்தான். சுந்தரத்தின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்தபடியால் அவனுக்கு யாரும் வேலை தர மறுக்கிறார்கள். தினசரி அவன் மனம் புண்படுகிறது. அவள் சம்பாதித்துத் தான் சாப்பிட வேண்டியிருக்கிறதே என்று சுந்தரம் மனம் குன்றிப் போகிறான்.

அவனுக்குத் தெரியாமல் புஷ்பா அவன் ஆஸ்பத்திரியிலிருந்த போது எழுதியதை ஒரு பத்திராதிபரிடம் கொடுத்து வெளியிடச் செய்கிறாள். அதை எல்லாரும் ஆர்வத்துடன் படிக்கிறார்கள். அதன் பிறகு அவன் தொடர்ந்து கதைகளும் கட்டுரைகளும் எழுதுகிறான். நாளடைவில் அவன் சிறந்த எழுத்தாளனாகிறான். பிறகு எல்லோரும் சுகமாக வாழ்கின்றனர்.

இந்த உணர்ச்சியையே பிரதானமாகக் கொண்ட கதையைப் படம் பிடிப்பது ரொம்பக் கஷ்டம் என்று எல்லோரும் அபிப்பிராயப் பட்டார்கள். "சினிமா என்றால் 'அதில் 'ஆக்ஷன்' வேணும், ஸார்! இந்த மாதிரிக் கதை யெல்லாம் செல்லுபடியாகாது" என்று பலர் டைரக்டர் பாஸ்கரனிடம் கூறினார்கள். ஆனால் அவர் துணிந்து இந்தக் கதையையே எடுப்பதென்று தீர்மானித்தார்.

புஷ்பாவாக நான் நடிக்க ஆரம்பித்த பிறகு எனக்கு அந்தக் கதாபாத்திரத்தின்மீது அளவற்ற அனுதாபம் பிறந்தது. ஆனால் என் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது அவளுடைய நிலையே தேவலை என்று தோன்றியது. 'அவளுக்காவது விவாகமாகி இரண்டு குழந்தைகளும் பிறந்து விட்டன. கணவன் பைத்தியமாக இருந்தபோதிலும் அவனுக்காக உழைக்கிறோம் என்ற சந்தோஷமாவது இருக்கிறது. எனக்கு என்ன இருக்கிறது? நான் எதற்காக வாழ வேண்டும்? எதற்காகச் சம்பாதிக்க வேண்டும்? புஷ்பாவுக்காவது குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற லக்ஷியம் இருக்கிறது. எனக்கு என்ன லக்ஷியம் இருக்கிறது? நான் எதற்காக வாழ்கிறேன்? இந்தப் புகழினால் யாருக்கு என்ன பிரயோஜனம்?' என்று எண்ணும்போதெல்லாம் நெஞ்சு வெடித்து விடும்போல் தோன்றும். அப்படியே பிரமைபிடித்த மாதிரி மணிக் கணக்காக என்னை மறந்து உட்கார்ந்து விடுவேன்.

புதிய படத்தின் படப் பிடிப்புகள் ஆரம்பமாயின. வேலை இல்லாமல் சும்மாயிருப்பதைவிடப் படத்தில் நடிப்பது தேவலை என்று தோன்றியது.

இதற்கு இடையில் எனக்கு ஒரு பெரிய தொந்தரவு ஏற்பட்டு வந்தது. தினந்தோறும் யாராவது என்னைப் பார்க்க வந்து கொண்டிருந்தார்கள். பத்திரிகை நிருபர்களும், வேலை கேட்க வருபவர்களும், பணம் கேட்க வருபவர்களுமாக எப்போதும் வீட்டு வாசலில் நாலைந்து பேர்கள் நின்று கொண்டே இருப்பார்கள்.

என்னுடைய மனோநிலையில் எனக்கு யாரையும் பார்த்துப் பேச விருப்பம் இல்லாமலிருந்ததில் ஆச்சரியமில்லை அல்லவா? ஆனால் வருவோருக்கு இது தெரியுமா? அனைவரும் நான் கர்வம் பிடித்தவள் என்று நினைத்தார்கள்.

ராஜாராம் என்னிடம், "நீ இப்படி ஒருவரையும் பார்க்க முடியாதென்று சொல்வது சரியில்லை, இந்து. பத்திரிகையில் உன்னைப் பற்றி நன்றாக எழுதினால் அது உனக்கு நல்லது தானே?" என்று கூறினார்.

"எனக்குப் புகழ் வேண்டாம், ராஜாராம்! சில சமயங்களில் அருணா தேவியைப்போல் புகழடைய வேண்டுமென்று நான் எண்ணியது உண்மைதான். ஆனால் இப்போது புகழினால் என் உள்ளத்தில் எரியும் தீ அணையாது என்று எனக்குத் தெரிந்து விட்டது. இத்தனை பத்திரிகைகளில் புகழ்ந்து எழுதினார்களே. எத்தனையோ கடிதங்கள் வந்ததே. என் நெஞ்சத்தில் உள்ள எரிச்சல் சிறிதேனும் தணிந்ததா? இப்போது பணம் உங்கள் காரியத்துக்கு அவசியமாக

இருக்கிறது. அதற்காகத்தான் நடிக்கிறேன். என்னை ஒருவரும் புகழ வேண்டாம். அதை நான் விரும்பவில்லை'' என்றேன்.

"புகழ வேண்டாம். ஆனால் அவர்கள் உன்னைத் திமிர் பிடித்தவள் என்று இகழ வேண்டாமல்லவா?''

"இகழ்ந்தாலும் என்னை அது சிறிதும் பாதிக்காது. தயவுசெய்து என்னை இந்த விஷயத்தில் வற்புறுத்தாதீர்கள்! என் நிலை உங்களுக்குத் தெரியும். எனக்கு வருபவர்களிடம் சிரித்துப் பேசித் திருப்தி செய்ய முடியுமா? அன்று யாரோ ஒருவரை அழைத்து வந்தீர்களே அவர் கேட்டது போல் எனக்கு வெங்காய சாம்பார் பிடிக்குமா? சமைக்கத் தெரியுமா? பட்டுப் புடவை பிடிக்குமா? ஸில்க் புடவை பிடிக்குமா என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்டால் பதில் சொல்லத்தான் இப்போது எனக்கு இயலுமா? நீங்களே பதில் சொல்லுங்கள்!'' என்று சொன்னேன்.

அதன் பிறகு நான் என் காரியம் உண்டு, நான் உண்டு என்று இருந்து வந்தேன். ஸ்டுடியோவில் கூட எனக்கு இதனால் கெட்ட பெயர் ஏற்பட்டதென்பதை நான் அறிந்தேன். ஆனாலும் என்னால் கலகலப்பாக யாரிடமும் பழக முடியவில்லை.

புதியபடத்தில் என்னுடைய நடிப்பு அபாரமாக இருக்கப் போகிறதென்று டைரக்டர் பாஸ்கரன் கருதினார். ஒரு நாள் உதவி டைரக்டர், ஒளிப்பதிவாளர் முதலியவர்கள் இருக்கும் போதே பாஸ்கரன், "இந்தப் படத்துக்கு வெற்றி நிச்சயம் என்று எனக்குப் படுகிறது. விமலாவின் திறமையினால் படம் நன்றாக ஓடுமெனத் தோன்றுகிறது'' என்றார். அவர் அதைச் சொன்னதும் உதவி டைரக்டரும், கவிஞர் ராஜாமணியும் ஒருவரை யொருவர் விஷமச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டார்கள். எனக்கு அது ஒருவித வேதனையைத் தந்தது.

ராஜாமணி டைரக்டரைப் பார்த்து, "ஆமாம்! இந்தப் படம் ஓடினால் அதைக் குருட்டு அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும். இந்த உயர்ந்த கருத்துள்ள கதை ஒருத்தருக்குமே 'அப்பீல்' ஆகாது என்று தான் எனக்குத் தோன்றுகிறது. உங்களைப் போன்ற மேதாவிகளுக்குப் பிடித்திருக்கலாம். என்னைப் போன்ற எளியவர்களுக்குக் கதையில் வேகம் வேண்டும். அதாவது 'டெம்போ' வேண்டும். 'ஆக்ஷன்' வேண்டும். இது எடுபடுமா என்று எனக்குக் கவலையாகத்தான் இருக்கிறது'' என்றார்.

அதற்கு வேறொருவர், "பொது ஜனங்களுக்கு உயர்ந்த கருத்துக்கள் பிடிக்காது என்று நீர் எப்படிச் சொல்லலாம்? இந்தப் படம் வெளி வந்த பிறகு பிடிக்குமா பிடிக்காதா என்று தெரிந்து விடுகிறது'' என்றார்.

"ரொம்ப உண்மை! இன்னொருவர் பணத்தை வைத்துக் கொண்டு நீங்கள் பரீட்சை செய்து பார்ப்பதில் என்ன கஷ்டம்? சொந்தமாக இருந்தால் பயப்படவேண்டும். இப்போது நிர்ப்பயமாக இதே கதையை எடுக்கலாம்'' என்றார் ராஜாமணி.

டைரக்டர் பாஸ்கரனுக்குக் கோபம் வந்தது. "ராஜாமணி! உம்மால் வாயை மூடிக் கொண்டிருக்க முடிந்தால்தான் இங்கே இருக்கலாம். இந்தக் கதை எவ்வளவு உயர்ந்த கதை என்று உமக்குத் தெரியுமா? இது ஆங்கிலத்தில் வெளி வந்திருக்கும் ஒரு பிரபல நாவலின் தழுவல். அந்த நாவல் உலகப் பிரஸித்தமானது என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்றார்.

"எனக்குத் தோன்றியதை நான் சொன்னேன். உங்கள் இஷ்டப்படி படம் எடுக்கலாம். உங்கள் அதிர்ஷ்டமும், விமலாவின் திறமையும் சேர்ந்து படம் வேகமாக ஓடினால் எனக்கும் சந்தோஷந்தான்!''

அவர் என்னைப் பரிகசிக்கிறார் என்பது நிதர்சனமாகத் தெரிந்தது. ஆனால் நான் என்ன செய்ய முடியும்? தெரிந்து கொள்ளாதது போல் நடித்தேன். சினிமாவில் நடிப்பது போதாதென்று வாழ்விலும் எவ்வளவோ நடிக்க நேர்ந்தது. சினிமாத் துறையில் ஈடுபட்டு மற்றவர்கள் பொறாமைக்கு இலக்காகாமல் முன்னேற முடியாது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

அது மட்டும் தானா? நடிகர் சங்கரன் எனக்கு உண்டுபண்ணி வைத்த கஷ்டங்களை யெல்லாம் நினைத்தாலே எனக்கு ஆத்திரம் வருகிறது.

எனக்கு இப்போது கிடைத்திருக்கும் சிறைத்தண்டனை ஈசுவர மூர்த்தியிடமிருந்து காப்பாற்றி இருக்கிறது. அந்த வலையில் நான் விழுந்து விடாமல் காப்பாற்றிய சர்வேசுவரனை நான் வணங்குகிறேன். (தொடரும்)

கணக்கற்ற ஜனங்கள்
தினப்படி விரும்புவது
ப்ரூக் பாண்ட் தேயிலை



அதற்குக் காரணம் தோட்டத்திலிருந்து கடைகளுக்கு அதிவேகமாக அனுப்பப்படும் ப்ரூக் பாண்ட் தேயிலை நித்தமும் புத்தம் புதியதாக இருக்கிறது. மேலும் காற்று உட்புகாது பாக் செய்யும் முறை தேயிலையை மாசுமருவற்று, கலப்பற்று, களங்கமற்று விளங்கச் செய்கிறது.

மற்றெந்த தேயிலையையும் விட
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அதிகப்படியான ஜனங்கள் வாங்குகிறார்கள்!

BB 59 D



வெங்கய்யாவின் வஞ்சம்

துரோணன்

ரயிலை விட்டுக் கீழ் இறங்கும்போது, வெங்கய்யாவுக்கு மற்றொரு சிறையிலிருந்து விடுதலையடைந்தது போன்றிருந்தது! அவன் ஏறி வந்திருந்த 'பார்சல்' ரயில் வல்லம்படுகை ஸ்டேஷனுக்கு வந்து சேரும்பொழுது, பகல் பன்னிரண்டு மணி. கடந்த ஏழு வருஷங்களாக அனுபவித்திருந்த சிறைவாசத்தை விட, இந்த நான்கு மணிப் பிரயாணம்தான் அவனுக்குக் கொடிய நரக வேதனை போன்றிருந்தது.

சட்டைப் பையிலிருந்த டிக்கட்டையெடுத்து, வெகு அலட்சியத்துடன் போர்ட்டரிடம் கொடுத்து விட்டு வெளிப்புறம் வந்தான் வெங்கய்யா. வெய்யிலின் கோர தகிப்பைக் காண அவனது விழிகள் கூச்சமடைந்தன. இளைப்புற்றவாறே அங்கிருந்த நாகமரத்தின் அடிவேரில் சாய்ந்தபடி உட்கார்ந்தான்.

இந்த ரயில் ஸ்டேஷனும், இதன் சுற்றுப்புறமுள்ள கிராமங்களும் வெங்கய்யாவுக்குப் புதியவையல்ல. இதே ரயில் ஸ்டேஷனுக்கு அவன் எத்தனையோ முறைகள் கரும்பு வண்டிகளை ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறான். ஆனால், அப்பொழுதுக்கும் இப்பொழுதுக்கும் எத்தனை வித்தியாசம்! ஸ்டேஷன் ஒரேயடியாக அல்லவா மாறி விட்டது!

வெங்கய்யாவின் சிந்தனைகள், எங்கெங்கெல்லாமோ சுற்றித் திரிந்தன. திடீரென்று ஒரு எண்ணம் தோன்றவே, அவன் தன் மேலிருந்த சட்டை, அரை வேஷ்டி எல்லாவற்றையும் ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டான். பின்னர், தன் சட்டைப் பையிலிருந்த சிறு கண்ணாடியை எடுத்து அதைப் பல கோணங்களிலும் திருப்பித் தன் முகத்தையும் பார்த்துக் கொண்டான். அடேயப்பா! ஏழு வருஷச் சிறை வாசம் அவன் தோற்றத்தில் எத்தகைய மாறுதல்களையெல்லாம் செய்து விட்டது!

அவனது நெற்றிப்புறமாக இருந்த மயிர்களெல்லாம் உதிர்ந்து விட்டன. முகத்திலிருந்த புள்ளி புள்ளியான அம்மைத் தழும்புகளும், செழிப்புடன் வளர்ந்திருந்த தாடியும் அவனுக்கே தன்னை அடையாளம் தெரியாதவாறு ஆக்கி விட்டன.

வெங்கய்யாவின் யோசனைகளுக்கு முனையிருந்தது; முடிவுதானில்லை. அவனது வயிற்றின் அடிப் பாகத்தில் 'பக பக' வென்ற பசியின் சக்தி குடைய ஆரம்பித்து விட்டது.

மாயவரம் ஸ்டேஷனில் அவன் சாப்பிட்டிருந்த ஒரு கப் காப்பி எவ்வளவு நாழிகைக்குத் தாக்குப் பிடிக்கும்! நாற் புறங்களையும் பார்த்த வெங்கய்யா சற்றுத் தூரத்தில் புளிய மரத்தின் நிழலில் வைக்கப்பட்டிருந்த கிழவியின் ஆப்பக் கடையை நோக்கி நடந்தான்.

கிழவி அவனைக் கண்ணியத்துடன் வரவேற்று, நான்கு ஆப்பங்களையும் வேக வைத்த கிழங்குகளையும் ஒரு இலையில் வைத்து அவனிடம் நீட்டினாள். அவனுக்கிருந்த பசியில் அவையெல்லாம் சென்றவிடம் தெரியாமல் சென்றன. மீண்டும் அவளிடமிருந்து இரண்டு ஆப்பங்களை வாங்கிக் கொண்டான். பாவம், இத்தகைய பதார்த்தங்களையெல்லாம் அவன் உண்டு எத்தனை நாட்களாகி விட்டன!

கிழவி தன பதார்த்தங்களை அவன் ருசித்துப் புசிப்பதை ஆனந்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கும் இத்தகைய பேரம் நடந்து எவ்வளவு நாட்களாகி யிருந்தனவோ!

"ஏன் தம்பி, நீ எந்த ஊருக்குப் போகனும்?" என்று கேட்டாள் வெங்கய்யாவைப் பார்த்து.

வெங்கய்யா, சிறிது நேரம் மென்று விழுங்கினான். அவளுடைய கேள்விக்கு நேரடியான பதிலைக் கொடுப்பதற்கு அவன் உள்ளம் சற்றே தயக்கம் கொண்டது. இருந்தாலும் அந்தக் கிழவியின் மூலமாகவே ஏதேனும் விசேஷமான செய்திகள் தெரிந்து கொள்ளலாம் என்று அவனுக்கு ஒரு யோசனையும் உதயமாயிற்று. "நான் ஆறு கல் தூரம் போகனும், பாட்டி!" என்றான் வாயிலிருந்த தோசையை விழுங்கிக் கொண்டே.

"ஆலம்பாடிக்குத் தானே போறே! அது தான் நானும் நினைச்சேன்! தேவர் வீட்டுக் கல்யாணம் நெருங்கி விட்டது. இன்னும் இரண்டு மூனு நாளைக்கு இந்த ரோட்டெல்லாம் கொஞ்சம் அமுளாத்தான் இருக்கும்."— இவ்வாறு கிழவி, குருட்டாம் போக்கில் தனக்குச் சம்பந்தமில்லாததை யெல்லாம் கூறினாள்.

வெங்கய்யா திடுக்கிட்டான். "ஏன் பாட்டி, உனக்கு ஆலம்பாடியா! தேவருக்கு என்னைக்குக் கல்யாணம்!" என்று கேட்டான் பரபரப்புடன்.

கிழவி தன் பொக்கை வாய் முழுவதும் தெரியும் வண்ணம் நகைத்தாள். பின்னர், "கோட்டான் போலே தேவருக்கும் எனக்கும் இனியேல்தான் கண்ணாலம் நடக்கனும்! அவரு மகள் அகிலாண்டத்துக்கு நாளைத் தெரிக்கக் கண்ணாலம், தம்பி!" என்றாள்.

"இது கண்ணால மாசம்தானே! நாடெங்கும் கண்ணாலம்தான்" என்று சொல்லியவாறே சட்டைப் பையிலிருந்த காகப் பொட்டணத்தைப் பிரித்து, அதிலிருந்து ஒரு எட்டணா நாணயத்தை எடுத்துக் கிழவியின் கையில் கொடுத்தான் வெங்கய்யா.

"சில்லறையில்லையா, தம்பி! கொஞ்ச நேரம் இப்படியே குந்திகிட்டு இருக்கிறயா!" என்று கூறி விட்டுக் கிழவி எழுந்தாள். வெங்கய்யா அவளை நோக்கி, "அதெல்லாம் மிச்சம் வேண்டாம், பாட்டி! அப்புறமா வந்தால் பார்த்துக்குவோம்!" என்றான்.

கிழவி ஸ்தம்பித்தபடியே நின்றாள். பின்னர் தன் இரு விரல்களையும் நெற்றிப் பொட்டில் மடித்துச் சொடுக்கிக் கொண்டாள்.

வெய்யிலின் கோரத்தைப் பொருட்படுத்தாமல் வெங்கய்யா கிளம்பினான். கிழவியின் மூலம் அறிந்த செய்திகள் அவன் உள்ளத்தில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தி விட்டன. அவனது வாய் தானாகவே பேசிக்கொண்டது. 'ஊஹூம்! சிவகடாட்சத் தேவர் மகள் அகிலாண்டத்துக்குக் கண்ணாலம் வந்துடிச்சா! பார்த்துடுவோம்!" என்று முணுமுணுத்தான்.

பாவம், ஏழு வருஷங்களாக வெங்கய்யாவின் மனத்தில் குமைந்து கொண்டிருக்கும் ஷாத்திரத்திற்கு ஒரு முடிவான கட்டமல்லவா நெருங்கிக் கொண்டிருந்தது! இந் நிலையில் அவன் எதிர்பாராத இத் திருமணச் செய்தி அவனுக்குப் பெரும் தடங்கல்தான். அவன் மனத்திலிருந்த 'பழி வாங்கும் படல'த்தை இப்பொழுது அவன் எவ்வளவு தூரம் நிறைவேற்ற முடியும்!

உள்ளூர்வாசியாக இருந்த வெங்கய்யா சிவகடாட்சத்தின் குடும்ப எதிரி!

2

கொள்ளிடக் கரையின் ஓரத்திலிருந்த ஆலம்பாடி கிராமத்தில் சிவகடாட்சத் தேவர் ஒரு சாதாரணப் புள்ளிதான். இருந்தாலும், அவரது ஆடம்பரமான வாழ்க்கையும், அகம்பாவமான நடத்தைகளும் பற்றிக் கிராமத்தார்களுக்கே சற்று வெறுப்பு உண்டு. தமது எட்டுக் காணி நிலத்தின் மூலம், எதையும் சாதித்துக் கொண்டு விட முடியு மென்பது அவருடைய திடமான சித்தம். ஆனால், உலகத்தில் எதற்கும் ஒரு வரையறை இருக்கத்தானே செய்யும்!

ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு, வெங்கய்யா அந்த ஊரின் நிரந்தரமான வாசி. அவனது இருபதாம் வயதிலேயே ஒரு சாதாரணக் குடிசையையும், பதினைந்து வயதான தங்கையையும் அவன் பொறுப்பில் சுமத்தி விட்டு, அவனது பெற்றோர்கள் நோய்க்குப் பலியாகி விட்டனர். அன்று முதல் வெங்கய்யாவுக்கு அவனுடைய தங்கை செண்பகத்தைத் தவிர்த்து இவ் வுலகிலேயே உறவற்று விட்டது. இத்தகைய அண்ணன் தங்கை குடும்பம், எவ்வித சலனமுமின்றி மூன்று வருஷங்களைக் கழித்தன. இதற்குள்ளாக வெங்கய்யாவும் தேவரின் கரும்புத் தோட்டத்தில் மாடாக உழைப்பதன் மூலம் 'நாலுகாசு' சேர்த்து விட்டான்.

நாளடைவில் செண்பகத்தின் இயற்கை யழகும், எழில் நிறைந்த வனப்பும் அவனுள்ளத்தில் பெரும் கவலைகளை யெல்லாம் ஏற்படுத்தின. அவளது எழிலுருவத்துக்குப் பொருத்தமான ஆணழகன் கிடைக்க வேண்டியது பற்றி அவன் மனம் மிகுந்த வியாகூலத்தைக்கொண்டிருந்தது. அவளுக்கு இணையான வாலிபனைத் தேர்ந்தெடுத்து மணம் செய்விப்பதன்மூலம், அவன் எவ்வளவு ஆண்டுகள் வேண்டுமானாலும், அடிமைச் சேவகம் செய்யத் தயாராக இருந்தான். ஆனால்—இவ்வுலகத்தையே தனிமையான ஒரு சக்தி பல கோணங்களில் ஆட்டிக் கொண்டிருக்கையில், அவனது எண்ணத்திலும், முயற்சியிலும் என்ன நடக்க முடியும்!

சிவகடாட்சத் தேவரின் மூத்த தாரம் இறந்து மூன்று வருஷங்களாகி யிருந்தன. அவருக்கிருந்த செல்வத்துக்கும், அந்தஸ்துக்கும் அவர் மீண்டுமொரு 'கட்டையை'க் கட்டிப் போடலா மென்றும், அதில் தவறில்லை யெனவும் ஊரில் பராபரியான செய்திகள் நடமாடிக் கொண்டிருந்தன. ஆனால், அவருக்கு முடிவாகியிருந்த நாற்பத்தெட்டாம் பிராயத்தைப் பற்றி ஒரு வார்த்தையாகிலும் பேசவாரில்லை! ஏனெனில், அந்த ஒரு அம்சத்தைப் பற்றிக் கூறுவதற்குத்தான் ஒவ்வொருவருக்குமே பீதியாக இருந்தது! கடைசியாக, இச் செய்திகள் முற்றி முதிர்ந்து விட்டன.

வழக்கம் போல் தேவர் ஒரு நாள் மாலை, கொள்ளிடக் கரைப் படுகையில் உல்லாச நடை பயின்று கொண்டிருந்தார். அப்பொழுது தான், குடமேந்திய மோகினி போல், செண்பகத்தின் உருவம் அவரது விழிகளைப் பிரமிக்

கச் செய்து விட்டது. அந்த முதல் பார்வையிலேயே, அவர் ஒரு நிர்மானமான முடிவுக்கும் வந்து விட்டார்!

மறு தினம் காலையிலேயே, தேவரின் அந்தரங்கமான சகா ஒருவர் வெங்கய்யாவின் வீடு தேடி வந்திருந்தார். அவரது அபூர்வ வருகை அவனுக்குப் பெரும் ஆச்சரியமாகவும், புதிராகவுமே யிருந்தது. அவர் தேவரின் செல்வாக்குகளையும், குணங்களையும் பற்றி வெகு நேரம் வரையில் சிலாக்கியமாகக் கூறி விட்டு, முடிவாக, செண்பகத்தின்மீது தேவர்கொண்டிருந்த அபிப்பிராயத்தையும் ஒருவாறாகக் கூறினார். அடுத்த கணம் வெங்கய்யாவுக்குக் கோபமோ பதட்டமோ ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக அவன் வாய் விட்டுக் 'கலகல' வென்று நகைத்தான்! அதிலேயே எல்லா அர்த்தங்களும் விளங்கின. ஆனாலும் அவன் அடக்கத்துடன் அவரிடம், தேவரின் உடலழகையும், வயதையும், அவருக்கு வாரிசாக இருந்த பத்து வயதுப் பெண்ணையும் சுட்டிக் கூறி விட்டு, தேவரிடம் இவ் வெண்ணத்தை மாற்றிக் கொள்ளும்படி கூறுமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டான்.

இச் சம்பவத்துக்குப் பின்னரும் கூடத் தேவரின் முயற்சிக்கு முடிவு ஏற்படவில்லை. அவர், பல பல நண்பர்களைப் பிடித்து, வெங்கய்யாவிடம் தூதாக அனுப்பினர்.

இந் நிலைமைகளால், வெங்கய்யா பெரிதும் மனமுடைந்தான். வெகு சீக்கிரத்திலேயே செண்பகத்தின் மணத்தை முடிப்பதற்காக, அவன் மனம் இரவு பகலின்றி வேதனையுற்றது. இதற்காக, அவன் எங்கெங்கோ யிருந்த பல நண்பர்களுக்கும் கூடக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தான். இதற்கிடையில், தேவரின் கரும்புப் பண்ணையில் தான் வேலை செய்வதும் கூட பெரும் இடையூறாகத் தோன்றவே, அவன் அதையும் விட்டொழித்து விட்டான். ஆனால், அதன் பின்னருங்கூட வெங்கய்யாவுக்கு மிக மிகப் பயங்கரமான எச்சரிக்கைகள் தேவரிடமிருந்து விடாமல் கிடைத்துக் கொண்டிருந்தன.

ஒரு நாள் வெங்கய்யா பக்கத்து ஸ்டேஷனை சிதம்பரத்துக்குச் சென்றிருந்தான். அங்கே செண்பகத்தின் அழகுக்குப் பொருத்தமான ஒரு யுவன் இருப்பதாக அவனது நண்பனிட மிருந்து கடிதம் வந்திருந்தது. அன்றும் இப்படித்தான் பன்னிரண்டு மணி வெய்யிலையும் கூடப் பொருட்படுத்தாது வெங்கய்யா சென்றான். எப்படியும் அன்றிரவுப் பொழுதுக்குள்ளாகவே திரும்பிவிட வேண்டுமென்று தான் அவன் பெரு முயற்சி செய்தான். ஆனால், விதி வேறு புறத்திலிருந்து, அவனது திரும்பும் ரயிலைத் தவற வைத்து விட்டது!

அன்றிரவு வெங்கய்யா தன் குடிசையைச் சமீபிக்கையில், ஏறக்குறைய பன்னிரண்டு நாழிகைப் பொழுதும் கழிந்து விட்டது. பயங்கரமான இருளும் நிசப்தமும் நிலவியிருந்தன.



அத்தகைய பைசாச வேளையில்தான் அவனது வீட்டின்உட்புறத்தில் விதியின் சதிச் செயல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

குடிசையின் வாசலில் நின்ற வெங்கய்யாவின் உள்ளம் பதை பதைத்தது. அவனது அங்கங்களோ, உணர்ச்சியெற்று நடுக்கம் கொண்டன. ஆனாலும்—எங்கிருந்தோ அவனுக்குப் புதிய தான தைரியம் உற்பத்தியாகி, அவனை உந்தித் தள்ளிற்று! அடுத்த கணம் வெங்கய்யா வெளிப்புறத்தின் கதவை உதைத்துத் தள்ளி விட்டு, உட்புறம் நுழைந்தான். மங்கிய விளக்கின் ஒளியில் அவன் கண்ட காட்சி அவன் இதயத்தையே நன்றாகக் கசக்கிப் பிழிவது போன்றிருந்தது.

சிவகடாட்சத் தேவரின் முரட்டுப் பிடிகளில் சிக்குண்டிருந்த செண்பகம், உயிருக்கும் மானத்துக்கும் போரிட்டுக் கொண்டிருந்தான். வெங்கய்யாவின் திடீர் வருகையை யறிந்த தேவர் அடுத்த கணமே பெரும் பைசாசமாக மாறி விட்டார். அவரது மற்றொரு கரத்தில், பிரித்தபடி யிருந்த கத்தியின் வேகம் செண்பகத்தின் கழுத்தை நோக்கிப் பாய்ந்து விட்டது. 'ஐயோ, அண்ணா!' என்று பதறிய வண்ணம் அத் தையல் பரிதாபமாகச் சாய்ந்துவிட்டான். இமைப் பொழுதின் வேகத்தில் ஒரு பயங்கரமான பூகம்ப நிகழ்ச்சியே நடப்பது போன்றிருந்தது வெங்கய்யாவுக்கு.

"அட, பாவி!" என்ற பெருங் கூச்சலுடன் தேவரின் மீது பாய்ந்தான் வெங்கய்யா. தேவர் கீழே விழுந்து உருண்டார். ஆனால், முன்னெச்சரிக்கையான தற்காப்புகளுடன் வந்திருந்த தேவரை அவனால் என்ன செய்ய



சென்னை திரு அய்யாவு நாயகர் குமாரரும், சென்னையில் 'கல்கி' விநியோக இலாகாவைச் சேர்ந்தவருமான திரு ஜ. ஜம்புலிங்கத்துக்கும் ராமாபுரம் திரு எம். கிருஷ்ணசாமி நாயகர் புதல்வி சௌ கம்சாவுக்கும் சென்னை மேற்பாக்கத்தில் ஜுலை மாதம் 10ந் தேதி வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

முடியும்! அவரது சமிக்ஞையான குரலின் மூலம், எங்கிருந்தோ பிரவேசித்த நான்கு ஆட்களும் வெங்கய்யாவை அமுக்கிப் பிடித்துக் கொண்டு விட்டனர்.

சுற்றி வளைப்பானேன்! பெண் பித்தரான தேவரின் திருமணக்கோரிக்கைக்குச் செண்பகம் சம்மதிக்கவில்லை. அதன் விளைவாகத் தேவரின் பயங்கரமான மிரட்டல்களுக்கும் கூட, அவள் பணியவில்லை. அதன் பின்னர்தான் அவரது அசுர வெறி — அவரது ஆறறிவுகளையும் விரட்டி விட்டது!

தேவரின் வெற்றி நகைப்பு அவரது கண்டத்தினின்றும் அட்டகாசத்துடன் முழங்கிற்று. முரடர்களின் அழுத்தமான பிடியிலிருந்த வெங்கய்யா அப்பொழுதும் வீறு கொண்ட சிங்கம் போன்றுதான் கர்ஜித்தான். ஆனால் செண்பகத்தின் மணக் கோலத்தை அவனால் காண முடியவில்லை. அவளது பிணக் கோலத்தைத்தான் அவனது விழிகள் கண்டன.

அதன் பின்னர், தேவர் தமது பூதவுடலைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு நாடகத்தையே ஜோடனை செய்து விட்டார். பணமிருக்கும் இடத்தில்—மெய் பொய்யாகவோ, பொய் மெய்யாகவோ மாறுவதற்கு என்ன சிரமம் இருக்க முடியும்! தேவரின் அநீதமான செயல்கள் யாவும் அவரது பணப் போர்வைக்குள் மறைந்து விட்டன. செண்பகம், தனது அண்ணனின் கொடுமைகள் தாங்கமாட்டாது, தற்கொலை புரிந்து கொண்டாளெனவும், தம் மீது கொண்டுள்ள பகைமையினால், வெங்கய்யா தம்மைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் ஊருக்குள் செய்திகளைப் பரப்பினார் தேவர். அதே போன்று—அவரது சாட்சிகளும் நீதி மன்றத்தில் வாக்குக் கொடுத்தனர். இதன் முடிவாகத் தான், சமயங்களும் சந்தர்ப்பங்களும் ஒன்றாகக் கூடி, அப்பாவியான வெங்கய்யாவுக்கு ஏழு வருஷக் கடின காவல் தண்டனையைக் கொடுத்தன!

3

நாகைப்பட்டினம் சிறையிலிருந்த வெங்கய்யாவின் உழைப்பும் நடத்தையும் அதிகாரிகளின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்து விட்டன. ஆனால் அவ்வேழு யுகங்களிலும் ஒரு நிமிடப் பொழுதேனும் அவன் நிம்மதியுடனிருந்ததில்லை. ஒவ்வொரு விநாடியிலும் அவன் இதயத்துக்குள் சேர்ந்த விஷத்தின் வித்துகள் இந்த ஏழு வருஷத்துக்குள் பெரும் விருட்சமாகவே தழைத்து விட்டன!

சிறை வாசத்திலேயே வெங்கய்யாவுக்குப் பெரிய வைசூரி ஏற்பட்டது. அவன் பிழைப்பதே அரிதான நிலையிலிருந்தான். ஆனாலும் அவனது பிரார்த்தனைக்கு மனமிரங்கிய கடவுளும் அவனது ஆயுளை விட்டுவைத்தார் போலும்! அவனது உயிருக்கும் மேலான சகோதரியின் வாழ்வைக் குலைத்த தேவரைப் பழி தீர்த்துக் கொள்வதற்காகவே, அவன் உயிர்ப் பிச்சை அளிக்குமாறு கடவுளை வேண்டினான்.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் நாகைப்பட்டினம் சிறையிலிருந்து வெங்கய்யா விடுதலை பெற்றிருந்தான். அவன் வெளியே வரும்போது சிறை அதிகாரிகள் அவனது வஞ்சகமற்ற தோட்ட வேலைகளுக்காக மெச்சி இருபது ரூபாய் ஊதியமும் அளித்திருந்தார்கள். அவன் அதைக் கொண்டு சில புதிய உடைகளையும் வாங்கிக் கொண்டு, ஒரு நாள் பொழுதையும் அங்கேயே கழித்துத் தங்கியிருந்து விட்டுக் கிளம்பினான்.

ஏழு வருஷங்களுக்குப் பின் இப்பொழுது தான், கொள்ளிடத்தின் படுகை மேட்டில் வெங்கய்யா நடந்து கொண்டிருந்தான். அவனது மடியில் செருகியிருந்த கொடுவாள், தனக்குக் கிடைக்கப்போகும் விருந்தை யெண்ணிப் புளகாங்கிதம் கொண்டிருந்தது. சற்று நேரத்துக் கொருதரம், அவனுடன் பழகியிருந்த நபர்களும் கூட அவனை யெதிர்ப்பட்டவாறு சென்று கொண்டிருந்தனர். ஆனால் அதிர்ஷ்டம் — ஒருவராவது அவனையறிந்து கொள்ள முடியவில்லை.

வெங்கய்யாவின் முதல் குறி—இரத்தத்துக்கு இரத்தமான தேவரின் மகன்! அதைத் தொடர்ந்த மற்றொரு பலி—தன்னுடைய கழுத்துக்குத்தான்.

இதன்மூலம், வெங்கய்யாவுக்கு ஏற்பட்டுள்ள சகோதரியின் சோகம் எப்படிப்பட்டது என்பதைத் தேவர் அறியவேண்டு மல்லவா! அவர் அதைச் சாகும்வரையில் அனுபவித்து உணர வேண்டும்! வெங்கய்யா தன் உயிரைத் துச்சமாக எண்ணித்தான் இத்தகைய திட்டத்தை வகுத்திருந்தான். ஆனால், இமயி கூறிய


அவருடைய
பளபளப்பான
வெள்ளைப்
புடவைகள்
அவள்
சிநேகிதிகளின்
புகழ்ச்சியை
பெற்றன
என் எஜமானியின் சிநேகிதிகளுக்கு அவள் வெள்ளையான புடவையை எப்பொழுதுமே அணிவது எப்படி என்று அவளிடம் ஒரு நாள் கேட்பதற்கு முன்பு தெரியாது.
தன்னுடைய எல்லா ஆடைகளுக்கும் (பருத்தி, ஆர்ட் ஸில்க் துணிகள் மாத்திரம்) புடவைகள் உள்பட டினோபாலை உபயோகிக்கிறேன் என அவள் சொன்னாள் டினோபால் உபயோகிக்கப்பட்ட வெள்ளைத் துணிகள் எடுத்துக் காட்டாக இருக்கக் காரணம், அவைகளின் கண்களைப் பறிக்கும் வெண்மைதான்.
டினோபால் அளிக்கும் வெண்மை 3 அல்லது 4 சலவைக்கு நிலைக்கும். அதனால் அதை அடிக்கடி உபயோகப்படுத்த வேண்டியதில்லை ஒரு கால் டீஸ்பூன் அளவு டினோபால் ஒரு வாளி நிறைய உள்ள துணிகளை வெளுக்கின்றன என்பது நினைவிலிருக்கட்டும்.
டினோபால்
Geigy
துணிகளை மிகுந்த வெண்மையாகச் செய்கிறது


ஆஹா, போட்டால்... போடணும்
மைதீன் புகையிலை
போன் 41
தந்தி: "MYDEENCO"
E.S. மைதீன் & கோ
கும்பகோணம்.


ஐயோ இருமல் கொல்கிறதே
EPHRILIME
எப்ரிலைம்
அவரது ஆஸ்த்மா உபாதைகளை குணப்படுத்த எப்ரிலைம் மிகச் சிறந்தது. ஒரு பாட்டில் மருந்தை உபயோகித்தால் அதன் பூரண பலன்களைக் காண்பார்.
U.D
நீண்ட நாட்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த நிவாரண மருந்து.
யூனியன் டிரக் கம்பெனி, லிட்.
மதராஸ் டிப்போ: 2, ஜோன்ஸ்லேன், மதராஸ்-1

செய்திகளின் மூலம் அவனது மனம் சற்றே குழப்பமடைந்தது. மணவறைக்குள் பதுங்கிக் கிடக்கும் தேவரின் மகளை, இனி கனவின் காட்சியில்தானே அவன் சந்திக்க முடியும்!

அன்று—அமாவாசைக்கு மறு தினமாகையால், அந்திப் பொழுதின் தொடக்கத்திலேயே இருள் கவிந்திருந்தது. வானத்தில் சூழ்ந்திருந்த கரு மேகங்களின் கூட்டங்கள் வேறு வெங்கய்யாவுக்குக் கட்டியம் கூறுவது போன்றிருந்தன. கொள்ளிடக் கரையின் படுகைமேடு, அப்பொழுது பயங்கரமான காட்டின் தோற்றமாகவே இருந்தது. ஆனால், புளிய மரத்தின் அடிக் கிளையில் உல்லாசத்துடன் சாய்ந்து கொண்டிருந்த வெங்கய்யாவின் மனத்துக்கு, எத்தகைய பயங்கரமும் உதிக்கவில்லை. அவன் தான் ஒரு பயங்கரவாதியாயிற்றே!

எதிரே—கலியாண வீட்டின் பிரகாசமான ஒளியில்—அங்கே நிகழ்ந்து கொண்டிருந்த அமர்க்களமான காட்சிகளெல்லாம் வெங்கய்யாவின் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தன. எப்படியும், கலியாணச் சந்தடிகளும், கிராமத்தின் அரவங்களும் அடங்குவதற்கு இன்னும் நான்கு மணி காலமாவது செல்லும். அதன் பின்னர்தானே அவனது வேட்டையை முடித்துக் கொள்வதற்கு அனுகூலமான சந்தர்ப்பமும் கிடைக்க முடியும்!

அன்றையப் பகல் பொழுதை வெங்கய்யா மிகவும் சிரமத்துடனேதான் கழித்திருந்தான். அதனிடையில், அவனுக்கு ஒரு அதிசயமான சந்தர்ப்பமும் கிடைத்திருந்தது. ஆனால், அவன் அதைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் இல்லை. கலியாண வீட்டின் புழக்கடைப் புறத்தை அவன் யதேச்சையாகக் கடந்து கொண்டிருக்கையில், தேவரின் மகளான அகிலாண்டத்தின் உருவம் தெரிந்தது. அவன் அவளைக் கூர்ந்து கவனிப்பதற்கும் அவகாசமின்றி, அவள் மறைந்து விட்டாள்! அதனாலென்ன! உயிராசையையே வெறுத்து விட்டு வந்திருக்கும் வெங்கய்யாவின் இலக்குக்கு அவள் எப்படித் தப்ப முடியும்!

மரக்கிளையில் உட்கார்ந்திருந்த வெங்கய்யாவின் சிந்தனைகள் எங்கெங்கோ வெல்லாம் சஞ்சாரமிட்டுக் கொண்டிருந்தன. அவனது திட்டத்தின்படி, அவனும் சில மணி காலம் தானே இந்தப் பூமியிலிருக்க முடியும்! அதற்குள்ளாக, அவனது வாழ்நாளின் அனுபவங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்துதானே தீரும்! செண்பகம் அவனது மனக் கண்களின் எதிரில் தோன்றி, 'அண்ணா, நீ அந்த மனித மிருகத்துக்குப் புத்தி புகட்டத் தவறி விடாதே' எனக் கெஞ்சிக் கூறுவது போன்றிருந்தது. அவனது விழிகள் கொள்ளிடத்தின் பிரவாகம் போன்று கண்ணீரை உகுத்தன.

4

ஆலம்பாடி கிராமத்தின் சரித்திரத்திலேயே கண்டிராத ஒரு பைசாசத் தாண்டவம் அக்கினி வேலைக்குத் தொடங்கிற்று! திடீரென்று ஒரு பெருங் கூக்குரல் நாலா திசைகளிலிருந்தும் எழுந்தது. ஆடவர், பெண்டிர், குழந்தைகள் என்ற பேதமின்றி ஜனங்கள் ஓலமிட்டபடி திசைக் கொருவராக ஓடிக் கொண்டிருந்தனர். அதன் காரணம், தேவரின் கலியாண வீட்டை விருந்தாக்கிக் கொண்டிருந்த அக்கினித் தேவனின் ஆர்ப்பாட்டக் கூத்து அப்பொழுது நிகழ்ந்து கொண்டிருந்ததுதான்!

'படீர், படீர்' என்ற ஒலியுடன் மரத் தளவாடங்களும், மூங்கில்களும் சிதறி வெடித்துக் கொண்டிருந்தன. தீயின் அட்டகாச நகைப்பு கிராமத்தின் இண்டு இடுக்குகளையெல்லாம் கூடத் துழாவுவது போன்றிருந்தது.

தேவர் 'கோ' வென்று கதறியவண்ணம் குறுக்கும் நெடுக்குமாக வீதியில் ஓடிக் கொண்டிருந்தார். பாவம், அவரது பரிதாபமான அலங்கோலத்தை இது வரை எவருமே கண்டதில்லையல்லவா! அத்துடன், அவர் வாழ்நாளிலேயே அன்றுதான் முதன் முதலாகத் தெய்வத்தின் பெயர்களையெல்லாம் கூவி அழைத்துக் கொண்டிருந்தார்! தீயின் திருவிளையாடல்களினால் அவர் வீட்டையோ, அதிலுள்ளிருக்கும் பொருட் செல்வத்தையோ பற்றி யெல்லாம் அவர் கவலையுற வில்லை. அதிலிருந்து உறவினர்களெல்லாம் கூட ஒருவாறு தப்பி வெளியேறி விட்டனர். ஆனால் அவரது ஆயுட்காலத்தின் முழுமைக்கும் ஒரே வாரிசானவளும், தம் படாடோப பெருமைகளுக்குக் காரணமானவளுமான அவரது பெண் அகிலாண்டமோ!—

கூடத்தின் ஒதுக்குப்புறமான உக்கிராண அறையிலல்லவா அவள் தனிமையாகப் படுத்திருந்தாள்! இந்நேரத்துக்கு அவளது நிலைமை!

தேவர் பைத்தியம் பிடித்தவர் போன்று வீறிட்டுக் கத்தினார். அவர் கண்களின் எதிரில் செண்பகத்தின் உருவம் தோன்றி இடைவிடாமல் நகைத்துக் கொண்டிருந்தது!

தேவரின் ஆட்களும், கிராமத்தார்களும் பெரும் பிரயாசையுடன் தீயணைப்பதில் மூழ்கினர். ஆனால் பைசாசக் கூத்தின் எதிரில் அவையெல்லாம் எம்மாத்திரம்! 'மணப் பெண் போய் விட்டாள்! அகிலாண்டம் சாம்பலாகி விட்டாள்!' இச் செய்திகள் கிராமத்தின் ஒவ்வொரு மூலையிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

திடீரென்று எழுந்த கிராமத்தின் ஓலக் கூச்சல்களே, வெங்கய்யாவின் மெய்யுணர்வைத் தட்டி எழுப்பின. அடுத்தகணம் அவன் திகைப்பும், திகிலும் கொண்டவனாகத் தெருப்புறத்தை நோக்கி ஓடினான்!

கலியாண வீட்டின் தவசுப் பிள்ளைகள் செய்து விட்ட அஜாக்கிரதையான செயல்களே இத்தகைய தீ விபத்துக்குக் காரணம் என்று ஊரார் பேசிக் கொண்டனர்.

தீயின் ஆர்ப்பாட்டம், பாரபட்சமின்றி ஆட்சி புரிந்து கொண்டிருந்தது. அதனிடையில்—ஒரு அபூர்வமான காட்சி தோன்றிற்று. வீட்டின் உட்புறமிருந்து, கரும்பூதம் போன்ற ஒரு உருவம் வெளியே நோக்கி வந்து கொண்டிருந்தது! தன் சமீபத்திலேயே 'படீ'ரெனச் சாயும் உத்திரங்களையோ, தீயின் செந்நாக்குகளையோ அது சிறிதும் இலட்சியமே செய்யவில்லை.

அடுத்த கணம் — பரபரப்பான ஆரவாரக் குரல்கள் அவ்விடம் எழும்பி விட்டன. ஒரு

கரும்பூதம் அதைத் தெருவின் மணலில் கிடத்தி விட்டுப் பெரும் ஆயாசத்துடன் சாய்ந்தது. தேவரும், அவரது சகாக்களும் பதறிய வண்ணம் அவ்விரு உடல்களையும் சமீபித்தனர். அங்கே—அவரது அருமைப் புதல்வியான அகிலாண்டத்தின் உருவம் உணர்வற்ற நிலையுடன் கிடந்தது! அவளைக் காப்பாற்றி யெடுத்து வந்த தெய்வமும் அப்பொழுதுதான் ஒரு மனித உடலாகக் கிராமத்தார்களின் கண்களுக்குப் புலனாயிற்று.

இயற்கையான காற்றின் அரவணைப்பினால், அகிலாண்டம் சற்றே முனகினாள். அவளது முகத்தில் நிலவியிருந்த பயப்பிராந்திகளே, அவளது இமைகளை இறுக்கிப் பிணைத்திருந்தன. மற்றபடி, அவளது உடையின் சில சில பாகங்கள் கருகி, அவைகளில் அக்கினித் தேவனின் முத்திரைகள் பதிந்திருந்தன. கிராமத்தார்களின் அவசரமான சிகிச்சைகளினால், அவள் தன்னுணர்வு கொண்டு, ஒரு முறை கண் விழித்தும் கூடப் பார்த்து விட்டாள். இனி, அவள் புனர் ஜென்மமெடுத்த தேவரின் மகள்தான். அவரது உடைமைகளையும், செருக்கையும் உண்டு விழுங்கிய அக்கினித் தேவனுக்கு, குறியான நரபலி கிடைக்காதது பெரும் தோல்விதான்! ஆனால்—அவளுக்கு உயிர்ப்பிச்சை யளித்த மனிதவுடல் மட்டிலும்—பொசுங்கிய தலையுடனும் வெந்திருந்த அங்கங்களுடனும், அடையாளம் தெரியாதவாறு அசைவற்றுக் கிடந்தது!

தேவர் விரிட்டுப் பதறிய வண்ணம் அந்த உருத் தெரியாத உடலைச் சமீபித்தார். ஊரார் அவனுடலில் இருந்த அலங்கோல உடைகளைக் கிழித்தெறிந்து விட்டு, அவன்மீது பச்சிலைச் சாறுகளைப் பிழிந்து கொண்டிருந்தனர். இறுதியின் கோர சுவாசம் அவனை உலுப்பிக் கொண்டிருந்தது. அப்பொழுதுதான், அவனது மடங்கியிருந்த இடது கரமும் விரிக்கப்பெற்று, அதிலிருந்த பச்சை யெழுத்துக்கள், அவனது பெயரை அறிமுகம் செய்வித்தன! அவன் தான்—வெங்கய்யா!

அடுத்த கணமே, தேவர் தம் நிலையையும் மறந்தவாறு வாய் விட்டுக் கூவினார். "வெங்கய்யா! நீதானா! நீதான் என் மகளைக் காப்பாற்றிய தெய்வமா—!" இவ்வாறு அவர் இதயம் விட்டுக் கூறிய வண்ணம், அவனது கால்களைப் பற்றிக் கொண்டு விட்டார்.

வெங்கய்யா விழிப்புற்று விட்டான்! அவன் தன் தலையை இருபுறங்களிலும் உருட்டியவாறு சுற்றுப்புறம் முழுமையையும் ஒரு தரம் நோக்கினான். பின்னர், தேவரின் முகத்தையும் கூர்ந்து நோக்கினான். அவனுடலில் எங்கிருந்தோ ஒரு அமானுஷ்ய சக்தி யெழுந்தது!

"ஓய் தேவரே! நான் தெய்வமில்லை; உன் குடும்பத்துக்கே வைரியான மனிதன்தான்! நீதான் மனித வுருவெடுத்த மிருகம்.

"இன்றைய தீ விபத்துத்தான் உன் மகளின் ஆயுளைக் காப்பாற்றி, என் கொடுவாளையும் ஏமாறச் செய்து விட்டது. இல்லையேல் நீ என் சகோதரிக்கு அளித்த பிணக் கோலத்தையே நானும் உன் மகளுக்கு அளிப்பதற்காகத் தான் வந்தேன். ஆனால் இயற்கை என்னை வஞ்சித்து விட்டது.

"கடவுளின் தண்டனையினால் வெந்து சாம்பலாக விருந்த உன் மகளின் நிலையையறிந்து என் மனம் எல்லையில்லா மகிழ்ச்சியைத்தான் ஒரு கணம் கொண்டிருந்தது. ஆனால் அடுத்த கணமே என் மனித உணர்ச்சிகள்தாம் உன் மகளைக் காப்பாற்றும் எண்ணத்தை எனக்குத் தூண்டிவிட்டன. அதன் காரணம், நீயோ நானோ அல்ல. வயதிலும் தோற்றத்திலும் உன் மகளுடன் ஒத்திருந்த என் சகோதரியின் முகமே என்னை மனிதனாக்கிற்று."

இவ்வளவு சொற்களையும் அவன் ஆவேசம் கொண்டவன் போலக் கணத்தில் கூறி முடித்து விட்டான். அவனது மனச் சுமைகள் கழிந்து விட்டவை போன்ற திருப்தி அப்பொழுதுதான் அவன் முகத்தில் பிரகாசித்தது. சற்றுத் தூரத்தில் கிடந்த அகிலாண்டத்தின் உருவைப் புன்னகையுடன் நோக்கி விட்டு அவனது கண் இமைகள் செருகிக் கொண்டன.

தேவரின் விழிகள் பிரவாகமெடுத்தன. அவர் பரபரப்பும், பாசமும் மிகுந்தவாறு அவன் உடலை அசைத்தார். அவன் இடையிலிருந்த கொடுவாள்தான் நழுவிற்று.

தேவரின் குடும்ப எதிரியான வெங்கய்யா மனித ஆயுளின் நிம்மதியான துயிலைப் பெற்று விட்டான்! கிராமத்தாரின் விழிகளுக்கோ அவன் ஒரு மனித தெய்வமாகத் திகழ்ந்தான்.

திருவல்லிக்கேணியில் தியாகராஜர் விழா

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் விழாவையும், வித்யாலயத்தின் பதினோராவது ஆண்டு விழாவையும் திருவல்லிக்கேணி சரஸ்வதி கான நிலயத்தினர் ஜூலை முதல் தேதியிலிருந்து நான்கு நாட்கள் விமரிசையாகக் கொண்டாடினர். நான்கு நாட்களிலும் மதுரை மணி அய்யர், கிருஷ்ண அய்யங்கார், டி. ஆர். பாலசுப்பிரமணியம் முதலியோரின் இன்னிசைக் கச்சேரிகளும், த்வாரம் வெங்கடசாமி நாயுடு, தேவகோட்டை நாராயண அய்யங்கார், கல்யாணகிருஷ்ண பாகவதர் ஆகியோரின் வாத்ய இசைக் கச்சேரிகளும் சிறப்பாக நடந்தேறின. கடைசி தினத்தன்று சரஸ்வதி கான நிலயத்தின் மாணவிகளின் கும்மி, கோலாட்டம் முன்னே செல்ல, தியாகராஜர் படத்தை நன்கு அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். தியாகராஜர் விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடிய திருவல்லிக்கேணி சரஸ்வதி கான நிலயத்தினரைப் பாராட்டுகிறோம்.

மிருணாளினி

கு. பஞ்சாபகேசன்

வீட்டு வாசல்படி ஏறி மெதுவாக வந்து கொண்டிருந்த தகப்பனாரின் முகத்தை மிகுந்த ஆவலுடன் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் விமலாவும் சரளாவும்.

ஆனால் அவர் வாய் திறந்து ஒன்றுமே பேசவில்லை. தம்முடைய உத்தரீயத்தை எடுத்துக் கோட் ஸ்டாண்டில் போட்ட ரீதியில் அவருக்குப் பேசப் பிடிக்கவில்லை என்று தெரிந்தது. பேசாமல் வீட்டின் பின்புறம் போனார். கிணற்றுச் சகடையின் 'கீச் கீச்' என்ற ஒலி அடுத்தபடியாகக் கேட்டது. கைகால்களைக் கழுவிக் கொண்டிருந்தார்.

தம்முடைய கடைசிப் பெண்ணான மிருணாளினியின் கல்யாண விஷயத்தில் அந்த மனுஷருக்கு இருந்த விசாரம் வேறு யாருக்குத்தான் இருக்கப் போகிறது? அந்த விசாரத்தில் விமலாவுக்கும் சரளாவுக்கும் இருந்த பரிவையும் அக்கறையையும் பற்றி அவருக்குத் தெரியும்.

ஆனால் இப்போது, வெளியிலிருந்து வந்திருந்தவர், சற்று மனம் உடைந்து தான் வந்திருந்தார். விமலாவும் சரளாவும் அவர் அருகில் நெருங்கிக் கேட்பதற்கே பயந்தார்கள். இருந்தாலும், 'என்ன ஆயிற்று?' என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டார்கள். அது சகஜமானதுதான் என்பதும் அவருக்குத் தெரியும். கைகால்களைக் கழுவிக் கொண்டு, நாற்காலியில் பெருமூச்சு விட்ட வண்ணம் வந்து உட்கார்ந்தார் அவர்.

விமலாவும் சரளாவும் மெதுவாக அவர் அருகில் போனார்கள்.

"அப்பா..." என்று பேசுவதற்கு ஆரம்பித்தாள் விமலா.

"என்ன ஆயிற்று அப்பா, போன காரியம்?" என்று முடித்துக் கேட்டாள் சரளா. அவள் எப்போதுமே சற்று மூக்திரிக்கொட்டை! விமலா, சரளாவைப் பார்த்துச் சற்று முறைத்தாள்.

"என்ன ஆகும், அம்மா? வழக்கப்படிதான் ஆயிற்று!" என்றார் தகப்பனார் நீண்ட பெருமூச்சுடன்.

"அப்படி என்றால்?"

"மிருணாவை அந்தப் பையனுக்குப் பிடிக்கவில்லையாம். மிருணா சற்று இன்னும் சிவப்பாயிருந்தால் தேவலை என்று பையன் அபிப்பிராயப் படுகிறானாம்!" என்றார் தகப்பனார்.

"பையன் இப்படி அபிப்பிராயப்படுகிறான் என்று உங்களுக்கு யார் அப்பா சொன்னார்கள்?" என்று விமலா தன் தந்தையைக் கேட்டாள்.

"அவரே — பையனின் அப்பாவே — சொன்னார், அம்மா!"

"அப்போது உங்கள் மாப்பிள்ளை பக்கத்தில் இருந்தாரா, அப்பா?" என்று விமலா தன்னுடைய கணவனைக் குறித்துக் கேட்டாள்.

"இருந்தார், அம்மா! ஏன், அதற்கு என்ன இப்போது?" என்றார் தகப்பனார் ஆச்சரியப் பட்டவராய்.

இதற்குள் சரளாவும் தன் தகப்பனாரை மடக்கிக் கேட்டாள்: "ஏன் அப்பா! 'இவரும்' அப்போது அங்கேதானே இருந்தார்?" — சரளா குறித்தது தன்னுடைய கணவனை.

"இதென்ன, அம்மா! இப்படி இரண்டு பேரும் வேடிக்கையாய்க் குறுக்குக் கேள்விகள் கேட்கிறீர்கள்! பையனின் அப்பா அப்படிச் சொன்னபோது, இரண்டு மாப்பிள்ளைகளும் அப்போது அங்கேதான் இருந்தார்கள்."

"இரண்டு பேரும் அங்கே இருந்துமா அந்தப் பையனின் தகப்பனாருக்குச் சூடு கொடுக்காமல் இருந்தார்கள்?" என்று படபடத்தாள் சரளா.

"அதையேதான் நானும் கேட்கிறேன்! நம் இரண்டு பேரையும்விட மிருணாளினி எவ்வளவோ சிவப்பாயிற்றே? இரண்டு மாப்பிள்ளைகளுடைய மௌனத்துக்கும் அர்த்தபுஷ்டி இருந்திருக்கிறது. 'நம்முடைய மனைவிமாரே கறுப்பு, இதில் மச்சினியை இன்னொருவர் கறுப்பு என்று சொல்லி விட்டால் என்ன வந்துவிடப் போகிறது?' என்ற அலட்சிய மனப்பான்மையுடன் சும்மா யிருந்திருக்கிறார்கள்!" என்றாள் விமலா.

தம்முடைய அசதியையும் கவலையையும் மறந்து சிரித்தார் தகப்பனார். பிறகு மேலும் ஒன்றும் சொல்லாமல், நாற்காலியை விட்டு எழுந்து போய்விட்டார். விமலாவும் சரளாவும் தத்தம் கணவன்மார் ஆபீஸ்களிலிருந்து வரட்டும் என்று அப்போதே நிச்சயித்துக் கொண்டார்கள்.

* * *

மிருணாளினி ராம சர்மாவின் மூன்றாவது புத்திரி. விமலாவும் சரளாவும் முதலிருவர். 'கல்யாணத்தைச் செய்து பார்; வீட்டைக் கட்டிப் பார்' என்கிற வாசகம் விமலா, சரளா ஆகிய இந்த இருவர் சம்பந்தத்தில் ராம சர்மாவுக்கு அத்தனை சிரமம் தரவில்லை. விமலாவுக்குக் கல்யாணம் செய்து கொடுத்த மறு வருஷமே சரளாவுக்குக் கல்யாணம் செய்து

கொடுத்தார் அவர். அவர்கள் இரண்டு பேருக்கும் கண் நிறைந்த கணவன்மார்கள் வாய்த்து விட்டனர்.

ஆனால் இந்த மூன்றாவது பெண் மிருணாளினியின் விஷயத்தில்தான், முதல் தட்டல், பிறகு பல விதத்திலும் தட்டலாகிக் கொண்டே வந்தது.

மிருணா, மற்ற இருவரைவிட அப்படியொன்றும் அழகிலோ, படிப்பிலோ, குணத்திலோ வேறு எந்த விதத்திலுமோ குறைந்தவளல்ல. சொல்லப் போனால் மிருணா தன் சகோதரிகளைவிட நன்றாகப் பாடுவாள்; ஏன், மிருணாவுக்கு நடனம் கூட நன்றாக வந்தது. படிப்பிலும் அவள் புத்திசாலி; 'கான்வென்டில்' மெட்ரிக் படித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் இந்தப் பெண்ணின் கல்யாணம் பெரிய புதிராகவே தென்பட்டது சர்மாவுக்கு. அதனால் சர்மா வரன்களுடன் தொந்த யுத்தம் செய்து கொண்டிருந்தார்.

அவருடைய மாப்பிள்ளைகளையும் சும்மா சொல்லக் கூடாது. இரண்டு பேருமே தங்கக் கட்டிகள். அவருடைய மூன்றாவது புத்திரியின் கல்யாண விஷயமாக அவர்களால் சர்மாவுக்கு நிச்சயம் ஒரு நல்ல பலன் இருந்தது. இரண்டு மாப்பிள்ளைகளும் தங்களுடைய நண்பர்கள், நண்பர்களுக்கு நண்பர்கள், உறவினர்கள் என்று இப்படி மைத்துனி மிருணாளினிக்காக ஜாதகங்களாகக் கொண்டு வந்து குவித்தார்கள். சிபார்சுகள், போக வர் ரயில், பஸ் செலவு, அலைச்சல் என்று எல்லாவற்றையும் தங்கள் பங்கிலேயே மேற்கொண்டார்கள். இதில் மாமனாருக்குப் பரம சந்தோஷம்; விமலாவுக்கும் சரளாவுக்குமோ பெருமை பிடிபடவில்லை. ஆனால் வரன் ஒன்றும் குதிராமல் இருந்ததுதான் எல்லாருக்கும் கொஞ்சம் வருத்தமா யிருந்தது; சர்மாவுக்கு அந்த வருத்தம் கொஞ்சம் அதிகமா யிருந்தது.



* * *

குடும்பத்திலிருந்தவர் எல்லாரும் இப்படித் தன் கல்யாணத்துக்காகக் கவலைப் பட்டுக் கொண்டிருந்த போது, மிருணாளினி இந்தக் கவலைகள் எதிலும் பங்கு கொள்ளாமல், பறந்து திரியும் ஓர் இளம் சிட்டைப்போல வீட்டிலும் வெளியிலும் வளைய வளைய வந்தாள்.

மிருணாவைக் கறுப்பு என்று சொல்ல முடியாது; மாநிறம் என்றும் சொல்ல முடியாது; 'சிவப்பு இல்லை' என்றுகூடச் சொல்ல முடியாது. சுருளான நீண்ட பின்னலும், அந்தப் பின்னல் அவள் முதுகில் காட்டியமாடும் நிறுகமே அவளுடைய இயற்கை அழகைப் பல மடங்கு உயர்த்தின. பட்டைப் பச்சைக் கரை போட்ட தூய வெள்ளைப் புடவையில் மிருணாளினி பள்ளிக்கூடத்துக்குப் புறப்படும்போது, அப்சரஸைப் போலத் தோன்றா விட்டாலும், அப்பழுக்கு இல்லாத அழகு மங்கையாகவே தோன்றும்.

மிருணாளினிக்குப் புது மணம் வீசும் தாழம்பூ வைத்துப் பின்னிவிட்டுச் சரளா அவளைப் பார்த்து, "மிருணா! பவுடரைக் கொஞ்சம் அதிகமாகப் பூசிக் கொள்ள வேண்டும் நீ!" என்றாள்.

"எதற்காக அக்கா?" என்று மிருணா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"மேனி இன்னும் சிவப்பாய்த் தெரிய வேண்டுமானால், கொஞ்சம் பவுடரைக் கூடப் பூசிக்கொள்ள வேண்டும்" என்றாள் சரளா தீர்மானமான தொனியில்.

"நாடகத்தில் அரிதாரம் பூசிக் கொண்டு வருகிறார்களே, அது மாதிரியாகவா?" என்று சொல்லிக் 'கல கல' வென்று சிரித்தாள் மிருணாளினி.

"இந்தக் குறும்புத்தனமான பேச்சுத்தான் மிச்சம். போன வாரம் உன்னைப் பார்த்து விட்டுப் போன வரன், இன்று அப்பாவிடம் என்ன சேதி சொல்லியனுப்பி யிருக்கிறார், தெரியுமா?"

"சொன்னால் தானே தெரியும்!"

"நீ கறுப்பாம்."

"ஓஹோ!"

"உன் கல்யாணம் எப்படித்தான் முடியப் போகிறதோ, அதுதான் எல்லாருக்கும் பெரிய விசாரமாய் இருக்கிறது. நீயானால் இப்படிக் கொஞ்சமேனும் கவலை யில்லாமல் பேசுகிறாய்?" என்று பெருமூச்செறிந்தாள் சரளா.

"எனக்குக் கல்யாணம் ஆகாவிட்டால் அதற்கு நான் என்ன பண்ணுவேன், தெரியுமா? ஆசிரியப் பயிற்சி பெற்று உபாத்தியாயராகி என் வயிற்றுப் பாட்

டுக்கு ஏதாவது ஒரு வழி தேடிக் கொள்வேன்!'' என்றாள் மிருணாளினி.

''போடி பைத்தியம்! இப்படியெல்லாம் அசட்டுப் பிசட்டென்று பேசக் கூடாது! உனக்காக உன் அத்திம்பேர்கள் கூட எவ்வளவு தீவிரமாக ஜாதக விஷயமாகப் பாடுபடுகிறார்கள்! எப்படியும் உன்னுடைய கல்யாணம் சீக்கிரம் நடந்தே தீரப் போகிறது!'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து சென்றாள் சரளா.

அப்போதுதான் விமலாவின் கணவன் கங்காதரன் ஆபீஸிலிருந்து வந்திருந்தான்.

அவன் கோட்டைக் கூடச் சரியாய்க் கழற்றி யிருக்க வில்லை. அவன் எதிரே விமலா பிரசன்னமாகி, ''இரண்டு மாப்பிள்ளைகளுமாக, அந்த மனுஷர் மிருணாவைக் கறுப்பு என்று சொன்ன போது சும்மா யிருந்தீர்களாக்கும்!'' என்றாள். அவள் குரலில் வேகம் இருந்தது; கேலி இருந்தது; கோபமும் இருந்தது.

''இதோ பார், விமலா! அந்தச் சமயத்தில் நான் என்ன பேசிவிட முடியும்? உன் அப்பாவுடன் அந்த மனுஷர் பேசிக் கொண்டிருக்கிறார். 'பெண் சற்றுக் கறுப்பு என்று அபிப்பிராயப்படுகிறான் பையன். இந்தக் காலத்துப் பையன்களின் எண்ணங்களும் பேச்சுக்களுமே விசித்திரமானவை என்று நான் உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை, சார். உங்களுடைய முதலிரண்டு தங்கமான மாப்பிள்ளைகளையும் பார்த்தால், எனக்கும் உங்கள் குடும்பத்தில் சம்பந்தம் செய்து கொள்ளத்தான் ஆசையாக இருக்கிறது. ஆனால்......' என்று இப்படியெல்லாம் அந்த மனுஷர் விதரணையோடு சொல்லுகிற சமயத்தில் நடுவில் நான் என்ன சொல்ல இருக்கிறது, விமலா?''

''ஆமாம்! அந்த மனுஷர் பேசியதில் விதரணை இருக்கிறது என்று நீங்கள் தான் சொல்ல வேண்டும்! அவர் உங்களைப் புகழ்ந்தவுடனே உங்களுக்கு உச்சி அப்படியே குளிர்ந்து விட்டது. இதோ பாருங்கள். சீக்கிரத்தில் எப்படியாவது நம் மிருணாவுக்கு நீங்களாக ஒரு வரன் பார்த்து முடித்து வைத்தீர்கள் என்று இருக்க வேண்டும். தெரிந்ததா? 'என்னுடைய மூத்த மாப்பிள்ளையால் தான் மிருணாவின் கல்யாணம் நல்லபடியாய் நடந்தேறியது' என்று அப்பா நாலு பேரிடம் புகழ்ச்சியாய்ச் சொல்லி நான் கேட்க வேண்டும்'' என்றாள் விமலா.

விமலாவின் உள் அந்தரங்கத்தை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டவனைப் போல் தலையாட்டினான் கங்காதரன்.



ஏறக்குறைய அதே சமயத்தில், வீட்டின் மற்றொரு புறத்தில், சரளா தன் கணவன் ஈசுவரனை விசாரித்துக் கொண்டிருந்தாள்.

''அப்போது உங்கள் புத்தி எங்கே போயிருந்தது?''—சரளா எப்போதுமே பட படப்புச் சுபாவம் நிறைந்தவள். ஈசுவரனும் அவளுக்குச் சளைத்தவனல்ல.

''இந்தக் கேள்வியை உன் அப்பாவிடமே போய்க் கேளு!'' என்று திருப்பி விட்டான் அவன்.

''ஏனாம்? மூன்று பெண்களைப் பெற்று, பாங்கியில் போட்ட பணத்தையெல்லாம் இப்படி மாப்பிள்ளைகளுக்குக் கொடுத்துக் கொடுத்துச் சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயமாக ஆக்கிக் கொண்டு வருகிறார், பாருங்கள்! அதற்கு இதுவும் சொல்வீர்கள், இன்னமும் சொல்லுவீர்கள்!'' என்று குதித்தாள் சரளா.

''ஆமாம், இப்போது என்ன ஆகி விட்டது?'' என்றான் ஈசுவரன்.

''கறுப்பு என்று என் தங்கையை—உங்கள் மச்சினியை—வாய் கூசாமல் ஒரு பேர்வழி அபாண்டமாகச் சொல்லி விட்டால், அதைக் கேட்டுக் கொண்டு நாம் சும்மா வந்து விடுவதா?''—சரளாவிடம் இன்னும் ஸ்வரம் குறையவில்லை.

''பெண்ணைப் பெற்றால் இப்படி நாலு வார்த்தை கேட்கத் தயாராக இருக்கத் தான் வேண்டும். இதற்கெல்லாம் பார்த்தால் முடியுமா?'' என்றான் ஈஸ்வரன்.

''போதும். உங்கள் வேதாந்தம். நீங்கள் ஓர் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் இன்ஸ்பெக்டர்; அத்திம்பேரோ பிரபல துணிக் கடை ஒன்றின் மானேஜர். இரண்டு

பெருமே சமுதாய வாழ்வில் ஈடுபட்டவர்கள். மாசம் உங்களிடம் ஆயிரம் இரண்டாயிரம் பேர் திணறித் திண்டாடித்தான் போவார்கள். ஆனாலும் என்ன பிரயோசனம்? உங்கள் மச்சினிக்கு ஒரு வரன் கண்டு பிடிக்க முடியவில்லை!"

"இதோ பார், சரளா! நாங்களும் உன் அப்பாவுடன் அலையத்தான் செய்கிறோம். உன் அப்பாவுக்குப் பிள்ளைகள் என்று இருந்திருந்தால்கூட அவர்கள் இவ்வளவு பாடுபட மாட்டார்கள்......"

"ஆரம்பித்து விட்டீர்களா, உங்கள் கதையை? இதோ பாருங்கள், அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் தங்கை மிருணாவின் கல்யாணத்தை நீங்கள் முடித்து வைத்தீர்கள் என்ற பெருமை எனக்கு இருக்க வேண்டும். நான் சொல்கிறது புரிகிறதா?"

"புரிகிறது. உன் அப்பா என்னைப் பலரிடம் சிலாகித்துச் சொல்ல வேண்டும். அவ்வளவுதானே?" என்றான் ஈசுவரன்.

*   *   *

அடுத்த ஒரு சில வாரங்களுக்கு விசேஷம் ஒன்றும் நடக்கவில்லை.

ஒருநாள் ராம சர்மாவுக்குத் தபாலில் வந்தது ஒரு குறிப்பிட்ட ஜாதகம்.

தமது சகதர்மிணி தர்மாம்பாளிடம் விவரம் தெரிவித்தார் சர்மா. மதுரையிலிருந்து வந்திருக்கும் ஜாதகம் என்றும் பையன் வீட்டாரைக் கண்டு பேச அன்று இரவே மதுரைக்குப் புறப்பட வேண்டும் என்றும் சொன்னார் சர்மா.

என்னதான் முயற்சி செய்தும் கங்காதரனும் ஈஸ்வரனும் அன்றிரவு சர்மாவுடன் மதுரைக்குப் புறப்பட முடியவில்லை. ஆபீஸ்களில் அவரவருக்கு அவசர வேலைகள் அதிகமாக இருந்தன. விமலாவுக்கும் சரளாவுக்கும் அவர்கள் கூடப் போகாததில் அதிக வருத்தம்தான்.

*   *   *

மூன்று நாட்கள் கழித்துச் சர்மா மதுரையிலிருந்து திரும்பி வந்தார்.

நல்ல செய்தி கொண்டு வந்தார்.

"நம் மிருணாவின் போட்டோவைப் பார்த்தே பையன் மயங்கி விட்டான். நம் குடும்பத்தின் அருமை, பெருமையைப் பற்றி நான் ஒன்றும் பிரமாதப் படுத்திச் சொல்லவில்லை. ஆனாலும் பையனுடைய அப்பாவும் அம்மாவும் மிருணாவின் ஜாதக விசேஷத்தையும் போட்டோவையும் பார்த்தே முடிவுக்கு வந்துவிட்டார்கள். இந்த வார முடிவில் நிச்சயத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டு, மிருணாவையும் அழைத்துக் கொண்டு நாம் மதுரைக்குப் புறப்பட வேண்டும். தெரிந்ததா?" என்றார் ராம சர்மா.

விமலா கங்காதரனைப் பார்த்தாள்; சரளா ஈஸ்வரனைப் பார்த்தாள். மிருணாளினியின் முகத்திலோ இன்னதென்று விவரித்துச் சொல்ல முடியாதபடி ஒரு குறும்புப் புன்னகை மலர்ந்திருந்தது.

*   *   *

அன்று சாயங்காலம் சரளா, மிருணாளினிக்குப் பின்னிக் கொண்டிருந்தாள். விமலா அருகில் உட்கார்ந்திருந்தாள்.

"அத்திம்பேர்களால் சாதிக்க முடியாத காரியத்தை அப்பா ஒண்டியாகப் போய்ச் சாதித்துக் கொண்டு வந்து விட்டார், அக்கா...!" என்றாள் மிருணா.

"அப்படிச் சொல்ல முடியுமா, மிருணா? உன் அத்திம்பேர்கள் மதுரைக்குப் போயிருந்தால் இந்த காரியத்தைச் சாதித்திருக்க முடியாதென்று நினைக்கிறாயா?" என்றாள் விமலா கோபத்துடன்.

"கண்டிப்பாய்க் காரியம் நடந்திருக்காது!" என்றாள் மிருணாளினி.

"ஏய், மிருணா! இதென்ன துடுக்குத் தனம்! படித்தவள் என்றால் இத்தனை அகந்தையா?" என்று கத்தினாள் சரளா.

"அட, அசட்டு அக்காமார்களே! எனக்குத் தெரிந்த அளவுகூட உங்களுக்கு உலகம் தெரிய வில்லையே? ஒவ்வொரு வரனைப் பார்க்கப் போகும் போதும், அத்திம்பேர்களும் கூடப் போனார்கள் இல்லையா? அப்பாவும் அவர்களுக்கெதிரில் மாப்பிள்ளைகளிடம் ரொம்பவும் குழைந்திருக்கிறார். அதனால் 'சரிதான்! முதல் இரண்டு மாப்பிள்ளைகளுக்கும் இத்தனை சலுகையா? நம்ப பையன் மூன்றாவது மாப்பிள்ளையாகப் போய்ச் சேர்ந்தால், அவன் விஷயம் இரண்டாம் பட்சமாகத்தான் முடியும் போலிருக்கு' என்று நினைத்துத் தட்டிக் கழித்திருக்கிறார்கள்..." என்றாள் மிருணாளினி.


"ரொம்ப சரி!" என்றான், இதைக் கேட்டுக் கொண்டே வந்த கங்காதரன்.

அவன் பின்னாலேயே வந்த ஈசுவரன், "பலே, மணப் பெண்ணுக்கு இத்தனை வேதாந்தம் தெரிந்திருக்கிறதே!" என்றான்.

*   *   *

மிருணாளினியின் கல்யாண தினம் வரை, முதல் இரண்டு மாப்பிள்ளைகளும் 'ஏனோதானோ' என்று சற்று முறுக்காகவே இருந்தார்கள். அவர்கள் அப்படித்தானே இருக்க வேண்டும்!

மூன்றாவது மாப்பிள்ளையின் வரவு—அதாவது மிருணாளினியின் கல்யாணம்—நடந்தேறியது, சுபமானதொரு முகூர்த்தத்தில். அதற்கப்புறம் முதல் இரண்டு மாப்பிள்ளைகளும் மூன்றாவது மாப்பிள்ளையுடன் சகஜமாகப் போய் விட்டார்கள்.



மழையிலும் வெய்யிலிலும்

உங்களுக்குப் பாதுகாப்பளிப்பது

Firestone
பயர்ஸ்டோன்

அவைகள்

சூபர் கம்-டிப்பிடு டயர்கள்



பாதுகாப்பு! சூபர் கம்-டிப்பிங் முறையினால் மிக்க உறுதி பெற்ற டயர்கள் வெடிப்புகள் ஏற்படாமல் தடுத்து அதிக பாதுகாப்பு அளிக்கிறது.

சறுக்காது! பயர்ஸ்டோன் டயரில் அமைக்கப்பட்டுள்ள சறுக்குதலைத் தடுக்கும் 5620 வளைவுகள், மிகுந்த பாதுகாப்பு அளிப்பதுடன் துரிதமாகவும் ஜாக்கிரதையாகவும் வண்டியை நிறுத்த உதவுகிறது.

நீங்கள் பயர்ஸ்டோனையே சிறந்ததாகக் கருதி வாங்குவதற்குக் காரணம் அதன் நீடித்த உழைப்பும் மிகுந்த பாதுகாப்புமே.

இன்று சிறந்தது—நாளை இதைவிடச் சிறந்தோங்குவது.

ஞாபகமிருக்கட்டும்! ஒவ்வொரு புது டயருக்கும் ஒரு புது பயர்ஸ்டோன் டியூபும் தேவை!


நம்பிக்கையானது
சக்தி வாய்ந்தது
சிக்கனமானது

மர்பி ரேடியோ


murphy radio



மாடல் டி.ஏ 222
விலை ரூ. 300/-



மாடல் டி.ஏ - 224
விலை ரூ. 425/-



மாடல் டி.ஏ 226
விலை ரூ. 575/-

டிஸ்டிரிபியூட்டர்கள் :
அடிஸன் & கம்பெனி லிமிடெட்,
158 மவுண்ட் ரோடு, சென்னை.

நீரிழிவு

குணமாகும்

சிறு நீரில் சர்க்கரை காண்பது நீரிழிவு (DIABETES) நோயின் முக்கிய அறிகுறியாகும். உங்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாயிருந்தாலும், உடல் உருகிக் கொண்டு வந்தாலும், அடிக்கடி நீர் இறங்கினாலும் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இக்கொடிய உடல் உருக்கி நோய், தான் பற்றினவர்களைக் கடைசி மூச்சு உள்ள வரையில் விடுவதில்லை; கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை மரண வாயிலுக்கு இழுத்துச் சென்று விடும். நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த இஞ்செக்ஷன்கள் போடப்படுகின்றன; ஆனால் அவற்றினால் வியாதி கொஞ்சமும் குணமாவதில்லை. மேற்படி இஞ்செக்ஷன்கள் நீரில் சர்க்கரையைக் குறைக்கின்றன—அதுவும் மருந்துச் சக்தி உள்ள வரையில்தான். ஆகவே, உபாதைகளைத் தடுக்க வாழ்நாள் முழுவதும் ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டியதுதான். இதனால் அதிக செலவு ஏற்படுவது மட்டுமல்லாது உடலுக்கு கஷ்டம் உண்டாகிறது. நோய் குணப்படுத்தாது போனால் நீங்கள், புண்களினாலும், கண் நோய், பல் நோய், வயிற்றுக் கோளாறு முதலிய பலவித வேதனைகளால் சிரமப்பட நேருகிறது. நீரிழிவு வியாதியை, வீனஸ் சார்ம் மாத்திரைகளை உபயோகித்து, சிக்கனமாகவும், சுலபமாகவும், நிச்சயமாகவும், பத்திரமாகவும் சிகிச்சை பெறுங்கள்.

பண்டைக்கால புனித வைத்திய முறையைக் கொண்டு, அரிய மூலிகைகளின் சேர்க்கையுடன் தயார் செய்யப்படும் வீனஸ் சார்ம் மாத்திரைகள், நோயை அடியோடு அகற்றுவதுடன், எத்தனையோ பேர்களை இஞ்செக்ஷன் அல்லது ஒருவிதமான பட்டினி இல்லாமல் குணமாக்கியிருக்கிறது. இதை உபயோகித்து பல ஆயிரக்கணக்கானவர்கள், இந்நோயின் மரணப் பிடியிலிருந்து தப்பியிருக்கிறார்கள். இம் மருந்தை உபயோகிக்கத் தொடங்கிய இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம், நீரில் சர்க்கரை குறைகிறது; அத்துடன் அதிக நீர் இறங்குவதும் நிற்கிறது. சில நாட்கள் உபயோகித்தாலே நோய் தணிந்து திருப்தி ஏற்படுகிறது. வீட்டிலிருந்தபடி வீனஸ் சார்ம் சிகிச்சையைத் துவங்குங்கள். விசேஷ பத்தியம் எதுவும் இல்லை. நீங்களே அதன் குணத்தை அறிவீர்கள். இதுபற்றிய விரிவான இலவச ஆங்கிலப் பிரசுரத்தை வரவழைத்துப் பாருங்கள்.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றின் விலை 6-12-0
(பாக்கிங் தபால் செலவு இனம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரேட்டரி (K.M.)
தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா

பர்மா ரமணி

அழ. வள்ளியப்பா

2. திருட்டுப் பட்டம்

"என்ன ரமணி, சட்டை எங்கே? பனியனோடே வந்திருக்கிறாயே!" என்று கேட்டார் மதுரநாயகம்.

"இல்லை, சார்! கம்பத்திலே ஏறிக் கொடி கட்டிக் கொண்டிருந்தேன். மணிச் சத்தம் கேட்டதும் ஓடி வந்தேன்" என்றான் ரமணி.

"சரி, என் அம்மாவுக்கு நேற்றே பணம் அனுப்புவதாக எழுதியிருந்தேன். மறந்து விட்டேன். இன்றைக்குக் கட்டாயம் அனுப்பிவிட வேண்டும். உடனே தபாலாபீசுக்குப் போய் ஒரு மணியார்டர் பாரம் வாங்கி வா" என்று சொன்னார் மதுரநாயகம்.

"இதோ! ஒரு நொடியில் வாங்கி வருகிறேன்" என்று கூறிவிட்டுத் தபாலாபீஸை நோக்கி ஓடலானான் ரமணி.

உடனே மதுரநாயகம், "ரமணி! ரமணி! வேண்டாம், வேண்டாம். வா, இங்கே!" என்று அழைத்தார்.

ரமணி ஓட்டத்தை நிறுத்தினான். அவர் அருகே திரும்பி வந்தான்.

"ரமணி, நீ போய் பாரம் வாங்கி வந்து, நான் அதைப் பூர்த்தி செய்து, அப்புறம் மணியார்டர் அனுப்புவது என்றால் நேரமாகிவிடும். நானே போய், மணியார்டர் பண்ணிவிட்டு வருகிறேன். யாராவது கேட்டால், தபாலாபீசுக்குப் போயிருப்பதாகச் சொல்" என்று கூறிவிட்டு மதுரநாயகம் சிறிது தூரத்திலுள்ள தபாலாபீசை நோக்கிக் கிளம்பி விட்டார்.

* * *

தபாலாபீசுக்கு மதுரநாயகம் வந்து அரைமணி நேரம் இருக்கும். அவர் வந்தபோது மணியார்டர் செய்யும் இடத்திலே ஒரு 'க்யூ' வரிசை நின்று கொண்டிருந்தது. அப்போது அவர் இருபதாவது ஆளாக அங்கு போய் நின்றார். ஆனால், இப்போது— அதாவது இந்த அரைமணி நேரத்தில் அவர் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வந்து விட்டார். இன்னும் இரண்டு பேர்களே அவருக்கு முன்னால் நிற்கிறார்கள். "சரி, இன்னும் ஐந்து நிமிஷத்தில் நமது முறை வந்து விடும். பணத்தை அனுப்பி விடலாம்" என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டிருந்தார் மதுரநாயகம்.

அந்தச் சமயம் அங்கே வெகு வேகமாக ஓடி வந்தான் ஒரு பையன். அவன் மதுரநாயகத்தின் அருகே சென்றான். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க, "சார், சார்! உங்களைச் சபா முதலாளி உடனே அழைத்து வரச் சொன்னார். கையோடு கூட்டி வரச் சொன்னார்" என்றான்.

இதைக் கேட்டதும் மதுரநாயகம், "என்னடா கண்ணப்பா, என்ன விஷயம்? ஏன் இந்த அவசரம்?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"தலை போகிற காரியம், சார்! உடனே வாருங்கள் சார்!"

"என்னடா இது! விளங்கச் சொல்லேன்" என்று கேட்டார்.

"எல்லாம் நீங்கள் வந்தால் தானாகத் தெரியும்! சீக்கிரம் வாருங்கள் சார்!"

இதைக் கேட்டதும் மதுரநாயகத்துக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கலவரத்துடன் நின்ற இடத்தை விட்டு—அதாவது 'க்யூ' வரிசையை விட்டு வெளியே வந்தார்.

"நல்ல வேளை. ஒருவர் தொலைந்தார்" என்று மதுரநாயகத்துக்குப் பின்னால் நின்றவர் மகிழ்ச்சியோடு சிறிது முன்னால் நகர்ந்தார்.

"நல்ல சமயத்திலே வந்தானே, அந்தப் பையன். அவன் மகராசனாயிருக்க வேணும்" என்று வாழ்த்திக் கொண்டே அவருக்குப் பின்னால் நின்றவர்களும் முன்னால் நகர்ந்தார்கள்.

ஆனால், பாவம், அரைமணி நேரமாகக் கால் வலிக்க நின்ற மதுரநாயகத்துக்கு இப்படிப்பட்ட ஒரு அவசர செய்தியா வர வேண்டும்!

தபால் ஆபீஸை விட்டு வெளியில் வந்த மதுரநாயகம், "டேய், கண்ணப்பா, என்னடா விஷயம்?" என்று திரும்பவும் கேட்டார்.

"நான் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள், சார். நேரிலே வந்தால் எல்லாம் தானாகத் தெரிந்து விடும்" என்று கூறிக் கொண்டே முன்னால் வெகு வேகமாக ஓடினான் கண்ணப்பன். மதுரநாயகமும் அவனைப் போல் தெருவிலே ஓட முடியுமா? ஆனாலும், அவசரம் அவசரமாக நடந்து சென்றார்.

நாடக சபைக் காரியாலயத்துக்குள் மதுரநாயகம் நுழைந்ததும், அங்கு வேலை பார்க்கும் ஆட்கள் எல்லோரும்



ரமணியைச் சுற்றிக் கும்பலாக நிற்பதைப் பார்த்தார். ரமணி தலையைக் குனிந்து கொண்டு நின்றான்.

மதுரநாயகத்தைக்கண்டதும், "டேய், மானேஜர் வந்து விட்டார்!" என்று கூறிக் கொண்டே கூட்டத்திலிருந்த ஒருவன் ஒதுங்கி நின்றான். உடனே மற்றவர்களும் ஒதுங்கி நின்றார்கள்.

'மானேஜர் வந்து விட்டார்' என்பதைக் கேட்டதும், ரமணியின் அழுகை அதிகமாகி விட்டது. தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

உடனே மதுரநாயகம் அவன் அருகே சென்று, "ரமணி, ஏன் அழுகிறாய்? என்ன விஷயம்?" என்று கலக்கத்துடன் கேட்டார். அவன் பதில் பேச வில்லை. அவனால் பேச முடிய வில்லை! மேலும் மேலும் அழுதான்.

"சொன்னால் தானே தெரியும், சும்மா அழுது கொண்டே நின்றால்?" என்றார் மதுரநாயகம்.

உடனே, ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்த நாடக சபா முதலாளி மோகனரங்கம் மதுரநாயகத்தின் அருகே வந்தார். "மதுரநாயகம், நான் சொல்லுகிறேனே என்று வருத்தப்படக்கூடாது. இந்த மாதிரி ஊர் பேர் தெரியாத அனாதைகளை யெல்லாம் இங்கு வேலைக்கு வைத்ததே தப்பு. அன்றைக்கே சொன்னேன். நீங்கள் கட்டாயப்படுத்தினீர்கள். சேச்சே, ரொம்ப மோசம். நமது சபாவில் இது வரை ஒரு துரும்பு கூடக் களவு போனதில்லை..." என்று அவர் ஆரம்பித்தார்.

உடனே மதுரநாயகம் "என்ன! களவு போய் விட்டதா? என்ன களவு போய் விட்டது? விஷயத்தைக் கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்" என்றார் பதட்டத்துடன்.

"எல்லாம் உங்கள் ரமணியைக் கேட்டாலே தெரியும். டேய், இந்தத் திருட்டு அழுகை யெல்லாம் இங்கே வேண்டாம். உன் திருவாயைத் திறந்து நீ செய்த திருவிளையாடலை எடுத்துச் சொல்லுடா! அவரும் தெரிந்து கொள்ளட்டும். அயோக்கியப் பயலே! இது மட்டும் தானா; இன்னும் என்னென்ன திருட்டெல்லாம்செய்திருக்கிறாயோ?" என்றார் நாடகசபை முதலாளி.

இதைக் கேட்ட பிறகும் ரமணியால் மௌனமாக இருக்க முடிய வில்லை. "மானேஜர் சார்...சத்தியமாக...நான்...திருட வில்லை. வீணாகப்பழி..." அவனால் அதற்குமேல் பேச முடிய வில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது.

"ஆமாம். சத்தியமாக இவர் திருட வில்லையாம். அடாடா! போன ஜன்மத்தில் இவர்தான் அரிச்சந்திரனாக இருந்தார். அப்போது நிஜமே பேசியதால், ராஜ்யத்தை இழந்து, மனைவி மக்களையும் விற்கும்படியாகி விட்டதல்லவா? அதனாலே 'இனி மேல் நிஜமே பேசுவதில்லை. பொய்யேதான் சொல்லுவது' என்று முடிவு பண்ணிக் கொண்டு இந்த


அழகான தோற்றம்
ஆரோக்யமான
வாழ்க்கை
லோத்ரா
Lodhra
கர்ப்பாசய ரோக நிவாரணி
கேசரி குடீரம் லிட், சென்னை-14


பிரபல்ய நோவு
நிவாரணி
நோ-பெய்னின்
புகழ் அதன்
இணையில்லா
சக்தியினால்
மேலும் பரவுகிறது
பெரிய, சிறிய ட்யூப்
களில் கிடைக்கிறது
கல்கத்தா
கெமிகல்
கல்கத்தா 29
நோ-பெய்ன்
எல்லா வலிகளுக்கும் ஒரு ஔடதம்
Ta-IA
தென் இந்தியா ஆபீஸ் : 5/149, பிராட்வே, சென்னை-1


ஜன்மத்தில் இப்படி இந்த அயோக்கியப் பயலாக வந்து பிறந்திருக்கிறார்! அப்படித்தானேடா?'' என்று குத்தலாகக் கூறினார் மோகனரங்கம்.

மதுர நாயகத்துக்குத் 'திருட்டுப்போன சாமான் எது? எப்போது திருட்டுப் போயிற்று?' என்பதைப் பற்றி யெல்லாம் ஒன்றுமே தெரியவில்லை. யாராவது சொன்னால் தானே தெரியும்? அவர் முதலாளியைப் பார்த்து, ''ஐயா, நடந்தது என்ன என்பதைக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லக் கூடாதா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!'' என்றார்.

''நடந்ததுதானே தெரிய வேண்டும்? சரி, இந்தத் திருட்டுப் பயல் சொல்லாத போனால் போகட்டும்'' என்று கூறிவிட்டு, ''ஏ, துரைசாமி! இங்கே வா!'' என்று அங்கு நின்று கொண்டிருந்த திரை இழுக்கும் துரைசாமியை அழைத்தார் மோகனரங்கம்.

துரைசாமி முன்னால் வந்தான். ''நடந்ததை நடந்தபடி சொல்லு'' என்றார் சபா முதலாளி.

''இதோ சொல்லுகிறேன்'' என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டு ஆரம்பித்தான் துரைசாமி. ''நான் பகல் சாப்பிட்டு விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். தியேட்டருக்குள் நுழையும் போது, ஆண்களுக்கு 'டிக்கெட்' கொடுக்கும் அறை இருக்கிறதே, அதற்குள்ளே ரமணி மட்டும் தனியாக ஏதோ செய்து கொண்டிருப்பதைக் கவனித்தேன். உடனே, ஜன்னல் ஓரமாகப் போய் நின்று கொண்டு அவன் உள்ளே என்ன செய்கிறான் என்று மெதுவாக உற்றுப் பார்த்தேன். அவன் என்ன தெரியுமா செய்தான்! அந்த அறையில் வடக்கு மூலைக்குச் சென்றான். மேல் கூரையில் ஏதோ ஒரு பொட்டலத்தைத் திணித்து வைத்தான். அது என்ன பொட்டலமாக இருக்கும் என்று நான் யோசித்துப் பார்த்தேன். புரியவில்லை. 'சரி, நாம் போய் எடுத்தால் சந்தேகத்துக்கு இடம் ஏற்படும்' என்று எண்ணி நேராக ஆபீஸுக்கு வந்தேன். உங்களிடமாவது முதலாளியிடமாவது சொல்லிப் பார்க்கச் சொல்லலாமென்று நினைத்தேன். நீங்கள் அறையில் இல்லை. உடனே முதலாளி அறைக்குச் சென்றேன். அவரிடம் விஷயத்தைச் சொன்னேன். உடனே அவர் என்னையும் அழைத்துக் கொண்டு 'டிக்கெட்' அறைக்குச் சென்றார். ரமணி பதுக்கி வைத்த பொட்டலத்தை எடுக்கும்படி என்னிடம் சொன்னார். நான் அதை எடுத்து அவர் கையிலே கொடுத்தேன். அவர் அதைப் பிரித்தார். பிரித்ததும்...'' — துரைசாமி முழுவதையும் கூறி முடிக்கவில்லை. அதற்குள் ''போதும்! என் மேஜைமேலே அந்தப் பொட்டலம் இருக்கிறது. அதை உடனே எடுத்து வா. நேரே பார்த்தால்தானே அவருக்குத் தெரியும்!'' என்றார் மோகனரங்கம். அதைக் கேட்டதும் மதுர நாயகம் திகைத்துப் போய் அப்படியே சிலைபோல் நின்று விட்டார்! (தொடரும்)



கரடி முகம்தான். திருப்பிப் பாருங்கள்! மனித முகமாக மாறும்!

பல்டாக்டர் அங்கீகரித்த இவ்வழியில் பற்சிதைவைத் தடுக்க முயலுங்கள்

2-நிமிஷ கால்கேட் பழக்கத்தை 4,000க்குமேல் பல் டாக்டர்கள் அங்கீ கரிக்கின்றனர்





ஜயண்ட் சைஸ் லாபகரம்

✔ இனிய சுவாசம்!

✔ ஒளிவீசும் பற்கள்!

✔ சொத்தை குறைகிறது!

...ஆம், இம்மூன்றையும் பெற கால்கேட் டூத் பவுடரை, வழக்கமாக உபயோகியுங்கள்!

- சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பிரஷ் கொண்டு 2-நிமிஷம் தேய்க்கவும்.
- பல்லின் முன்புறம், பின்புறம் நுனிபாகம் மூன்றையும் தேய்க்கவும்.
- எப்பொழுதும் ஈறிலிருந்து எதிர்த் திசையில் தேய்க்கவும்.

கால்கேட் டூத் பவுடர்

TPC/15


"என்ன மாப்பிள்ளை! காது கேட்கிறதா?"
"கேட்கிறது, மாப்பிள்ளை காது ஒரு ஜோடி வயிரக் கடுக்கன் கேட்கிறது!"
"மிருதங்கம் எப்படி சார்!"
"மிருதங்கம் ரொம்ப 'ஸ்ட்ராங்'! இத்தனை அடிக்கும் அது உடைய வில்லையே! எங்கே வாங்கினீ
ஹாஸ்யக் களஞ்சியம்
தோ! தோ! தோ! என்ன ஒரு நாயைக் கூடக் காணுமே!
1
தோ! தோ! தோ!
2
"எதேது இந்த வீட்டிலே குழந்தை இருப்பது ரொம்பக் கஷ்டமாக இருக்கே! சாதகம் செய்வதற்குக் கூடவா ஒலி பெருக்கி வைத்துக் கொள்ளுவது?!"


சாமா
"பேப்பர் படிக்கிறீர்களா? இந்தாருங்கள்."
"ஐயோ வேண்டாம்! சிகரெட் பிடிப்பது எவ்வளவு கெடுதல் என்று விடாமல் பேப்பர்களில் எழுதினார்கள், அதனால் நான் படிப்பதையே நிறுத்திவிட்டேன்"
"புது நாற்காலி வாங்க வேண்டும் என்று மாப்பிள்ளை ஒற்றைக் காலில் நிற்கிறார்!"
"அடடே, மாப்பிள்ளை மட்டுமா? நாற்காலியும் கூட ஒற்றைக் காலில் நிற்கிறது.
இவர் என் சிநேகிதர் நம் வீட்டில் டிபன் சாப்பிட அழைத்து வந்திருக்கிறேன்!
பேஷா! வாங்க!
யார் உங்களை அழைத்து வரச் சொன்னது?
டிபன் அவர் கையிலேயே கொண்டு வந்திருக்கிறார்!
"பின்னே என்னங்க, நான் எழுதுகிற கடிதங்கள் தபால் பெட்டியில் போட்டாலும் போய்ச் சேரவில்லையென்கிறார். அவரே தபால் பெட்டியில் போடட்டும் என்றுதான்...!!

ரவிசந்திரிகா



சோமு

15. "ஜிகிஜம்! ஜிகிஜாங்கிஜம்!"

டாக்டர் சுரேஷ் தமது அறையிலிருந்தபடியே கார் வந்து நின்றதையும் அதிலிருந்து ராமநாதன், அப்புலிங்கம், ரவீந்திரன் மூன்று பேரும் இறங்கியதையும் கவனித்தார். அடுத்த நிமிஷமே "நாகரத்தினம்!" என்ற கூப்பாடும் அதைத் தொடர்ந்து, "ரவீ!" என்று அப்புலிங்கம் கதறித் தடுத்த குரலும் டாக்டருக்குக் கேட்டன. அப்படியே எழுந்து வெளியே வந்தார்.


டாக்டர் வெளியே வந்ததைப் பார்த்ததும் அப்புலிங்கம் அவரிடம் சென்று ஒரே பதற்றத்தோடு சொன்னான்: "டாக்டர், ரவீந்திரனைக் கொஞ்சம் தடுத்து நிறுத்துங்களேன். நாகரத்தினத்தைத் துரத்திக் கொண்டு போகிறான்."

புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டே "ரவி! மிஸ்டர் ரவீந்திரன்!" என்று கூப்பிட்டார் டாக்டர் சுரேஷ். என்ன ஆச்சரியம்! அந்தக் குரலுக்கு அத்தனை சக்தி இருந்ததா? வேகமாகச் செல்கிற ரவீந்திரன் அப்படியே நின்று விட்டான்!

ரவீந்திரன் நின்ற இடத்துக்கு டாக்டர் வேகமாக நடந்தார்.

"என்ன ரவி! இப்பொழுது என்ன அவசரம் அப்படி? யானை, புலி, சிங்கம் முதலிய காட்டு மிருகங்களைப் பிடிக்க வேண்டும் என்றால் இப்படியெல்லாம் துரத்திப் போகக் கூடாது. தெரிந்ததா? சாமர்த்தியமாகக் கண்ணி வைத்துப் பிடிக்க வேண்டும். 'கிட்டா' என்றால் தெரியுமா உங்களுக்கு? மைசூர்க் காடுகளிலே யானையைப் பிடிக்கிற முறை அது!" என்று சொல்லிக் கொண்டே, ரவீந்திரனுடைய தோளிலே கைகொடுத்து அவனைப் பக்குவமாக அழைத்துக் கொண்டு தமது அறைக்கு வந்தார் சுரேஷ்.

"உட்காருங்கள் மிஸ்டர் ரவி! வாருங்கள், அப்புலிங்கம்! ராமநாதன்! எல்லாருமே வரலாம் உள்ளே!"



ரவீந்திரன் டாக்டருக்கு எதிரே யிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்.

"டாக்டர் ஸார்! உங்களிடம் ஏதோ மந்திர சக்திதான் இருக்கிறது! நீங்கள் கூப்பிட்டதும் அப்படியே நின்று விட்டானே ரவி! நாங்களுந்தான் தடுத்து நிறுத்தப் பார்த்தோம்! முடிந்ததா!" என்றான் அப்புலிங்கம்.

ரவீந்திரனுக்கு இந்த வார்த்தைகள் ஒன்றும் காதில் ஏறவில்லை. டாக்டரைப் பார்த்து அவன் சொன்னான்:

"டாக்டர்! நீங்கள் நாகரத்தினத்தைக் காட்டு மிருகம் என்று சொன்னீர்கள். அது தப்பு டாக்டர். யானை, புலி, சிங்கம் என்றால் அது நம்முடைய பேரில் பாய்வது நேருக்கு நேராகக் கண்ணுக்கு நன்றாகத் தெரியுமே! நாகரத்தினம் ஒரு நல்ல பாம்பு டாக்டர். தரையிலே நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் ஊர்ந்து வருகிற விஷ ஜந்து! திடீரென்று படம் எடுத்து ஒரு போடு போட்டு விடும் அது!" என்றான் ரவி.

"ரொம்ப சரி, மிஸ்டர் ரவீந்திரன்", டாக்டர் சொன்னார், "ரொம்ப சரி, அந்த நாகப் பாம்பைப் பிடிப்பதற்குக்கூட மகுடி என்று ஒன்று இருக்கிறது அல்லவா? அதைக் கையிலே வைத்து ஊதிக்கொண்டு சென்றுதான் அந்த நாகப் பாம்பைப் பிடிக்க வேண்டும். இப்படி யெல்லாம் சும்மா துரத்திக் கொண்டு ஓடக் கூடாது! தெரிந்ததா!"

"மகுடி மட்டும் இல்லை, டாக்டர்! கையில் வேரும் இருக்கவேண்டும்! சிரியா நங்கை வேர்!" என்றான் ராமநாதன்.

"பேஷ்! பேஷ்! ரொம்ப சரி. மிஸ்டர் ராமநாதன்! ரொம்ப சரி. சிரியா நங்கையோ சிரிக்கும் நங்கையோ அந்த ரகசிய கையில் இருக்க வேண்டும்! என்ன மிஸ்டர் அப்புலிங்கம்! நீங்கள்தான் சித்தர் பாடல்களில் தேர்ந்தவர் ஆயிற்றே! சொல்லுங்களேன், அதன் பெயர் சிரியா நங்கையா அல்லது சிறிய நங்கையா? எது சரி?" என்று கேட்டவாறு பேச்சை மாற்றினார் டாக்டர் சுரேஷ். ரவீந்திரன் நாற்காலியில் இப்பொழுது சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"டாக்டர்! இந்தச் சொல் ஆராய்ச்சிக்கு எல்லாம் இது நேரமில்லை. விஷயம் தலைக்கு மிஞ்சி விட்டது. நான் இல்லாத சமயம் இந்த அயோக்கியன் நாகரத்தினம் கல்யாணியின் அறைக்குச் சென்று இத்தனை நேரம் தூபம் போட்டிருக்கிறான்! என்னால் இதை ஒரு வினாடி கூடச் சகிக்க முடியாது. தெரிந்ததா?"

டாக்டர் சிரிப்பை யெல்லாம் அடக்கிக் கொண்டு ஓரே சிரத்தை நிறைந்த முகத்தோடு ரவீந்திரனைப் பார்த்துக் கேட்டார்:

"சரி, நீங்கள் சொல்வது உண்மையான வார்த்தை. அதற்கு இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?"

"செய்வதென்ன! இனிமேல் ஒரு நிமிஷங்கூட என் மனைவி இந்த ஆஸ்பத்திரியிலே இருப்பதற்கில்லை. இன்று சாயந்திரத்துக்குள்—"

"சாயந்திரமா! மிஸ்டர் ரவி! காலை பத்து மணிக்கெல்லாம் அவளை நீங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். நீங்களானால் சாயந்திரம் என்கிறீர்களே! சாயந்திரம் வரை தாமதிப்பானேன்!" என்றார் டாக்டர் சுரேஷ்.

ராமநாதனும், அப்புலிங்கமும் 'குழப்பத்தோடு டாக்டரைப் பார்த்தார்கள். ஒரு வேளை கோபத்திலே அப்படிச் சொல்கிறாரோ என்று!

"மெய்யாகத்தான் சொல்கிறேன் மிஸ்டர் அப்பு! கல்யாணிக்கு உடம்பில் ஒரு கோளாறும் இல்லை. நரம்பு அதிர்ச்சிக்கு நேற்று மருந்து கொடுத்தேன். இன்று காலை நான் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது. அப்பொழுதுதான் மயக்கம் தெளிந்தும் தெளியாமலும் இருந்தாள். ஹிருதயம், ஸ்வாசப் பை, ஒன்றிலும் பிசகு இல்லை. நோயாளியிடம் பணம் பறிக்கிற இடமாக இருந்தால், இன்னும் ஒரு வாரம் அவளுக்கு 'ஆக்வா' சிகிச்சை செய்து நாள் கடத்தலாம். ஆனால் பாருங்கள், இப்பொழுது இந்த ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி அதிகம். 'ஆக்வா'வோ ரவீந்திரன் வீட்டுக் குழாயில் தாராளமாகக் கிடைக்கும். அதிலும் அவர் மலைக் கோட்டையில் ரிஸர்வாயருக்குப் பக்கத்திலேயே குடியிருக்கிறார். இரவும் பகலும் விடாமல் தண்ணீர் கொட்டிக் கொண்டே யிருக்கும். என்ன மிஸ்டர் ரவி, அப்படித்தானே?" என்று கேட்டுக் கொண்டே,

"வாருங்கள்! கல்யாணி அம்மாளுடைய அறைக்குச் செல்லுவோம்!" என்று சொல்லி நாற்காலியை விட்டு எழுந்தார் டாக்டர் சுரேஷ்.

"தஞ்சாவூர்ப் பொம்மை என்று ஒரு விநோத பொம்மை இருக்கிறதே பார்த்திருக்கிறீர்களா மிஸ்டர் அப்புலிங்கம்! அதைப் போலத்தான் நாகரத்தினத்தின் மனம். எந்தப்பக்கம்சாய்த்துநிறுத்திஅதை எப்படி ஆறப் போட்டாலும், 'டக்' கென்று அந்த பொம்மை மீண்டும் பழைய நிலைக்கே வந்து உட்கார்ந்து கொள்ளும்!

யார் எப்படிக் கையாண்டாலும் சரி; நாகரத்தினத்தின் மனம் அதே விஷம நிலைக்கே மீண்டும் மீண்டும் வந்து நன்றாக உட்கார்ந்து கொள்கிறது. என்ன செய்ய! அவனுடைய உள்ளத்தின் விஷமம் அத்தனை பெரிய ஆஸனத்தில் அமர்ந்திருக்கிறது! ஞானமோ, அந்தத் தஞ்சாவூர்ப் பொம்மையைப் போல் சிறுத்துப்போன தலைக்குள்ளே சின்னஞ் சிறிதாக இருக்கிறது! என்ன மிஸ்டர் ரவி! நான் சொல்வது சரிதானே?" என்று கேட்டார் டாக்டர் சுரேஷ்.

"ரொம்ப சரி, டாக்டர் சார்! எங்கள் வீட்டில் ஒரு தஞ்சாவூர்ப் பொம்மை இருக்கிறது. நீங்கள் இப்பொழுது சொன்ன வார்த்தைகளைக் கேட்டதிலிருந்து, வீட்டுக்குப் போனதும் முதலாவது காரியமாக அந்தப் பொம்மையை எடுத்து முனிஸிபாலிடி குப்பைத் தொட்டியிலே எறிந்து விடுவது என்று தீர்மானித்து விட்டேன்! இல்லையென்றால் அதைப் பார்க்கும்போதெல்லாம் நாகரத்தினத்தின் நினைவு அல்லவா உண்டாகும்!" என்றான் ராமநாதன்.

"இதைத் தெரிந்துதான் திருச்சி முனிஸிபாலிடியார் வீதிகளில் குப்பைத் தொட்டி வைக்கும் விஷயத்தில் சிக்கனமாக இருக்கிறார்கள்!" என்று ஒரு போடு போட்டான் ரவீந்திரன்!

• • •

திருச்சிப் பாலக்கரை வீதியிலே எதிர்கால யோசனைகளைச் சாமர்த்தியமாகத் திட்டமிட்டுக் கொண்டே குப்புசாமியும் நாகரத்தினமும் நடந்தார்கள் அல்லவா? அப்படியே ஆஸ்பத்திரி எல்லை வந்ததும், குப்புசாமியை அனுப்பி விட்டு நாகரத்தினம் ஆஸ்பத்திரிக்குள்ளே நுழைந்தான். அத்தனை வீறுப்போடு அங்கே இனி வருவதில்லை என்று சொல்லிப் போன நாகரத்தினம் மீண்டும் அதே இடத்தில் கொஞ்சமும் தயங்காமல் நுழைந்தான். சகோதர பாசம் அதிகமாக இருந்ததா, அல்லது மீரானிடம் ஏற்பட்ட ஏமாற்ற உணர்ச்சியும், அதனால் உண்டான வேகமும் அதிகமாக இருந்தனவா என்று திட்டமாகச் சொல்ல முடியாது. உண்மை என்னவென்றால், இரண்டுமே அதிகமாகி நாகரத்தினத்தின் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தன.



"கல்யாணியைப் பார்த்துப் பேசி ஒரு விஷயத்தை நன்றாகத் தெளிவுபடுத்திவிட வேண்டும். காரியங்கள் போகிற போக்கைப் பார்த்தால், ஒரு காலத்தில் சர்க்கார் கோர்ட்டு வரை போகவேண்டி ஏற்படும். அப்பொழுது கல்யாணி திருச்சியை விட்டுவிட்டு, லால்குடிக்கே வந்து இருக்கவேண்டிய நிலைமையும்கூட ஏற்படலாம். கோர்ட்டிலே சந்திரிகாவைப் பற்றியும் ரவீந்திரனைப் பற்றியும் ஒளிவு மறைவு இல்லாமல் சாக்ஷியம் சொல்ல வேண்டிய அவசியமும் உண்டாகும். அதற்கெல்லாம் கல்யாணி தயாராக இருக்கிறாளா? இல்லையென்றால் தயாராக இருக்கும்படி அவளிடம் சொல்ல வேண்டும். முன் வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது!"

இவ்வாறெல்லாம் எண்ணமிட்டவனாய் நாகரத்தினம் ஆஸ்பத்திரியில் கல்யாணியின் அறைக்குள்ளே நுழைந்தான்.

கல்யாணி அப்பொழுதுதான் மயக்க மாத்திரையின் வேகத்திலிருந்து விடுபட்டிருந்தான். ஆனாலும் முழுதும் கண்களைத் திறந்து எழுந்து உட்காரவில்லை. நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு கட்டிலுக்கு அருகே வந்து உட்கார்ந்தான் நாகரத்தினம்.

கல்யாணி மெதுவாகக் கண்களைத் திறந்தான். எதிரே நர்ஸுக்குப் பதில் நாகரத்தினம் இருந்ததைக் கண்டதும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"நீயா உட்கார்ந்திருக்கிறாய்! நம்பவே முடியவில்லையே! சொப்பனமா! இல்லை, நிஜந்தானா!"

"அக்கா!" என்று கூப்பிட்டான் நாகரத்தினம். உண்மையிலேயே அந்த அழைப்பில் சகோதர பாசம் தொனித்தது.

"அக்கா! நான்தான் வந்திருக்கிறேன். வேறு யாருமில்லை இங்கே!" என்றான் நாகரத்தினம்.

"அவர் எங்கே? வீட்டுக்குப் போய்விட்டாரா?" என்று கேட்டான் கல்யாணி.

"அத்தான்தானே? நேற்று ராத்திரியே போய்விட்டார். அங்கே சந்திரிகா தனியாக இருக்கிறான் அல்லவா! மனசு கேட்குமா அவருக்கு!" என்றான் நாகரத்தினம். எத்தனை கசப்பு அந்த வார்த்தைகளிலே!

இரவு முழுதும் நன்றாகத் தூங்கியதால் தெளிவோடு கண் விழித்த கல்யாணி இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கலவரம் அடைய வில்லை.

"அது சரி! அவரோடு அத்தனை தூரம் பேசி விட்டு ஓடினாயே. இப்பொழுது ஏன் வந்தாய் இங்கே?" என்று கேட்டாள் கல்யாணி.


"அக்கா! இந்த மனசு கேட்கவில்லை. உன்னை எத்தனை அருமையோடு வளர்த்தோம். கிளியை வளர்த்துப் பூனையின் வாயிலே கொடுத்து விட்டார்கள் அப்பா. அதை நினைக்க நினைக்க—"

"தம்பீ! அப்படியெல்லாம் பேசாதே. அது உனக்கும் நல்லதில்லை. எனக்கும் நல்லதில்லை. தெரிந்ததா!"

"அக்கா! ஆனாலும் இவ்வளவு பைத்தியமாக நீ இருக்க வேண்டியதில்லை. உன் கண் முன்னால் இத்தனை அநியாயம் செய்கிறான் அந்த மனுஷன்! நானே உனக்காக இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று இருக்கிறேன். நீ கொஞ்சம் தைரியமாய் எனக்குப் பக்கபலமாக நிற்க வேண்டியதிருக்க, அதை விட்டு விட்டு இப்படி அசட்டுத்தனமாக—"

"தம்பீ!" என்று கடுமையாகப் பேச ஆரம்பித்தாள் கல்யாணி.

"தம்பீ! நீ தயவு செய்து இங்கேயிருந்து போய் விடு. அவர் இப்பொழுது வந்தால் பழி விழுந்து விடும். உன்னைத் தான் இங்கு வராதே என்று சொல்லி விட்டாரே; மறுபடியும் ஏன் வருகிறாய்?"



"ஹிந்து" பத்திரிகையின் விளையாட்டுப் பகுதியின் ஆசிரியர் ஸ்ரீ பார்த்தசாரதியின் புதல்வி சௌ. கல்யாணிக்கும் சிரஞ்சீவி பி. வி. ரங்கராஜன், B. E. (ஜூனியர் எஞ்ஜினீயர், மராமத்து இலாகா, சென்னை) அவர்களுக்கும் அபிராமபுரத்தில் ஜூலை மாதம் 8-ம் தேதியன்று திருமணம் மிகவும் சிறப்பாக நடந்தது. வாழ்க, மணமக்கள்!

"கூடப் பிறந்த தோஷம் ஒன்று இருக்கிறதே அக்கா! அதற்காகத்தான் வருகிறேன். மானம் மரியாதை எல்லாவற்றையும் விட்டு விட்டு மறுபடியும் வருகிறேன்!"

"இல்லை! நீ வரவேண்டாம். என்றைக்கு என்னை ஒருவரிடம் ஒப்படைத்தாய்விட்டதோ அன்றைக்கே எல்லாம் முடிவாகி விட்டது. அன்றைக்கே நான் திருச்சியைச் சேர்ந்தவள். லால்குடிக்கும் எனக்கும் ஒன்றும் இல்லை!"

"அக்கா! முட்டாள்த் தனமாய்ப் பேசாதே! நாளைக்கு அந்தச் சந்திரிகா உன்னை வீட்டை விட்டுத் துரத்தும்போது. நீ லால்குடிக்குத்தானே வரவேண்டும், புரிந்ததா? அதற்கு இடமில்லாமல் இன்றைக்கே உன்னை அன்போடு கூப்பிடுகிறேன். வந்து விடு. குழப்பம் இன்னும் முழுதும் ஆரம்பமாகவில்லை. பின்னால் ஒரு காலத்தில் சர்க்கார் கோர்ட்டு வரைக்கும் நாம் போகும்படியாக நேரும். அப்பொழுது இந்த—"

"நாகரத்தினம்! அதிகமாகப் பேசாதே! உனக்கு இந்த விஷயத்தில் தலையிடுவதற்கு எந்த உரிமையும் கிடையாது. தெரிந்ததா? நேற்று அவர் என்ன சொன்னார் நினைவு இருக்கிறதா?"

"நேற்றுத்தானே? சொன்னார் சோற்றுக்கு உப்பில்லை என்று! அவர்தான் மூர்க்கத்தனமாகப் பேசினார் என்றால்—"

"தம்பீ!" என்று ஆவேசமாகக் கூப்பிட்டுக் கொண்டே கட்டிலி லிருந்து எழுந்து உட்கார்ந்தாள் கல்யாணி. அவளுடைய கண்கள் சிவந்தன.

"தம்பீ! உன்னுடைய இட்டம் எல்லாம் புரிகிறது எனக்கு. தயவு செய்து நீ இங்கிருந்து போய் விடு. கண்டிப்பாகச் சொல்லுகிறேன். உனக்கு ஒரு அக்காள் இருக்கிறாள் என்பதையே இந்த நிமிஷத்திலிருந்து மறந்து விடு. வீண் வம்பை வளர்த்தாதே, போ!" என்றாள் கல்யாணி.

"அக்கா! நான் சொல்வதைக் கொஞ்சம் கேள், அக்கா!"

"நாகரத்தினம்! உன்னுடைய பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை. நீ போய்விடு. வீணாக என் மனசைப் பாழாக்காதே!"

"பாழாக்குவதா! பாழாக்குவது யார்? உன் மனசையும் உன் வாழ்வையும் பாழாக்குவது, பாழாக்கி விட்டிருப்பது நானில்லை அக்கா! உன்னை மனைவியென்று மாலையிட்டானே ஒரு மடையன், ஒரு அயோக்கியன், ஒரு—"

"நாகரத்தினம்!" என்று ஒரு கூப்பாடு போட்டுக் கொண்டே கட்டிலை விட்டு எழுந்து வர முயன்றான் கல்யாணி.

"கல்யாணி! நீ ஒன்றும் என்னை எழுந்து வந்து துரத்த வேண்டாம். நானே போய் விடுகிறேன். ஆனால் ஒரு எச்சரிக்கை மட்டும் செய்கிறேன். இது வரை—"

"தம்பி, உன்னுடைய எச்சரிக்கையொன்றும் எனக்கு வேண்டியதில்லை. இனிமேல் சுகமோ துக்கமோ அவரோடு பகிர்ந்து கொள்ளத் தெரியும் எனக்கு. ஒருநாள் உன்னிடம் அவரைப் பற்றி ஆவலாதி சொன்ன உரிமையில்தானே நீ இவ்வளவு தூரம் பேசுகிறாய். அது என்னுடைய தப்பு. அது என்னுடைய முட்டாள்தனம்!"

வெளியே கார் வந்து நின்ற ஓசை கேட்டது. அப்படியே பதறிப் போய் எழுந்து வந்து அறைக்கு வெளியே எட்டிப் பார்த்தான் நாகரத்தினம். ராமநாதன், அப்புலிங்கம், ரவீந்திரன் மூவரும் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.



நாகரத்தினத்துக்குக் கையும் காலும் பதறின. அப்படியே ஓட்டமும் நடையுமாக அந்த இடத்தை விட்டு அகன்றான் அவன்! பின்னால் ரவீந்திரன் அவனைத் துரத்திக் கொண்டு வந்தது தெரியும்; என்றாலும் திரும்பியே பார்க்கவில்லை. வராந்தாவில் தாவி, திருப்பத்திலே வளைந்து ஒரே வேகமாக ஆஸ்பத்திரியிலிருந்து 'விறு விறு' என்று வெளியே படர்ந்தான் நாகரத்தினம்.

புத்தி கொதித்தது. மனத்துக்குள்ளே இருந்த வேகம் பன்மடங்காக அதிகரித்தது. இது வரை கல்யாணிக்காக இந்த விஷயத்தில் பிரவேசித்தான். இனி?...

இனி, கல்யாணிக்காக இல்லை. தனக்காகவே, தன்னுடைய சுய கௌரவத்துக்காகவே முழுத் துணிவோடு தொடர்ந்து வேலை செய்வது என்று நிர்மாணித்தான் நாகரத்தினம். முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை. குப்புசாமி தனக்காக எத்தனை கஷ்டப்பட்டான்! உஸ்தாத் மீரான் தன்னை எத்தனை அவமரியாதையாகப் பேசி விட்டார்! கல்யாணி எத்தனை துச்சமாகத் தன்னைத் தூக்கி எறிந்து பேசினாள்! அத்தனைக்கு வந்துவிட்டதா? நான் என்ன அத்தனை இன்னுக்கிரையா? விஷயம் இவ்வளவு தூரம் முற்றிய பிறகு இனி விடுவதா? இரண்டில் ஒன்று பார்த்துத்தான் தீர்ப்பது! லால்குடி ஜவேஜு என்ன, தன்னுடைய உயிரே பணயம் ஆவதானாலும் சரி. இதற்கு இல்லாத உயிர் வேறு எதற்குத்தான் இருக்கிறது? தனக்கு என்ன பிள்ளையா, குட்டியா! ஒன்றும் இல்லை. நின்றவரைக்கும் நெடுஞ்சுவர், நிலை விழுந்தால் குட்டிச் சுவர்! இதற்காக இனிப் பயப்படப் போவதில்லை. பகீரான் இருக்கவே இருக்கிறான். பார்த்து விடலாம்!

இவ்வாறு யோசித்தவனாகப் பாலக் கரையைக் கடந்து, மணிக்கணக்காகப் பூட்டிக் கிடக்கும் அந்த ரயில்வே கேட்டைத் தாண்டி, ரஸ்தாவின் செங்குத்தான இறக்கத்திலே ஒரே வேகமாக நடந்து, பீம நாயகன் பாளையத்துக்கே வந்து சேர்ந்தான் நாகரத்தினம். அங்கே ராமாயணச் சாவடிச் சந்துக்கு அருகில் அக்பர் சதுக்கம் என்ற ஒரு சிறிய தோட்டத்தின் முனையிலே பகீரான் வீடு. அதை நோக்கி நடந்தான் அவன்.

"பகீரான் எத்தனை கெட்டிக்காரன்! எத்தனை பலசாலி! கேடயமும் 'கோப்ட்டா கத்தி'யும் இரண்டு கையிலும் பிடித்துக் கொண்டு கூட்டத்திலே பாய்ந்தான் என்றால், துப்பாக்கி கொண்டு சுட்டாலும் மேலே படாதே! அவனுடைய பலமும் சாமர்த்தியமும் யாருக்கு வரும்? உஸ்தாத் மீரானே பம்மிப் போக வேண்டியது தானே! மீரானுடைய பலம் எல்லாம் அந்தக் காலத்தோடு சரி. இப்பொழுது அவர் கிழட்டுப் புலி. கோபம் மட்டும் இருக்கிறது. உடம்பில் அத்தனை தெம்பு ஏது?"

இப்படி மனசுக்குள்ளே விமர்சனம் செய்து கொண்டு, பகீரானுடைய வீட்டுக்குள்ளே அடியெடுத்து வைத்தான் நாகரத்தினம்.

இதென்ன குரல்! யாரோ முனகுகிற மாதிரிக் கேட்டது. ஒருச்சாய்த்துச் சாத்தியிருந்த கதவின் இடுக்கு வழியாகக் குரல் வந்தது.

"ஜிகிஜம்! ஜிங்கிஜம்! ஜிகிஜாங்கிஜம்! ஜிம்! ஜிம்!! ஜிங்கிட ஜிம்!!! ஜிங்கிட

ஜிங்கிட ஜிம்!!!" என்று ஏதோ ஒரு மெதுவான குரலில் உச்சாடனம் கேட்டது! அது பகோரான் குரல்!

நாகரத்தினத்துக்கு அளவு கடந்த ஆச்சரியம் உண்டாயிற்று. காதுகள் இரண்டையுமே வெளியே எடுத்து ஒரு உதறு உதறுவது போலத் தலையை நன்றாகக் குலுக்கி விட்டுக் கொண்டு மீண்டும் ஒருமுறை கேட்டான்.

"இங்கே பார், தம்பீ! நான் சொல்லிக் கொடுத்த பாட்டைப் பிறகு பாடலாம். இப்பொழுது, இந்தக் கையைப் பார்! இதோ இந்த சோத்துக் கையை! இந்த உள்ளங் கையைப் பார்! இதையே பார்! கண்ணை மூடாதே தம்பீ. கண்ணை மூடாதே. அப்படியே இங்கே பார். எங்கே, ஜிகிஜும்! ஜிங்கிஜும்! ஜிகிஜாங்கிஜும்! ஜிம்! ஜிம்!! ஜிங்கிட ஜிம்!! ஜிங்கிட ஜிங்கிட ஜிம்!!!"

நாகரத்தினம் கதவின் இடுக்கு வழியாகக் கூர்ந்து பார்த்தான்.

பகோரானுடைய அறையில் சிங்கத்தின் தலை ஒன்று தெரிந்தது. அதற்கு அப்பால் ஒரு புலித் தலை. மான்களின் கொம்பு. சிறுத்தையின் உடம்பு முழுவதையும் உரித்துக் கொண்டு வந்து வைத்த நீளமான பயங்கரத் தோல். சுவரெல்லாம் படுதாக்கள்! ஒரு மூலையில் மனிதனின் மண்டை ஓடு. இன்னொரு பக்கம் எலும்புக் கூடு. ஓரத்தில் பயங்கரமான பிசாசு ஒன்று தலைவிரி கோலமாகக் கூத்தாடும் கோரமான படம்! ஒரு ஆந்தை கண்களை அப்படியே திறந்து நிக்கங்கைக் கொட்டுகிறது. ஒரு வேட்டை நாய் பசியும் மோப்பமும் பிடித்துத் தலையைத் தூக்கிக் கொண்டு கிடக்கிறது. அருகில் ஒரு பூதாகாரமான கழுகின் உடல். உள்ளே பஞ்சு திணித்துத்தான் வைத்திருக்கிறது. ஆனாலும் என்ன பயங்கரம்! என்ன பயங்கரம்!

வேறொருவருக்கு என்றால் மூச்சு நின்றே போயிருக்கும். நாகரத்தினத்துக்கு அப்படியா! அவனுடைய தலை குடை ராட்டுப் போல் 'கிர்' என்று சுற்றியது உண்மைதான். ஆனாலும் தான் வந்த நோக்கத்தில் உள்ள ருசி காரணமாக, குடை ராட்டைத் தாங்கிக்கொண்டு தான் அசையாமல் நிற்குமே மத்திக்கம்பம், அதைப் போல நின்றது நாகரத்தினத்தின் உறுதி! எதிரே தெரிந்த சிங்கமும், புலியும், ராட்டினத்திலே சுற்றும் பொம்மைகளைப் போலவே நாகரத்தினத்தின் நினைவிலே சுற்றின! ஒரு கணம் திறங்கி நின்றவன், அடுத்த வினாடி நிதானித்துக் கொண்டான், "பகோரான், மெஸ்மெரிஸம் செய்கிறான்!" என்று!

அறையின் மத்தியில் பூகோள உருண்டை ஒன்று நட்டமாக நின்றது. இந்த அகில உலகத்தையுமே தன்னுடைய ஒரு கையில் பிடித்து அமுக்குவதைப் போல இடது கையை அந்தப் பூகோள உருண்டையின் மேல் வைத்து அமுக்கிக் கொண்டு, வலது கையைச் சிறுவனை நோக்கி நீட்டியவாறு ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான் பகோரான். அவனுடைய உள்ளங் கையிலே பார்வையை நிறுத்திக் கண் இமைகளை மூடாமல் விழித்தவாறு நின்று கொண்டிருந்த சிறுவனுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தான் நாகரத்தினம். சிறுவனின் விழிகள் இறங்கியும் இறங்காமலும் ஒரு படியாகச் சொக்கி வந்து கொண்டிருந்தன! மாலை நேரத்தின் முடிவிலே, ஒளி விலகி இருள் கவிகிறதுக்கு முன்பு கொடி நேரத்திற்கு இருளும் ஒளியும் ஒன்றோடொன்று சங்கமிக்கும் அல்லவா? அதைப் போல நினைவின் உலகிலிருந்து ஏதோ ஒரு சொப்பன உலகிற்குச் செல்வதற்கு அறிகுறியாக அந்தச் சிறுவனுடைய விழிகள் நினைவும் மயக்கமும் சேர்ந்து கலந்த ஒரு ஈரடியான நிலையிலே மறுகி நின்றன.

"ஊம்! பாடு!" என்றான் பகோரான் அந்தப் பையனைப் பார்த்து. சிறுவன் பாட ஆரம்பித்தான்:

வண்டாடும் சோலையிலே—நீ
வந்து புனம் காக்கையிலே
பாடப் புகுவென்று—என் கண்ணம்மா
மதிமயங்கிப் போனேண்டி!

மலர் பூக்கும் சோலையிலே—நீ
வந்து புனம் காக்கையிலே
மயிலோ குயிலோவென்று—என் கண்ணம்மா
மதிமயங்கிப் போனேண்டி!

வாழைப் பழமே — என்
வைகாசி மாங்கனியே!
நீலக் கருங்குயிலே—என் கண்ணம்மா
நிலைமயங்கிப் போனேண்டி!

இப்படிப் பாடிக் கொண்டே மதிமயங்கி நிலை மயங்கிக் கீழே சாய்ந்தான் சிறுவன்!

நாகரத்தினம் இந்த பயங்கரமான காட்சியைக் கண்டு தன்னையும் மறந்து சற்றுப் பின் வாங்கினான்! அடுத்த வினாடி, "ஜிகிஜும்! ஜிங்கிஜும்! ஜிகிஜாங்கிஜும்!" என்ற அந்த உச்சாடனத்தைத் தானும் முன் ஜாக்கிரதையோடு மனத்துக்குள் சொல்லிக் கொண்டே மெதுவாக நிதானத்தோடு அறையினுள்ளே நுழைந்தான் நாகரத்தினம்! (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram

இரவு, பகல் நேரங்களில் சருமத்தைப் பாதுகாக்கும் சாதாரண முறையேதான் உங்கள் வதனத்தை அழகாயும் நேர்த்தியாயும் வைக்கிறது

இருவித ஆச்சரியமான க்ரீம்கள்—பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் மற்றும் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்...உங்களுடைய பூரணப் பொலிவின் பாதுகாப்பு சாதனங்கள்

ஒவ்வொரு இரவிலும் சுத்தப்படுத்தவும் மென்மையாக்கவும் ஏற்பட்டது

பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் ஒரு ஆச்சரியமான சுத்திகரிப்பு சாதனம். நீங்கள் படுக்கப் போகுமுன் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உபயோகிக்கவும். சருமத்திலுள்ள துவாரங்கள் அளவுக்கு மீறி அகன்று கொடுக்காமல் பாதுகாக்கும். உங்கள் சருமத்தை நேர்த்தியான முறையில் சுத்தமாக்கி, மாசு இன்றிச் செய்கிறது.

பாண்ட்ஸ் க்ரீம் உபயோகித்த சில செகண்டுகளில் உங்கள் சருமத்திற்கு புத்துணர்ச்சி கொடுக்கிறது. இயற்கையான எண்ணெய்ச் சத்து அளித்து வரட்சியை நீக்கி உங்கள் சருமத்திற்கு யௌவனத்தையும் வனப்பையும் அளிக்க உதவுகிறது.

பகலில் பாதுகாப்பிற்கும், சௌந்தரியத்திற்கும் ஏற்பட்டது

பிசுபிசுப்பில்லாத நேர்த்தியான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமின் ஒரு லேசான பூச்சு பகலில் உங்கள் சௌந்தரியத்தை அதிகப்படுத்துகிறது. உங்கள் வதனத்தை அழகாயும் நேர்த்தியாயும் தோன்றச் செய்கிறது. சருமத்திற்கு வைரியான தூசி, வெயில் மற்றும் வரட்சிகரமான காற்று முதலியவற்றின் தாக்குதலிலிருந்து காப்பாற்றுகிறது.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் அதிகப்படியான எண்ணெய் தோய்ந்த சருமத்திற்கு ஆச்சரியமான குணமளிக்கும் சாதனம். அதிகப்படி எண்ணெய்ச் சிக்குள்ள மடிந்த தோலின் பாகங்கள், சருமத்தின் துவாரங்களை அடைத்து தேமல் போன்ற திட்டுகளை உண்டாக்கும். இதையும் அதிகமான எண்ணெய்ச் சத்துக்களையும் நீக்குகிறது. ஆகையால் உங்கள் சருமம் பார்க்க சுத்தமாயும் பிரகாசமாயும் தோன்றுகிறது.





அழகிகளென்று பெயரெடுத்திருப்பவர்களனைவரும் தங்கள் சௌந்தரியத்திற்கு இச்சுலபமான இருவித பாதுகாப்பையே நம்பியுள்ளனர். அவர்களுடைய உதாரணத்தையே நீங்களும் பின்பற்றுங்கள். இரவில் பாண்ட்ஸ் கோல்டு க்ரீமும் பகலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமையும் உபயோகியுங்கள். விரைவிலேயே உங்கள் பிரகாசமான அழகிய வதனத்தைக் கண்டு நீங்களே குதூகலப்படுவீர்கள்.

பாண்ட்ஸ்

கோல்டு க்ரீம்

வானிஷிங் க்ரீம்

P. 1632

Registered No. M. 4392
Registered as newspaper in Ceylon